# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 15 சனிக்கிழமை (31.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 035




19 "தானே" புயல் தமிழகத்தில் கோரத்தாண்டவம்



20 யாழ். பல்கலை அணி தொடர்ந்து முதலிடத்தில்



21 மறக்க முடியாது

# நியாயமான, நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வே தமிழரின் தேவை

## அரசும் நிலைமையை உணர்ந்து நேர்மையாக செயற்பட முன்வரவேண்டும் என்கிறார் சம்பந்தன்



– திருமலையிலிருந்து எமது செய்தியாளர் இரா.புத்திரசிகாமணி –

திருகோணமலை, டிசெம்பர் 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் தொடர்ந்து நடத்திவரும் பேச்சுக்களில் மிகவும் நிதானமாகவும் பக்குவமாகவும் நடந்து வருகிறது. நாம் ஒன்றும் புதிதாக கேட்கவில்லை. ஏற்கனவே பல தடவை முன்வைத்த விடயங்களையே வலியுறுத்தி வருகிறோம். அதன் அடிப்படையில் நியாயமான, என்றும் நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம். அதுவே தமிழ் மக்களின் அபிலாஷை, எதிர்பார்ப்பு எல்லாம்.

இந்த யதார்த்தமான நிலைமையை உணர்ந்து அரசும் நேர்மையாகச் செயற்பட முன்வரவேண்டும். இதன்மூலம் தமிழ் மக்கள் மட்டுமல்ல அனைத்து இன மக்களும் நன்மையடைவார்கள் அரசியல் தீர்வுதான் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் வழிவகுக்கும்.

பக் 23

## புயல் அபாயம் நீங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 31

'தானே' புயல் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்தியாவின் தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் ஊடாக கரையைக் கடந்துள்ளது. இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில் புயல் அபாயம் நீங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புயல் அபாயம் நீங்கியுள்ளதை அடுத்து மீனவர்கள் கடல் தொழிலுக்குச் செல்ல முடியும் என்று பேரிடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணத்தின் வடகிழக்காகக் கடலில் நிலைகொண்டிருந்தது 'தானே' புயல். இதனால் சில தினங்களாக புயல் குறித்த அபாய அறிவிப்புகள் விடுக்கப்பட்டதுடன் மீனவர்களும் தொழிலுக்குச் செல்லவில்லை.

இந்தப் புயலின் அபா

பக் 23

## மர்மப் பொருள் வெடித்து தாயும் மகனும் காயம்

வடமராட்சி, டிசெ.31

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் தாயும், மகனும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் துன்னாலை தெற்கு குடத்தனைப் பகுதியைச்சேர்ந்த தாயான திருமதி ராசகுலசிங்கம் தங்கமலர் (வயது-33), மகனான ரா.கரிகரன் (வயது-09) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

குறித்த நபர்கள் அப்பகுதியில் விறகு வெட்டச் சென்ற போது மர்மப் பொருள் ஒன்றை எடுத்து கையாள முற்பட்ட வேளையிலேயே அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் காயமடைந்த இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-319-236)

## முஷ்டியை முறுக்கிக் கொண்டு ஆளும் உறுப்பினர்கள் மோதல்

### யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் களேபரம்



யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் இருவர் நேற்றுத் தம்மிடையே முஷ்டியை முறுக்கிக் கொண்டு மோதுவதற்குத் தயாரானார்கள். இதனைப் பார்த்து பாய்ந்து வந்த பொலிஸார், இருவரையும் மடக்கி மோதலைத் தவிர்த்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று மாநகரச்சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பெரும் களேபரம் ஏற்பட்டது. இந்த நிலை சில நிமிட நேரம் நீடித்தது.

மாநகரசபையின்ஆளும் கட்சி உறுப்பினர்களான எஸ்.நிஷாந்தன் மற்றும் எம்.விஜயகாந் ஆகியோரே தம்மிடையே மோதிக் கொள்வதற்குத் தயாரானவர்களாவர்.

இருவருக்கிடையில் ஆரம்பமான வாக்குவாதம் பின்னர் மோதலாக மாறும் நிலையை அடைந்தது. இருவரும் தமக்குக் கையில் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு மோதுவதற்காக நெருங்கி வந்தனர். உடனடியாக இடையே பாய்ந்த பொலிஸார் இருவரையும் மடக்கிப் பிடித்து மோதலைத் தவிர்த்தனர்.

மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் ஆரம்பமானது.

'நெல்சிப்' திட்டத்தின் கீழான வீதிகள் புனரமைப்புத் தொடர்பான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இந்த வேளையில் ஆளும் கட்சி உறுப்பினரான மனுவல் மங்களநேசன் அரியாலை 10ஆம், 11ஆம், 13ஆம் வட்டாரங்களில் உள்ள வீதிகள் திருத்தம் குறித்துக் கவனிக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தினார்.

இதனையடுத்து ஆளும் கட்சி உறுப்பினர் எம்.விஜயகாந்துக்கும் மங்களநேசனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. விஜயகாந் தனது இருக்கையில் இருந்து எழுந்து மங்களநேசனை நோக்கிச் சென்றார். இதன்போது குறுக்கிட்ட நிஷாந்தன் "இங்கு முதல்வர் யோகேஸ்வரியா? விஜயகாந்தா?" என்று கேள்வி கேட்டுச் சீறினார்.

இதனைத் தொடர்ந்து விஜயகாந் சக உறுப்பினரான நிஷாந்தனை நோக்கிச் சென்று அவரைத் தாக்க முனைந்தார். பதிலுக்கு நிஷாந்

பக் 23

## யாழ். வருகிறார் அப்துல் கலாம்



யாழ்ப்பாணம், டிசெ. 31

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் தமிழகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற விஞ்ஞானியுமான அப்துல்கலாம் ஜனவரி மாதம் மூன்றாம் வாரத்தில் யாழ்ப்பாணம் வரவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை இந்தியத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

ஜனவரி 22 அல்லது 23 ஆம் திகதியில் யாழ்ப்பாணம் வரும் கலாம் யாழ். பல்கலைக்கழகத்தில் உரையாற்ற உள்ளார். பின்னர் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் வருகைதரவுள்ள அவர், அங்கும் மாணவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

கலாம் யாழ்ப்பாணம் வருவதை உறுதி செய்தது இந்தியத் தூதரகம். அவரது வருகையின்போதான நிகழ்ச்சி நிரலில் யாழ்ப்பாணத்தில் இந்த மூன்று விடயங்களுமே இப்போதைக்குத் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தது. (உ)

## 15,000 பட்டதாரிகளுக்கு விரைவில் வேலை

கொழும்பு, டிசெ. 31

அரச சேவையில் 15,000 பட்டதாரிகளை உடனடியாக உள்வாங்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற உரையாற்றுகையில் ஜனாதிபதி இந்தத் தகவலைத்

பக் 24

## 'தானே'க்கு 19 பேர் சாவு

சென்னை, டிசெ. 31

வங்காள விரிகுடா கடலில் மையம் கொண்ட 'தானே' சூறாவளி நேற்றுத் தமிழகத்தில் கரையைக் கடந்தது. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் கடலில் காணாமல் போயுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள், 'தானே' சூறாவளியில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக கரையோரக் காவல் படையினர் தெரிவிக்கின்றனர். *(முன்னர் வந்த செய்தி 19ஆம் பக்கத்தில்)* (உ)

## பிரதி முதல்வராக மொஹமட் ரமீஸ்

*யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வராக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த சட்டத்தரணி மொஹமட் ரமீஸ் நியமிக்கப்படவுள்ளார் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.*

*பிரதி மேயராக இருந்த ஈ.பி.டி.பியைச் சேர்ந்த இளங்கோ (றீகன்) இராஜினாமா செய்ததை அடுத்தே இப்பதவிக்கு மொஹமட் ரமீஸ் நியமிக்கப்படவுள்ளார்.*


*யாழ். மாநகரசபைத் தேர்தலின்போது ஈ.பி.டி.பியும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாகவே இந்நியமனம் வழங்கப்படவுள்ளது என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறினார்.* (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானிலை மேகமூட்டத்துடன் நிலவும் சாத்தியம் உள்ளது.

# பலாலி கலாசாலையை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்தால் நாடு முழுவதும் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 31

பலாலி ஆசிரியர் கலாசாலையைப் பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்தால் நாடளாவிய ரீதியில் போராட்டம் வெடிக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு கல்வியியலாளர்களும், ஆசிரியர் தொழிற் சங்கங்களும் குரல்கொடுக்க வேண்டும் எனவும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பலாலி ஆசிரியர் கலாசாலைக் காணியும் கட்டடத் தொகுதியும் உள்ளடங்கிய வளாகம் கல்வி அமைச்சினால் பாதுகாப்பு அமைச்சுக்குக் கையளிக்கப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியாகத் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களுக்கு இந்தக் கலாசாலை விசேட பயிற்சியளித்து வந்தது. தற்போது பலாலி ஆசிரியர் கலாசாலை அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் திருநெல்வேலியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது.

போர் நிறைவுக்கு வந்த பின்னராவது கலாசாலை சொந்த இடத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்ற நம்பிக்கை கல்விச் சமூகத்திடம் இருந்தது.

இந்த நம்பிக்கையைத் தவிடு பொடியாக்கும் வகையில் பலாலி கலாசாலையை கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சுக்குக் கையளிக்கவுள்ளது. இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. கலாசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கு கல்வி அதிகாரிகள், ஆசிரியர் தொழிற் சங்கங்கள், ஆசிரியர்கள் ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டும்.

இதனைப் பாதுகாப்பு அமைச்சுக்கு கையளித்தால் நாடுமுழுவதும் கல்வியாளர்களை ஒன்று திரட்டிப் பெரும் போராட்டம் செய்வோம் - என்று தெரிவிக்கப்பட்டது. (த-14)

# வங்கி வாடிக்கையாளர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.31

நெடுந்தீவு இலங்கை வங்கியில் பணத்தை எடுக்கச் சென்ற வாடிக்கையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

புதுவருடத்தை முன்னிட்டு தமக்கு வேண்டிய பொருள்களைக் கொள்வனவு செய்யத் தேவையான பணத்தை வங்கியில் இருந்து எடுக்க நேற்றும், நேற்று முன்தினமும் மக்கள் இலங்கை வங்கிக்குச் சென்றனர். இதன் போதே ஏமாற்ற மடைந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் மின்சார சபைக்குச் செலுத்துவதற்கான பணத்தை வங்கி மூலம் அனுப்பும்போது அது தாமதமாகச் செல்வதாகவும், தபாலகத்தினூடாக அனுப்பும்போது விரைவில் அனுப்பப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-7)

# ஆரம்ப சுகாதார நிலையத்தில் 'ஆமி' விசுவமடுவில் கர்ப்பிணிகள் விசனம்

கிளிநொச்சி, டிசெ. 31

விசுவமடு கிழக்கிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ளதால், பொது மக்களுக்கு குறிப்பாகக் கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும் திருப்திகரமான சேவையை வழங்கமுடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொந்தக் கட்டடத்தில் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் ஆரம்ப சுகாதார நிலையம் தற்பொழுது தனியார் வீடுகளில் மாறி மாறி இயங்கி வருகின்றது. எனவே கர்ப்பவதிகளின் நலன் கருதி மேற்படி நிலையத்தில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படையினரை வேறு இடத்துக்கு மாற்றுமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவுமாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்பொழுது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வசதியீனங்கள் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தப் பிரதேசத்திலுள்ள விசுவமடு கிழக்கில் கர்ப்பிணிகள், குழந்தைகளின் நலன் கருதி அமைக்கப்பட்டிருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாதுகாப்புப் படையினர் பல மாதங்களாக நிலை கொண்டுள்ளனர். இதனால் மக்களுக்குச் சேவை செய்து வந்த மேற்படி நிலையம் தனியார் காணிகளில் இயங்கி வருகிறது. இவர்களுக்கு வழங்குவதற்காக அரசினால் வழங்கப்பட்டுள்ள சத்துணவு உட்பட ஏனைய பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இடமில்லாமல் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் திண்டாடுகிறார்கள்.

கிளினிக் நாள்களில் இந்தப் பொருள்களைச் சேவை நடைபெறும் நிலையத்துக்குக் காவிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த நிலையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புப் படையினரைப் பொருத்தமான இடத்துக்கு மாற்றுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் உயரதிகாரிகளைக் கோரியுள்ளனர்.(த-115)

# அடித்து ஓய்ந்த புயலுக்கு பெயர் சூட்டியது மியன்மார்

இந்தியாவின் தமிழ்நாட்டைக் குறிவைத்து நேற்றுமுன்தினம் தாக்கிய புயலுக்கு 'தானே' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தப் பெயரை மியன்மார் சூட்டியுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் வங்கக்கடல் புயல்களுக்குப் பெயர் சூட்டப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வங்கக் கடல் மற்றும் அரபிக்கடலில் உருவாகும் புயல்களுக்கு இந்தியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் ஒன்று சேர்ந்து பெயர் வைக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இந்தப் பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்க தேசம், மாலைதீவு, மியன்மார், ஏமன், தாய்லாந்து ஆகிய 8 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. வங்கக்கடல், அரபிக்கடலில் உருவாகும் புயல்களுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதை இந்த 8 நாடுகளும் பட்டியலாகத் தயாரித்துக் கொடுத்துள்ளன. அந்தப் பட்டியலில் உள்ள பெயர்கள்தான் ஒவ்வொன்றாகப் புயல்களுக்குச் சூட்டப்படுகின்றன.

கடந்த ஆண்டு 5தடவை புயல் ஏற்பட்டது. அந்தப் புயல்களுக்குப் பட்டியலில் உள்ள வரிசைப்படி லைலா, பந்து, பெட், கிரி, ஜல் என்று பெயரிடப்பட்டன. இதில் லைலா பெயரை பாகிஸ்தான், பந்து பெயரை இலங்கை, பெட் பெயரைத் தாய்லாந்து, கிரி பெயரை வங்க தேசம், ஜல் பெயரை இந்தியா தெரிவு செய்து கொடுத்திருந்தன. இதில் லைலா, ஜல் இரு புயல்களும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த ஆண்டு கடந்த ஒக்ரோபர் மாதம்தான் முதல் புயல் தோன்றியது. அந்தப் புயலுக்கு மாலைதீவு தெரிவு செய்து கொடுத்திருந்த கெய்லா என்ற பெயர் சூட்டப்பட்டது. இதையடுத்து இந்த ஆண்டு இரண்டாவதாகத் தற்போதைய புயல் தமிழ்நாட்டைக் குறி வைத்து வந்தது. இந்தப் புயலுக்குப் பட்டியலில் உள்ள பெயர்களில் இருந்து 'தானே' என்ற பெயர் தெரிவு செய்து சூட்டப்பட்டுள்ளது.

இந்தத் 'தானே' பெயரை வழங்கியது மியன்மார் நாடாகும். மியன்மார் நாட்டின் ஜோதிடவியல் நிபுணர் மின் தானே கா பெயரைக் குறிப்பிடும் வகையில் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரிசையில் அடுத்தடுத்து வரும் புயல்களுக்கு முர்ஜன் (ஓமன்), நீலம் (பாகிஸ்தான்), மகசென் (இலங்கை), பைலின் (தாய்லாந்து), ஹெலன் (வங்க தேசம்), லெகர் (இந்தியா) என்று பெயர்கள் சூட்டப்பட உள்ளன.

# பிரதேச சபை உறுப்பினர் கடத்தப்பட்டுக் கொலை

கொழும்பு, டிசெ.31

கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட பிரதே சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் இந்திக்க சந்திரசிறி என்பவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட இந்திக்க, கொடூரமான முறையில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்றும் மினுவாங்கொட கொட்டாதெனிய மாவுஸ்ஸா என்னும் இடத்தில் அவரின் உடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையுண்ட இந்திக்க சந்திரசிறி பெண் ஒருவரை கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தக்கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த இந்திக்க ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். (உ)

# கிரேரு மீது நடவடிக்கை எடுக்க ஐ.தே.க.வுக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, டிசெ.31

கட்சித்தாவிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேருவை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்குதல் மற்றும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கைகளைத் தடை செய்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மொஹான் லால் கிரேருவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிபதி ரஞ்சித் வட்டுபொல, இந்த இடைக்காலத் தடை உத்தரவை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை பிறப்பித்துள்ளார்.

அன்றையதினம் மனு தொடர்பில் விளக்கமளிக்குமாறு மனுவின் பிரதிவாதிகளான ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்டவர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

தன்னிடம் கருத்துக் கேட்காமல் தன்னை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மொஹான் லால் கிரேரு தனது மனுவில் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# எழுதுமட்டுவாழ் கணேசா வி. திங்கள் முதல் இயங்கவுள்ளது

எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலயம் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் நாளை மறுதினம் திங்கள் முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் வெளியேறியதை அடுத்து பாடசாலை மூடப்பட்டது. அண்மையில் எழுதுமட்டு வாழ் தெற்குப் பகுதியில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட போது பாடசாலைக் கட்டடங்கள் முற்றாகச் தேசமடைந்து காணப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் தற்காலிக வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டதையடுத்து முதலாம் தவணை கல்வி ஆண்டு ஆரம்ப தினமான நாளை மறுதினம் பாடசாலை இயங்குமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (எ-207)

# நிகழ்வுகள் இன்று

**நன்றி வழிபாடுகள்**

ஆண்டின் இறுதி நாள் நன்றி கூறும் வழிபாடுகள் அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் இடம்பெறவுள்ளது. இதில் யாழ். மரியன்னை பேராலயம், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம், ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம் ஆகியவற்றில் மாலை 5.30 மணிக்கு விசேட வழிபாட்டுப் பிரார்த்தனைகள் இடம் பெறவுள்ளன. (த-313)

**ஒன்றுகூடல்**

யாழ். கல்வி வலயத்தின் நலன்புரி கழக வருடாந்த ஒன்றுகூடல் முற்பகல் 10 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**மீளக்குடியேற்ற கூட்டம்**

வலி.வடக்கு வசாவிளான் கிராம சேவையாளர் பிரிவு ஜே/245, ஜே/244 ஆகியவற்றில் மீளக் குடியேற்றம் மற்றும் மீளக்குடியேற்றக் குழுத் தெரிவு செய்வதற்கான கூட்டம் முற்பகல் 10 மணிக்கு வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கும் 'அக்றிக்கோ'வின் ஒப்பந்தம் நீடிப்பு

## அமைச்சரவை அனுமதி அளித்தது

கொழும்பு, டிசெ. 31

யாழ். குடாநாட்டுக்குத் தற்போது மின்சார விநியோகத்தை மேற்கொண்டுவரும் நிலையங்களில் ஒன்றான 'அக்றிக்கோ' நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை மின்சக்தி எரிசக்தி அமைச்சு மேலும் ஒரு வருடத்துக்கு நீடித்துள்ளது.

இது தொடர்பாக மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குடாநாட்டு மின்விநியோகத்துக்கென 'அக்றிக்கோ' நிறுவனம் மின்சார சபைக்குத் தற்போது 15 மெகா வாட்ஸ் மின்சாரத்தை வழங்கி வருகிறது. அதன் ஒப்பந்த காலம் இன்று 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. 'அக்றிக்கோ' நிறுவனம் மின் அலகு ஒன்றை 26 ரூபா 12 சதத்துக்கு மின்சார சபைக்கு வழங்கி வருகிறது.

வவுனியாவில் இருந்து சுன்னாகம் வரையான மின் விநியோகத்தை சீரமைக்கும் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. அது நிறைவு பெற இன்னும் ஒரு வருடம் செல்லும். இதன் காரணமாகவே குடாநாட்டில் மின் விநியோகத்தில் தளர்வில்லாமல் இருப்பதற்காக 'அக்றிக்கோ'வின் ஒப்பந்த காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடித்துள்ளது மின்சக்தி அமைச்சு.

'அக்றிக்கோ' நிறுவனம் தற்போது வழங்கி வரும் 15 மெகா வாட்ஸ் மின்சாரத்துக்கு மேலதிகமாக அந்த நிறுவனத்திடம் இருந்து 5 மெகா வாட்ஸ் மின்சாரத்தைப் பெறுவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# தமிழருக்கு அதிகாரப்பகிர்வு அவசியம் அரச தரப்பிலும் வலுக்கின்றது ஆதரவு

கொழும்பு, டிசெ. 31

தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என அரசதரப்புக்குள் இருந்தும் ஆதரவுக் குரல்கள் அதிகரித்து வருகின்றன. காணி, பொலிஸ் அதிகாரங்களின் அவசியத்தை வலியுறுத்தி மூத்த அமைச்சர் திஸ்ஸவிதாரண நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், மற்றுமொரு அமைச்சர் குணரட்ன வீரக்கோனும் தமிழருக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோல், அரசுடன்இணைந்து செயற்படும் முஸ்லிம் காங்கிரஸார், நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் ஆகியோரும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமெனத் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இது அடிமட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். இதுவே எனது உறுதியான நிலைப்பாடு.

- இவ்வாறு மீள்குடியேற்றத் துறை அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

எடுத்த எடுப்பில் எவராலும் சிகரத்தைத் தொட்டுவிட முடியாது. படிப்படியாகத்தான் நகர வேண்டும். அதேபோன்றுதான் அரசு கொடுக்க நினைக்கும் அதிகாரங்களை முதலில் பெற்றுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அடுத்த கட்டத்தை நோக்கி அரசியல் நகர்வை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு எவ்வாறானதொரு தீர்வுத்திட்டம் அவசியம் என அரசோ, கூட்டமைப்போ தீர்மானிப்பது சிறந்ததாக அமையாது. அதனை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதே தமது கருத்து என்றும், மக்களின் நிலைப்பாட்டை அறிய வட மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அரசியல் தீர்வுத்திட்ட விவகாரம் தொடர்பில் 'உதயனு'க்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் வீரக்கோன் மேலும் கூறியவை வருமாறு:-

மீள்குடியேற்றத்தை முழுமைப் படுத்துவதே எனது முதல் இலக்கு. எனது வெளிநாட்டு விஜயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியையும் நான் மக்கள் நலத்திட்டங்களுக்காகப் பயன்படுத்துகின்றேன்.

அரசு பேச்சுக் குழுவொன்றை அமைத்து அதனூடாக இராஜதந்திர ரீதியில் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துகின்றது. பேச்சு தொடர்பான கருத்துகளை அவர்களே வெளியிடவேண்டும். இருந்தாலும், எனது தனிப்பட்ட கருத்துகளை நான் தெரிவிக்கின்றேன். தமிழர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதுதான் எனது உறுதியான நிலைப்பாடு. ஆனாலும், அமைச்சர் என்ற வகையில் அரசின் கருத்துகளுக்கும் செவிசாய்க்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர். அவர்களுக்குத் தற்போது விடிவு கிட்டியுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் அரசு கொடுக்க நினைப்பதைப் பெற்றுக்கொண்டு ஏனைய உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழ்க் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக, அடம்பிடித்தால் பிரச்சினை தீராது. பட்டினியால் வாடுபவனுக்கு கஞ்சி கொடுக்கும்போது அவன் சோறு கேட்டு அடம்பிடிக்கக்கூடாது. கொடுப்பதை வாங்கிக்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு மக்களுக்கு எவ்வாறானதொரு தீர்வு அவசியம் என்பதைக் கேட்டறிய வேண்டும். அதற்கு சிறந்ததொரு வாய்ப்பு மாகாணசபைத் தேர்தலாகும். தேர்தல் மூலம் மக்கள் தமது நிலைப்பாட்டை அறிவிப்பர் - என்றார். (ஒ-சி)

# புத்தூர் பிரதேச சபையின் அனுமதியுடன் மயானத்தில் விளையாட்டு மைதானம்

## தகனம் செய்யச் செல்வோர் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ.31

சுன்னாகம் புத்தூர் வீதியில் அமைந்துள்ள கிந்துசிட்டி இந்து மயானக் காணியினை புத்தூர் வடக்கு வளர்மதி விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவது குறித்த மயானத்தைப் பயன்படுத்துவோரில் ஒரு பகுதியினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். தகனக்கிரியைகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்தஇந்துமயானக்காணியை புத்தூர் பிரதேச சபைத் தலைவரின் அனுமதியுடனேவிளையாட்டுக் கழகத்தினர் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மயானத்தில் தகனக்கிரியைகள் மேற்கொள்வோர் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-313)

# தலைவர் பிரபாகரனின் மெய்க்காவலர் நீதிமன்றில்

புலிகளின் இயக்க, தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பாதுகாப்பு பிரிவுப் பொறுப்பாளராகச் செயற்பட்டவர் எனப் பொலிஸார் கூறும் மண்ணிலவன் என்பவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் வெளிநாட்டவர்களிடம் பயிற்சி பெற்றிருந்தார் என்று குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தேகநபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை பூசா முகாமில் தடுத்து வைக்குமாறு கொழும்பு நீதிபதி உத்தரவிட்டார். (உ)

# உயர்தரப் பெறுபேறு; விசாரணைக்குக் குழு

கொழும்பு, டிசெ. 31

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட குளறுபடிகள் மற்றும் மாணவர்களின் மாவட்ட நிலைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து விசாரணை செய்வதற்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவினை அடுத்து இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

குழுவில் மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், ஓய்வுபெற்ற நீதிபதி ஆகியோர் அடங்கியுள்ளனர். இந்தக் குழுவினர் தேசிய கல்விக் கொள்கை மற்றும் பரீட்சைகள் சட்டம் என்பவற்றை மீளாய்வு செய்ய உள்ளனர்.

உயர்தரப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டது முதலே, சில தரப்பினர் அதனைக் குழப்புவதற்கான சதியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, தற்போது வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில், உயர் தரப்பரீட்சை எழுதிய மாணவர்களில் 60 சதவீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார். நாடு முழுவதும் 3,687 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இந்த வருடம் [illegible] 39, 624 மாணவர்கள் [illegible] பரீட்சை எழுதியிருந்தனர். (உ)

# ரஹ்மானின் வருகை வெறும் கட்டுக்கதை

யாழ்ப்பாணம், டிசெ. 31

ரஹ்மான் யாழ். வருகிறார் என்று வெளியான செய்திகள் வெறும் புரளி என்று அவரே தெரிவித்திருக்கிறார்.

தைப்பொங்கலையொட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக, இரு 'ஆஸ்கார்' விருதுகளை வென்ற இசைப் புயல் ஏ.ஆர்.ரஹ்மான் வருகை தரவுள்ளார் என்று நேற்று செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் ரஹ்மானின் முகாமையாளருடன் உதயன் தொடர்பு கொண்டு கேட்டபோது அப்படிப்பட்ட எந்த ஏற்பாடும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து நேற்றிரவு மின்னஞ்சல் மூலம் இது தொடர்பிலான ரஹ்மானின் செய்தியையும் அவர் அனுப்பி வைத்திருந்தார்.

அதில், யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சி நடத்துவது தொடர்பில் எந்த ஒரு நிறுவனமும் தன்னுடன் தொடர்புகொள்ளவில்லை என்றும் அத்தகைய எந்தவொரு நிகழ்விலும் கலந்துகொள்வதாக யாருக்கும் தான் வாக்குறுதி அளிக்கவில்லை என்றும் இப்போதைக்கு இலங்கையில் நடக்கும் எந்தவொரு நிகழ்விலும் கலந்துகொள்ளும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈழத் தமிழ் மக்களுக்குத் தனது புத்தாண்டு வாழ்த்தையும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# கலை பண்பாட்டு விழா

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் மாபெரும் கலை பண்பாட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இசை, நாட்டியம், கவியரங்கம், பட்டிமன்றம் [illegible] நடைபெறவுள்ளது. (எ)

# கடத்தப்பட்ட வர்த்தகர் சடலமாக நேற்று மீட்பு

கொழும்பு, டிசெ. 31

கடந்த புதன்கிழமை இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்ட மீன் வர்த்தகரின் சடலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கொழும்பு புறநகர் பகுதியான தொட்டலங்கவில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவர் இறந்த நிலையில் கிடப்பதைக் கண்டு இரவு 8.30 மணியளவில் பிரதேசவாசிகள் கிரேண்ட்பாஸ் பொலிஸாருக்கு அறிவித்தனர். இதையடுத்து சடலம் மீட்கப்பட்டது. கொல்லப்பட்ட பின்னர் சடலம் அந்தப் பகுதியில் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

36 வயதான ராஜேந்திரன் முரளிதரன் என்பவரே கடத்தப்பட்டு இப்போது சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் ஓட்டோவில் சென்று கொண்டிருந்தபோது, மோதரை பெர்ணான்டோ மாவத்தையில் வைத்து கடத்தப்பட்டிருந்தார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

மாதம் ஒறுகொடவத்தை பிரதேசத்தில் இராணுவ சீருடை அணிந்து வந்தவர்களால் மீன் வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டிருந்தார். கடுமையாகத் தாக்கி அவரிடம் இருந்த பணத்தைக் கொள்ளையடித்த பின்னர் கடதல்காரர்கள் அவரை விட்டுச் சென்றிருந்தனர். (உ)

# முன்னாள் போராளிகள் மேலும் ஒரு தொகுதியினர் ஜன. 22 இல் விடுதலை

கொழும்பு, டிசெ. 31

புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முன்னாள் போராளிகளுள் மேலும் ஒரு தொகுதியினர் ஜனவரி மாதம் 22ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளனர்.

இவர்களை பெற்றோர், உறவினர்களிடம் ஒப்படைக்கும் வைபவம் மட்டக்களப்பு நகர சபை மண்டபத்தில் இடம்பெறும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஷ்குமார் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்குப்புனர்வாழ்வுஆணையாளர் நாயகம் உட்பட சில முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். சுமார் 70 முன்னாள் போராளிகள் அன்றைய தினம் விடுவிக்கப்படவுள்ளனர். (ஒ-சி)

# காதலியைச் சுட்டுக்கொன்ற கொன்ஸ்டபிள் தற்கொலை

கொழும்பு, டிசெ. 31

தன்னுடைய காதலியைச் சுட்டுக் கொன்றார் என்று குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் பின்னர் தற்கொலை செய்து கொண்டார் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மதுரன்குளி பகுதியில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

சம்பவத்தில் 21 வயது யுவதியும், 23 வயது பொலிஸ் கான்ஸ்டபிளும் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள். காதல் விவகாரமே சம்பவத்திற்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். கொல்லப்பட்ட இளம் பெண் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றிருந்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 120 மருத்துவர் பணிக்கு தயாரான போதும் கிளிநொச்சிக்கு எந்தவித பயனுமில்லை

## பிரதி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.31

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நூற்றி இருபதுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மேல்படிப்புக்களை நிறைவு செய்து வெளியேறியுள்ள போதும் மாவட்டத்தின் மருத்துவர் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகின்றது என கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார வைத்திய அதிகாரி பா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த வைத்திய அதிகாரி:

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆறு சுற்றயல் கூற்று மருத்துவமனைகளுக்குரிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்போதிலும் அவர்கள் மருத்துவமனைகளைப் பொறுப்பேற்கவில்லை. தற்போது வட்டக்கச்சி, கண்டாவளை, அக்கராயன்குளம் ஆகிய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 1983 ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலப்பகுதியில் இற்றைவரை சுமார் 120 இக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் தமது கல்வியை முடித்து வெளியேறி வேறுமாவட்டங்களில் சேவையாற்றுகின்றனர்.

ஆனால் எமது மாவட்டத்தில் மருத்துவர் பற்றாக்குறை நிலவுகின்றது. தற்போது வட்டக்கச்சி, அக்கராயன்குளம் ஆகிய மருத்துவமனைகளில் மருத்துவர் இல்லாதநிலையில் நடமாடும் மருத்துவ சேவைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அக்கராயன்குளம், வட்டக்கச்சி ஆகிய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாததால் இந்தப் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் கண்டாவளைப் பிரதேச மருத்துவமனை இதுவரை இயங்கத் தொடங்காததால் கண்டாவளை, புளியம்பொக்கணை, முரசுமோட்டை போன்ற பகுதிகளில் வாழும் சுமார் 500 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது மருத்துவ தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. (க-6)

# 600 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

## துணுக்காய்ப் பிரதேச செயலர் கூறுகிறார்

அக்கராயன், டிசெ.31

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 600 குடும்பங்கள் வெள்ளப்பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 450 குடும்பங்களுக்கு இதுவரை முல்லைத்தீவு அரச செயலகத்தால் உலர் உணவுப் பொருள்கள், நுளம்பு வலைகள், பாய்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

மேலும் உதவி நிறுவனம் ஒன்று 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது. மேலும் மாந்தை கிழக்கில் வெள்ளப்பாதிப்புகளை எதிர்கொண்ட 150 குடும்பங்களுக்கு முல்லைத்தீவு அரச செயலகத்தால் நுளம்புவலைகளும், தறப்பாள்களும், பாய்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை துணுக்காய், மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவிலுள்ள வீதிகள் குளங்களின் வான் வெள்ளம் வீதிகளைக் குறுக்கறுத்துப் பாய்ந்தமையால் பெரும் குழிகளுடன் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (க-410)

## சுத்தம் பேணுவோம்...



சிறந்த விழிப்புணர்வு: கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல 1 பாடசாலையில் நடைபெற்ற ''கைகழுவுதல்'' விழிப்புணர்வு நிகழ்வில் சுகாதாரப் பணியாளரான திருமதி தவரூபி பாஸ்கரன் மாணவர்களுக்குக் கைகழுவுதல் தொடர்பாக விளக்குகிறார். (410)

# மாணவர்களுக்கு வெடிபொருள் தொடர்பான விழிப்புணர்வு

அக்கராயன், டிசெ.31

ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மத்தியில் மிதிவெடி மற்றும் வெடிபொருள்கள் தொடர்பான விழிப்புணர்வு அதிகளவில் தேவைப்படுவதாகக் கிளிநொச்சி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.கணேசலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல. 1 பாடசாலையில் பெற்றோர்களுடனான சந்திப்பின் போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 40 பாடசாலைகளில் மிதிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. கிளிநொச்சி கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஊட்டப் பாடசாலைகளின் வரிசையில் இந்தப் பாடசாலை முதன்மையானது.

இந்தப் பாடசாலையின் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மகிழ்வாக இருக்கக் கூடிய வகையில் பாடசாலையின் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பாடசாலையிலிருந்து இரண்டு ஆசிரியர்கள் மாற்றலாகிச் சென்றுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பெற்றோர்கள் பாடசாலையில் நிலவும் குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாகச் சுட்டிக்காட்டினர்.

மேலும் பாடசாலைக்குத் தேவையாகவுள்ள ஒன்பது ஆசிரியர்களுக்குப் பதிலாக ஆறு ஆசிரியைகளே பணியில் உள்ளனர் எனவும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த ஆசிரியர் பற்றாக்குறை விரைவில் நீங்கும் எனவும் உதவிக் கல்விப்பணிப்பாளர் பதிலளித்துள்ளார். (க-410)

# மழையில் நனைந்து பழுதாகி வரும் உழவு இயந்திரங்கள்

பூநகரி, டிசெ.31

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரங்கள் மழையில் நனைந்தவாறு தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு பாதுகாப்பான தரிப்பிட வசதிகள் எதுவும் இதுவரை பிரதேச சபையால் அமைக்கப்படாததால் இந்த அவலம் தொடர்கின்றது.

நீர்தாங்கி பொருத்திய உழவு இயந்திரங்களும், ஏனைய உழவு இயந்திரங்களும் திறந்த வெளியில் இரவு வேளைகளிலும், ஏனைய வேளைகளிலும் நிறுத்தி வைக்கப்படுவதால் மழையில் நனைந்து இவை விரைவில் பழுதாகி விடக்கூடிய நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாகப் பிரதேச சபை அதிகாரிகளும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை நிர்வாகமும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-406)

# பள்ளிக்குடா மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள்

பூநகரி, டிசெ.31

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்திலுள்ள பள்ளிக்குடா கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 29 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரவீர ஆகியோர் இந்த நிவாரணங்களை வழங்கி வைத்தனர்.

பூநகரிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளும் கடும் மழை வெள்ளத்தாலும், குளங்கள் வான் பாய்ந்து நீர் வெளியேறியதாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை உட்பட ஏனைய பயிர்ச் செய்கைகளும் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் தற்காலிகக் குடிசைகளில் வாழும் மக்களின் நிலை மிக மோசமாகவுள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் வெள்ள நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-406)

# நெற்பயிரில் மடிச்சுக்கட்டி

கிளிநொச்சி, டிசெ.31

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கறுக்காய்தீவு, செல்லியாதீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், சித்தங்குறிச்சி, பரமன் கிராய், ஆலங்கேணி, நல்லூர், சாமிப்புலம், தியாகம், தம்பிராய் ஆகிய இடங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

இதனால் நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது. (க-406)

# இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் எவரும் ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கூறுகிறார்

கிளிநொச்சி, டிசெ.31

ஒப்பந்தங்களை இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் எவரும் பெறலாம். ஆனால் பணிகளைக் கவனித்து அவற்றை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்.

பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் ஒப்பந்ததாரர்களிடம் கையளிக்கப்பட்ட போதும் அவற்றின் கட்டுமானப் பணிகள் தாமதமடைவதுடன் சில பணிகள் திருப்திகரமானதாகவும் அமையவில்லை. திறந்த அளவில் ஒப்பந்தங்களைக் கோரும்போது இலங்கையில் எந்தப் பகுதியில் இருந்தும் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தங்களை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவற்றை வழங்கும் திணைக்களங்களுக்குப் பொறுப்பானவர்கள் அவர்களை அடையாளம் கண்டு ஒப்பந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

மேலும் ஒப்பந்தங்களை எவரும் பெறலாம். ஆனால் அதற்குப் பொறுப்பு நிற்பவர்கள் வேலையின் குறைபாடுகள், தொழில்நுட்பம், ஒப்பந்த காலம் என்பவற்றைக் கவனித்து அவற்றை நிறைவேற்றவோ அல்லது தவறுகளைத் தடுக்கவோ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீள்குடியமர்வு விவகாரம் முடிவின்றி நீளுமா...?

போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடக்கவுள்ள நிலையிலும், வட பிரதேச மக்களில் பல ஆயிரக்கணக்கானவர்கள், இன்னும் தமது சொந்த, பூர்வீக இடங்களில் மீள்குடியமர முடியாது தவிக்கின்றனர்; பல வகையான கஷ்டங்களையும் இல்லாமைகளையும் அனுபவித்து அல்லற்படுகின்றனர். இவர்களில் மிகப் பலர் சுமார் 22 வருடங்களுக்கு மேலாக இரவல் காணிகளிலும், வீடுகளிலும் எழுத்தில் வடிக்க முடியாதவாறு அல்லற்பட்டு, அவலப்பட்டு, ஆற்றாது அழுது கண்ணீர் வடித்துக் கொண்டு நாள்களைக் கழித்த வண்ணம் விரக்தியின் மத்தியில் வாழ்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களின், இடம்பெயர்க்கப்பட்ட மக்களின் மீள்குடியமர்வு, பலப்பல காரணங்களைக் காட்டி காலம் தள்ளப்பட்டு வருகின்றது. போர் முடிவுக்கு வந்தபோது, தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ்மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு பெரும் எடுப்பில் தம்பட்டம் அடித்து வந்தது. அது மட்டுமா? வெளி உலகத்துக்கும் போரினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதில் அதிக கரிசனையும் அக்கறையும் காட்டுவதாகப் பிரசாரம் செய்து வந்தது.

ஆனால் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், இரண்டு மாவட்டங்களில் இன்னமும் பெரும் எண்ணிக்கையானோர் மீள்குடியமர்த்தப்படாமல் உள்ளனர் என்ற விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில், மண்டைதீவு, மாதகல், மாரீசன்கூடல், வயாவிளான், ஊறணி போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், அவர்களின் சொந்த இடங்களில் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை என்று அரச அதிபரால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன், மீள்குடியமர்ந்தப்படவேண்டிய இடங்களில், மக்கள் அவரவரது பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதே தோரணையிலேயே, கிளிநொச்சி அரச அதிபரும் தகவல் சொன்னார். கிளிநொச்சி மாவட்டத்தில், மக்களை மீள்குடியமர்த்த வேண்டிய பகுதிகளில், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிட்டியதும், இடம்பெயர்ந்த பொதுமக்கள் அவரவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர் என்று அவர் சொன்னார்.

உண்மை நிலை என்னவெனில், பாதுகாப்பு அமைச்சு - அரசாங்கம் - இடம்பெயர்ந்த தமிழ் மக்களைத் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீள்குடியமர அனுமதி வழங்குவதற்குத் தாமதம் காட்டி வருகிறது. அரசின் பாதுகாப்புத்துறை தனது உள்ளார்ந்த திட்டங்களை மனதில் இருத்தி, அவற்றுக்கு முதன்மைத்துவமும் முக்கியத்துவமும் வழங்கி, தமிழ் மக்களின் வாழ்வியல் தேவைகளைப் பின்னுக்குத் தள்ளுகிறது.

போர்ச் சுழல் நிலவிய காலத்தில், போராளிகளின் ஊடுருவல், தாக்குதல்கள் காரணமாகத் தமது பாதுகாப்புக்குக் குந்தகம் உண்டாகிவிடும் என்று காரணம் காட்டியே, சொந்த இடங்களில் வாழ்ந்த மக்களை அரசு வெளியேற்றியது. ஆனால் தற்போது அத்தகைய சூழ்நிலை அறவே இல்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் முற்றுமுழுதாக பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

அவ்வாறிருந்த போதிலும், தமிழ் மக்களில் குறிப்பிடக்கூடிய பங்கினர் தமது சொந்த மண்ணுக்குத் திரும்ப முடியாது தடுக்கப்பட்டுள்ளனர். சொந்த ஊர்களில் இருந்து இடம் பெயர வைக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியும் என்று நம்பியது கனவாகிவிட்டது. அவர்களின் எதிர்பார்ப்புகள் மீது மண் அள்ளிப் போடப்பட்டது போன்று மீள்குடியமர்வு தள்ளிப் போகிறது. சில இடங்களில் மிதிவெடி அபாயம் உள்ளதாகக் காரணம் காட்டப்பட்டு வந்தது.

ஆனால் கண்ணிவெடி அபாயம் இருந்த இடங்கள், இப்போது துப்புரவு செய்யப்பட்ட போதிலும் பாதுகாப்புத் தரப்பு அனுமதி வழங்காததால், சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் மூக்கில் வியர்க்கும் இக்கட்டான நிலையில், இயலாமையுடன் காத்திருக்க நேர்ந்துள்ளது.

தமிழ் மக்களைப் பெரும் நிர்க்கதி நிலைக்குக் கொண்டு வந்திருக்கும் மீள்குடியமர்த்தப்படாமை என்ற 'பிசாசு' இடம்பெயர்ந்த மக்களை மேன்மேலும் சித்திரவதை செய்கிறது.

வடக்கில் பேணப்பட்டு வரும் உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும் என்று அரசு சார்ந்த அரசியல்வாதிகள் மகாநாடுகளில் கூறிவந்தாலும்-

அதனை மறுப்பது போன்று, உயர்பாதுகாப்பு வலயங்கள் எக்காரணம் கொண்டும் நீக்கப்பட மாட்டா என்று ஜனாதிபதி, பத்து நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில், வரவு -செலவுத் திட்ட விவாதங்களுக்குப் பதில் அளித்து உரையாற்றும்போது அறுத்து உறுத்துக் கூறியிருந்தார்.

மொத்தத்தில், போரினால் இடம்பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட மிகப்பெரும் எண்ணிக்கையான மக்களின் மீள்குடியமர்வுக்கான எதிர்பார்ப்பு, முற்றாகவே பகற்கனவாக மாறுமோ என்ற அச்சம் வருட முடிவின் பின்னரும் நீளப் போகிறது.

தமிழர் பிரச்சினைச்சினைக்குத் தீர்வு காணுவது என்ற அரசின் இழுத்தடிப்பு, இழுபறி வாய்ப்பாடுகளில் இதுவும் ஓர் அங்கமாக உள்ளடக்கப்படும் என்று கொள்வதில் தவறு இல்லை எனலாம்.

# அரச பணியாளர்கள், ஓய்வூதியர்களுக்கான விசேட படிச் சுற்று நிருபம் வெளியானது

தென்மராட்சி டிசெ.31

அரசினால் கடந்த மாதம் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரச பணியாளர்கள், ஓய்வூதியம்பெறுவோர் ஆகியோருக்கான விசேட படி வழங்குவது தொடர்பான சுற்றுநிருபம் அரச மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.வீ. அபேயக்கோனால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் நூற்றுக்கு பதினைந்து வீதம் என்னும் அடிப்படையில் விசேட படி வழங்கப்படவுள்ளது.

2003.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச பணியாளர்களுக்கு ஜனவரி மாதத்தில் 500 ரூபாவும் ஜூலை மாதத்தில் மேலும் 500 ரூபாவும் விசேட படியாக ஓய்வூதியத்துடன் வழங்கப்படும்.

2004.01.01ஆம் திகதியிலிருந்து 2005.12.31 வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு 2012 ஜனவரி தொடக்கம் 250 ரூபாவும் ஜூலை தொடக்கம் மேலும் 250 ரூபாவும் அதிகரிக்கப்படல் வேண்டும்.

அரச பணியாளர்களுக்கு கடந்த 2010.12.31. ஆம் திகதிய 28/2010 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 2/1 ஆம் பந்தியின் கீழ் படிகள் வெளியடங்கலாக அடிப்படை மாதாந்த வேதனத்தின் நூற்றுக்கு ஐந்து (5 வீதம் ) இதற்குச் சமமான தொகையொன்றாக வழங்கப்பட்ட அத்துடன் ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாக உள்ள விசேட படியொன்றுக்குப் பதிலாக விசேட படியொன்று பின்வரும் வீதங்களில் வழங்கப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

ரூபா 22935.00இற்குக் குறைவாக உள்ள ஆரம்ப வேதனப்படியொன்றுடன் மாதாந்த வேதன அளவுத்திட்டமொன்றுக்கு உரிய பதவிகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு 2012.01.01 ஆம் திகதியிலிருந்து பயனுறுமாறு படிகள் வெளியடங்கலாக அடிப்படை மாதாந்த வேதனத்தின் நூற்றுக்கு பதினைந்து (15) இற்குச் சமமான தொகையொன்றாகக் கணிப்பிடப்பட்ட அத்துடன் ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாக விசேட படி வழங்கப்படல் வேண்டும்.

ரூபா 22945.00 இற்கும் அதற்கு மேலும் உள்ள ஆரம்ப வேதனப்படியொன்றுடன் மாதாந்த வேதன அளவுத்திட்டமொன்றுக்கு உரிய பதவிகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு 2012 .01. 01 ஆம் திகதியிலிருந்து பயனுறுமாறு படிகள் வெளியடங்கலாக அடிப்படை மாதாந்த வேதனத்தின் நூற்றுக்கு பத்து (10 ) வீதத்திற்கு தொகையொன்றாகக் கணிப்பிடப்பட்ட அத்துடன் ஓய்வூதியத்திற்கு உரித்தற்றதாக விசேட படியொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

மேலும் இந்தப் படியானது 2012.07.01 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு பதினைந்து (15) வீதம் வரை அதிகரிக்கப்படல் வேண்டும். மீளப் பணியில் அமர்த்தப்பட்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ''அ'' மற்றும் ''ஆ'' பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட பின்னர் மீளப் பணியில் அமர்த்தப்பட்ட பதவிகள் குறித்து சார்ந்திருந்து அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தப் படிகளின் அடிப்படையில் இந்த விசேட படியானது வழங்கப்படல் வேண்டும்.

நாளாந்தக் கூலிகளில் சேவையாற்றுகின்ற பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி வெளியடங்கலாக அவர்களுடைய நாளாந்தக் கூலியின் அடிப்படையில் வழங்கப்பட்ட நூற்றுக்கு ஐந்து வீதத்திற்குச் சமமான படியொன்று 2012.01.01 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு பதினைந்து (15) வீதத்திற்குச் சமமாகவாறு கணிப்பிடப்பட்டு வழங்கப்படல் வேண்டும் என அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல.31/2011 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-207)

# சம்பள ஏற்ற அறிக்கை சிபார்சுக்கு உடற் தகுதிச் சான்றிதழ் அவசியம்

தென்மராட்சி, டிசெ.31

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வருடாந்த சம்பள ஏற்ற அறிக்கை சிபார்சு செய்யும்போது தொற்றாநோய் உடற்பகுதி மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு கோரப்படுவது அவசியமாகிறது.

ஒவ்வொரு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பல்வேறு தொற்றா நோய்களுக்கு இலக்கான நிலையில் கடமைபுரிந்து வருகின்றனர். இவர்கள் நல்ல உடற்தகுதி கொண்டிருந்தால் மட்டுமே மக்கள் சிறந்த சேவையினைப் பெறமுடியும்.

35 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கான தொற்றா நோய் பரிசோதனை நடாத்த மஹிந்த சிந்தனைப் பிரகாரம் உரிய புத்தகங்கள் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் பொதுமக்களோ அரச உத்தியோகத்தர்களோ இந்தப் பரிசோதனையில் கலந்துகொள்வதில்லை.

இதேவேளை-

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் வருடாந்த சம்பள ஏற்றத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த 26 ஆம் திகதி தொற்றா நோய் பரீட்சார்த்த உடல் உள ஆரோக்கிய பரிசோதனை சாவகச்சேரி வைத்திய சாலையில் நடாத்தியபோது 60 வீதமானோர் தொற்றாநோய்களினால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தினர் நடத்தியதை முன் மாதிரியாகக் கொண்டு ஏனைய திணைக்களத்தினரும் இவ்வாறான பரிசோதனைகளுக்கு உட்படுத்தி சான்றிதழ் பெற்றால் ஆரோக்கியமான உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மூலம் சேவைகளைப் பெற முடியுமென பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

(த-207)

# தொல்பொருள் காட்சியகமாகிறது சபாநாயகரின் முன்னாள் இல்லம்

கொழும்பு,டிசெ.31

சபாநாயகரின் முன்னைய உத்தியோகபூர்வ இல்லமாயிருந்த கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள 'மும்தாஸ் மஹால்' கட்டடத்தைத் தொல்பொருள் அருங்காட்சியகமாக மாற்றிப் பாதுகாப்பதற்கு தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் கட்டடத்தை அதன் தற்போதைய கட்டட அமைப்புக்கு அமைவாகப் புதுப்பித்துப் பாதுகாப்பதற்கும்

மேல் மகாண தொல் பொருள் அருங்காட்சியகத்தை அங்கு நிறுவுவதற்கும் தேசிய உரிமைகள் அமைச்சர் கலாதிநி ஜகத் பாலசூரிய அமைச்சரவையின் அனுமதியைக் கோரியுள்ளார்.

(த-22)

**நாளை**

மார்கழி 16, ஞாயிற்றுக்கிழமை 01.01.2012
திதி: அட்டமி பி.இ. 3.02 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி பி.ப. 3.05 வரை
சுபநேரம்: 9.29 - 10.59 வரை, ராகு காலம்: 4.59 - 6.29 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

வெளிநாட்டு வர்த்தகக் கம்பனி ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வேலை செய்வதற்கு பெண் தொழிலாளர்கள் தேவை.

தகைமை: அடிப்படைக் கணினி அறிவு, ஆங்கிலம் நன்றாகக் கதைக்கக் கூடியவர்கள்

குறிப்பு: பெற்றோரை, கணவரை இழந்தவர்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 0771324315
0771028801

(123315)(3.6.7)

## தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிய மாணவர் பதிவு 5ஆம் திகதி

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான முற்பதிவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி இடம்பெற்று அன்றே வகுப்புகள் ஆரம்பமாகும் என தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகராஜன் தெரிவித்தார்.

இந்தக் கல்லூரியில் புதிய ஆண்டுக்கான வகுப்புகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஆனால் புதிய ஆண்டில் புதிய மாணவர்களுக்கான பதிவும் அவர்களுக்கான வகுப்புகளும் 5ஆம் திகதியே ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (எ-319)

## BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்

A/L 2012

* கலை * வர்த்தக
* கணித * உயிரியல்

வகுப்புக்கள்

**DAY CLASS**

(எமது SUPER GRADE ஆசிரிய குழு)

ஆரம்பம் : 03.01.2012 செவ் 7.00Am

## வல்லுவத்தை பன்னாலை அருள்மிகு ஞானவைரவர் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

நாளை (2012.01.01) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வல்லுவத்தை அருள்மிகு ஞானவைரவர் ஆலய பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நடைபெற இருப்பதால், அடியார்கள் அனைவரும் சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

வ.செனகரத்தினம்,
வல்லுவத்தை பன்னாலை,
தெல்லிப்பழை

தலைவர்: வல்லுவத்தை
ஞானவைரவர் ஆலயம்.
021 222 1925



காரைநகர்

## திருவருள் மிகு வியாவில் ஐயனார் தேவஸ்தானம்

## மகரஜோதிப் பெருவிழா - 01.01.2012

ஐயப்பன் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ கரவருஷம் மார்கழித் திங்கள் 16 ஆம் நாள் 01.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் ஹரிகர புத்ர ஐயப்பபெருமானுக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

### கிரியகால நிகழ்ச்சிகள்

காலை 06.00 ஐயப்ப சுவாமிக்கு விஷேட அபிஷேகம்
காலை 08.00 மகர ஜோதிப் பதினெட்டாம் படிப்பூஜை
முற்பகல் 10.00 சரண கோஷம் பஜனை

**தர்ம சாஸ்தா குருகுல அதிபர்**
ஸ்ரீ பிரம்மஸ்ரீ தாணுமகா தேவ சிவாச்சாரியார் (காயத்திரி பீடம், இணுவில்)

**பிரதம குரு**
ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (வியாவில் ஐயனார் தேவஸ்தானம்)

**பஜனை படிப்பூஜை**
ஸ்ரீ பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்
*சபரிமலை குருசுவாமி* (சிவதர்ம சாஸ்தா ஆலயம், உரும்பிராய்)

**ஆலய குரு சு.ராஜித சர்மா, சு.சுஜீவ சர்மா**

**இவ்விழாவில் விஷேட தவில் நாதஸ்வர கச்சேரிகள் நடைபெறும்**

குரு சுவாமிகளையும் மாலை அணியப்பெற்ற ஐயப்ப சுவாமி மார்களையும் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து மகேஸ்வர பூஜையிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சுவாமியே சரணம் ஐயப்பா**

வியாவில், காரைநகர். ஆலய அறங்காவலர்.

## FIVE ROOMED HOUSE AT URUMPIRAI, AVAILABLE FOR LONG TERM LEASE

**Location:** Half a km from Urumpirai Junction towards Maruthanarmadam at Manipay Road.

**Amnesties:** Five rooms along with three toilets and one bath room, separate kitchen. Electricity and water supplies are availabe.

**Available Date:** This House will be available from April 2012

Suitable for Ngo's and any business ventures.

**Contacts:**

**Thanas**, (available till 8th of January 2012)
Mobile No.: 0710990046

**Sasitharan**, Jaffna
Mobile No.: 0779778465

**Mrs. Siva Sellathurai**, Wellawatte
T.P.: 011-2586273

(12301)(5,6,7)

## புதுவருடத்தை முன்னிட்டு BARNABAS இன் மாபெரும் மலிவு விற்பனை

24' LED TV
~~32500/=~~
25500/=

22' LCD TV
~~26500/=~~
20500/=

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இம் மலிவு விற்பனை கையிருப்பு உள்ளவரை மட்டும்

## SONY JAPAN T.Vகள்

* உதிரிப்பாகங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்
* நீண்டகாலம் உறுதியான பாவனை

Japan WEGA 21' Sony TV Flat
~~21000/=~~
14000/=

Japan WEGA 25' Sony TV Flat Boofer Sound

21' Flat TV Panasoni


VCDTAPE Radio
~~4500/=~~
2400/=

DVD Player USB 5.1 channel 1 Year Worrenty
~~5700/=~~
3750/=

VHF UHF ANTENA
~~2100/=~~
1400/=

247, ஸ்ரான்லி வீதி
ஸ்ரீதர் தியேட்டர் அருகில்
யாழ்ப்பாணம்.

T.P:0777448668,0777805268
0217900728



## Start Your Degree Now

Special Schlorship For Jaffna Students

உங்கள் எதிர்காலத்தைப் பற்றிய கவலையா?
பல்கலைக்கழக நுழைவை தவறவிட்டோம் என்ற ஏக்கமா?

கவலையை விடுங்க.......

நீங்களும் ஒரு இலங்கை அரச அங்கீகாரம் பெற்ற
கணினி பட்டதாரி ஆகலாம்!

Don't Worry !! About Your University Life
We Take Care of You

**Are You Ready to Join With Us!!!**

இலங்கை அரசின் அங்கீகரிக்கப்பட்டதும், இலங்கை, கனடா, அவுஸ்ரேலியா, இலண்டன் மற்றும் அமெரிக்கா நாடுகளில் மூன்றாம், நான்காம் வருட கற்கை மேற்கொள்ளக்கூடியதுமான ஒரே ஒரு பட்டப்படிப்பு நிறுவனம் யாழ்ப்பாணத்தில்

**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்**

## SLIIT Jaffna Centre

(Approved By UGC, SL)

No.53, Pointpedro Road, Jaffna
Tel : 021 7200406 Hot Line : 0777315262
E-mail :info.jaffna@ewisl.net Web :www.sliit.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொலிஸார் இருந்தும் சிங்களத்திலேயே முறைப்பாடுகள்

## குடாநாட்டில் எல்லா பொலிஸ் நிலையங்களிலும் இதேநிலைதான்

யாழ்ப்பாணம், டிசெ.31

குடாநாட்டில் வசிக்கும் தமிழ் மக்களின் நலன் கருதி சகல பொலிஸ் நிலையங்களிலும் அண்மையில் பெற்ற கணிசமான தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்பட்ட போதிலும் தமிழ் மக்கள் செய்யும் முறைப்பாடுகள் தொடர்ந்து சிங்களப் பொலிஸாரால் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்படுகின்றன.

இதனால் முறைப்பாடு செய்வதற்குப் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் மக்களும் பொலிஸாரும் மொழிப் பிரச்சினையால் திண்டாடுவதுடன் தங்கள் பிரச்சினைகளை விரிவாக எடுத்துச் சொல்ல முடியாமலும் இலகுவாகத் தீர்வு காண முடியாமலும் திண்டாடுகின்றனர்.

எனவே தமிழ் மக்கள் செய்யும் முறைப்பாடுகளைத் தமிழ் மொழியில் பதிவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களைப் பொது மக்கள் கோரியுள்ளனர்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உயர் பதவிகள் உட்பட பெரும்பாலான தமிழ்ப் பொலிஸாரே கடமையாற்றி வந்தனர். அப்பொழுது மக்களின் முறைப்பாடுகள் இலகுவாகப் பதிவு செய்யப்பட்டுப் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டது. அத்துடன் நீதிமன்றங்களிலும் தமிழ் மொழி மூலம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதால் குற்றப் பத்திரங்களை மக்கள் வாசித்து விளங்கக் கூடியதாக இருந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நடைபெற்று வந்த யுத்தம் நாளடைவில் உக்கிரம் அடைந்து வந்ததைத் தொடர்ந்து தமிழ் பிரதேசங்களில் கடமையாற்றி வந்த தமிழ்ப் பொலிஸார் வேறு இடங்களுக்கு மாற்றலாகிச் சென்றனர். சிலர் ஓய்வுபெற்றனர்.

இந்தத் தமிழ்ப் பொலிஸாரின் வெற்றிடங்களுக்குத் தமிழ் பொலிஸாரை நியமிப் பதற்கும் அரசு முன்வரவில்லை.

இதனால் தமிழ்ப் பொலிஸாருக்குப் பற்றாக்குறை நிலவி வந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் மூன்று தசாப்த காலங்களாக இடம்பெற்று வந்த யுத்தம் கடந்த இரு வருடங்களுக்கு முன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து பல வருடங்களாகச் செயல் இழந்திருந்த சிவில் நிர்வாகம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. போர்க் காலத்தில் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. பொலிஸ் திணைக்களத்தில் தமிழ்ப் பொலிஸாருக்கு இருந்த தட்டுப்பாட்டால் குடாநாட்டில் சகல பொலிஸ் நிலையங்களிலும் சிங்களப் பொலிஸாரே கடமையாற்றி வருகின்றனர். இதனால் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மக்கள் முறைப்பாடு செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

தமிழ் மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள மொழிப் பிரச்சினை காரணமாகப் பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க முன்வந்துள்ள அரசு நேர்முகப் பரீட்சை மூலம் தமிழ் இளைஞர்களைத் தெரிவு செய்து பயிற்சி வழங்கிய பின் சகல பொலிஸ் நிலையங்களிலும் இவர்களை நியமித்துள்ளது.

இந்த நிலையில் பொலிஸ் நிலையங்களில் தொடர்ந்தும் சிங்களமொழியிலேயே தமிழ்மக்களின் புகார்கள் சிங்களப் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அரசு பொலிஸ் நிலையங்களில் தமிழில் பதிவு செய்யலாம் என்று ஏற்கனவே தெரிவித்திருந்த போதிலும் தொடர்ந்து சிங்கள மொழியில் அவை பதியப்படுவது மக்கள் மத்தியில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அரசு தெரிவித்திருந்தது போல் மக்கள் தங்கள் புகார்களைத் தமிழ் மொழியில் பதிவு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பொதுமக்கள் கோரியுள்ளனர். (த- 115)

## வீதி சீர்கேட்டால் விபத்தில் காயம்

தென்மராட்சி, டிசெ.31

பஸ் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை நுணாவில் சந்தியில் இடம்பெற்றது.

ஏ-9 வீதியில் காணப்பட்ட குழியில் மெதுவாக செலுத்த முற்பட்ட வேளையில் வேகமாக வந்த பஸ் மோட்டார் சைக்கிளை மோதியதில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவராசா சிவகுமாரன் (வயது-50) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-207)

## தனியாகின்றன ஆரம்பப் பிரிவுகள்

தென்மராட்சி, டிசெ.31

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் ம.வி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஆகியவற்றில் இயங்கி வந்த ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் அடுத்த வருடம் தொடக்கம் தனித்து இயங்கவுள்ளன.

கல்வி அமைச்சின் ஆயிரம் பாடசாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இந்தப் பாடசாலைகளில் இயங்கி வந்த ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் தனியான நிர்வாகத்தில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தால் மீசாலை-வேம்பிராய் வீதியில் விளையாட்டு மைதானத்துக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் புதிய ஆரம்பப் பிரிவுக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## தென்மராட்சியில் நத்தார் தின நிகழ்வு

தென்மராட்சி டிசெ.32

தென்மராட்சி பிரதேச 522 523 ஆகிய படையணிகளின் ஏற்பாட்டில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அனுசரணையுடன் நத்தார் தின நிகழ்வுகள் வியாழக்கிழமை சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய முன்றலில் நடைபெற்றன.

தேவாலய பங்குத் தந்தை அருட்பணி எம்.யேசுரட்ணம் அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மறை மாவட்ட நிதிப் பரிபாலகர் அருட்தந்தை அன்ரனிதாஸ் அடிகளும், சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை போதகர் அருட்திரு அன்ரன் செல்வநாயகம் அடிகளும் கௌரவ விருந்தினர்களாக 522 படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் அத்துள சில்வா, 523 படையணியைச் சேர்ந்த கேணல் புளத்கம சிவில் நிர்வாக அதிகாரி கேணல் ஹர்சா அபேவர்த்தன, 11 வீ.ஐ. ஆர். படையணியைச் சேர்ந்த கே.ஃ.கேமரத்ன, சாவகச்சேரி நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேவாலய மறைக்கல்வி ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்ட தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. ( ம-207)

## குடாநாட்டில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது

வலி வடக்கு டிசெ 31

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. கடந்த ஐந்து நாள்களாக இயற்கையின் சீரற்ற நிலையால் வானம் மப்பும் மந்தாரமாக காணப்பட்டதுடன் கடலும் பெரும் அலைகளுடன் காணப் பட்டது.

இதன் காரணமாகக் கடலில் மீன்பிடிப்பதற்கு கடல் தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாத நிலைமை ஒரு வாரமாக காணப்பட்டு வருகின்றது.

நேற்றும் கடற்பிரதேசத்தில் அதிக அலைகள் காணப்படுவதாகவும் கரை வலைத் தொழிலுக்குச் செல்பவர்கள் கூடத் தொழிலுக்குச் செல்லாது இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. குறிப்பிட்ட சிலர் பரவைக் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். அவர்களால் பிடித்து வரப்படும் மீன்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-86)

## நத்தார் பப்பா வேடத்தில் டெங்கு ஒழிப்புப் பிரசாரம்

நத்தார் பப்பா வேடத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பிரசார பணிகள் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நத்தார் பப்பா வேடத்தில் செல்வோர் ஒவ்வொரு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பொலிஸார், பிரதேச மலேரியா ஒழிப்பு இயக்கத்தினர் ஆகியோர் இணைந்து பிரதேசத்தில் ஐந்து வலயங்களாகப் பிரித்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம- 207)

## உடுவிலில் இளைஞர் அட்டகாசம்

வலி. வடக்கு டிசெ 31

உடுவில் பகுதியில் இளைஞர்களின் அட்டகாசம் மிகவும் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொது மக்கள் குறைப்பட்டுக் கொள்கின்கின்றனர்.

மாலை வேளைகளில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களில் வந்து முக்கிய சந்திகளில் கூடும் இளைஞர்கள் வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்களுக்கு இடைஞ்சலாக இருப்பதுடன் மது போதையிலும் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகப் பொது மக்களால் கிராம அலுவலர்களின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும் அவர்களுடைய செயற்பாடுகள் முழுமை பெறாத நிலை காணப்படுகிறது. இதனால் இந்தச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது. (ம-86)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து

தென்மராட்சி, டிசெ.31

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நுணாவில், கல்வயல் ஆகிய பிரிவுகளுக்கான வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மற்றும் பெண் நாய்களுக்கான கர்ப்பத்தடை ஊசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொது அமைப்புகளின் கட்டடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் இடங்களில் விவரங்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுவதாகவும் வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் இந்த நிலையங்களுக்குக் கொண்டு வந்த தடுப்பூசி ஏற்றுமாறும் அறிவிக்கப்பட்டு வருவதாகச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் அறிவித்துள்ளனர். (ம-207)

## தென்மராட்சிப் சமுர்த்திப் பயனாளிகளுக்கு ஒரு கோடி 56 லட்சம் செலவில் மலசலகூடங்கள்

தென்மராட்சி, டிசெ.31

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி பயனாளிகள் 356 பேருக்கு ஒரு கோடி 56 லட்சம் செலவில் மலசலகூடங்கள் சமுர்த்தி அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மலசலகூடமும் 40 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கச்சாய், சாவகச்சேரி, கடலேரியில் இறால் பிடிக்கும் தொழில் ஈடுபட்டுள்ள 15 கடல்தொழிலாளர்களுக்குத் தலா 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் 50 வீத மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

விரைவில் 68 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதேச சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்திப் பயனாளிகளுக்குச் சைக்கிள்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், வைத்திய நிலையங்களுக்குக் குளிர்சாதனப் பெட்டிகள், நடமாடும் விற்பனை நடத்தவுள்ள பயனாளிகளுக்கு மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உரிய நிதி கிடைத்ததும் இவை சமுர்த்திப் பயனாளிகளுக்கு விநியோகிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு கோரல்

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் இலங்கை அரசின் (GOSL) நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக் கான அவசர செயற்றிட்டத்தின் வேலைகளை மேற் பார்வை செய்யும் பொறியியலாளர் நிறுவனத்தின் அலுவலக மற்றும் தங்குமிட வசதிகளின் தேவை களுக்காக யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிர தேசங்களை அண்டியதாக நான்கு வீடுகள் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்குத் தேவைப் படுகின்றது. வீடு ஒன்று குறைந்தது 1200 சதுர அடி விஸ்தீரமானதாகவும் குறைந்தது 03 அறைகள் மற்றும் கழிப்பிட வசதிகள் கொண்டதாகவும் இருக்க வேண் டும். அறையுடன் அமைந்த கழிப்பிட வசதிகள் கொண்ட வீடுகள் விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ள வீட்டு வாடகைதாரர் தங்களின் வீடு சம்பந்தமான தரவுகள் மற்றும் தாம் எதிர்பார்க்கும் மாத வாடகை மற்றும் முற்பணம் சம்பந்தமான தரவு களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு 09.01.2012 க்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

Project Director,
Project Implementation Unit,
CARE Project-Provincial Road,
61/6, Nallur Cross Road, Nallur.

எந்திரி த.சிவராஜலிங்கம், திட்டப் பணிப்பாளர்,
முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசர செயற்றிட்டம் (CARE Project)
61/6, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களை 021-3202535 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## உயர் கலைக் கல்லூரி

குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு

**A/L -2014**
**A/L Day class**

### கலைப்பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | - சந்திரசேகர் |
| இந்துநாகரிகம் | - ஸ்ரீதரன் |
| புவியியல் | - குமரன் |
| அரசியல் | - இளங்கோ |
| வரலாறு | - பத்மன் |
| இந்துசமயம் | - ஸ்ரீதரன் |
| பொருளியல் | - அருணன் |
| அளவையியல் | - நீதன் |
| நாடக அரங்கியல் | - ரமேஸ் |
| மனைப்பொருளியல் | - ரஜித்தா |
| தகவல் ஊடகம் | - இளங்கோ |

**ஆரம்பம்**
**05.01.2012 வியாழன்**
**4 மணி**

"அறிவை அறிவால் அறிவோம்"

## தேசிய சாதனையாளனை உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்



செல்வன்
**கமலக்கண்ணன் கமலவாசன்**

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உ.த பரீட்சையில் கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தான் கற்ற கல்லூரிகளை யும், கல்வி நிறுவனங்களையும், அதிபர்களையும், ஆசிரியர் களையும் பெருமையுறச் செய்து குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் பேருவகையூட்டிப் பெருமை சேர்த்து, தந்தை கமலக்கண்ணன் பிறந்த பருத்தித்துறை-புலோலி யூரையும், தாய் மதிவதனா பிறந்த உடுப்பிட்டி கொம்மந் தறைப் பகுதியையும், யாழ். மாவட்டத்தையும் மாண்புறச் செய்த தேசிய சாதனையாளன் கமலவாசனைப் பாராட்டு வதோடு உயர் கல்விதனைக் கருத்துடன் கற்றுக் கணிதத் துறையில் கலங்கரை விளக்காய் உயர்ந்திட இறையருள் வேண்டி உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
அப்பப்பா-வைத்திலிங்கம் இராசரத்தினம், (ஓய்வுநிலை நிர்வாக கிராம அலுவலர்),
அப்பம்மா திருமதி ருக்மணிதேவி இராசரத்தினம், (ஓய்வுநிலை பிரதி அதிபர்).
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

5/5, இராசாவின் தோட்ட லேன், யாழ்ப்பாணத் தில் வீட்டுடன் 1¾ பரப்புக் காணி விற் பனைக்கு உண்டு. மூன்று பக்க மதில்கள் உள்ள வீடு.

**தொடர்பு: 0774039609, 0770610759**

## தேவை

எமது நிறுவனத்தின் கிளிநொச்சி வேலைத் தளத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
❶ மேசன், ❷ தச்சு வேலையாளர்கள், ❸ கம்பி வளைப்போர், ❹ கூலியாள்கள்

தொடர்பு: யதுர் என்ரபிறைஸ், ஆதிவிநாயகர் வீதி, வைரவப்புளியங்குளம் வவுனியா.

**தொ.பே: 0714840590**

## மலிவு விற்பனை

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Sony 21', 25", 29" TV கள், அம்பிளிபயர், Box DVD, குளிர்சாதனப் பெட்டிகள், ரேடியோக்கள் என்பன பெருந் தொகையில் விற்பனைக் குண்டு. தொடர்பு: 0770440570, 0771393670
சொனி ரேட் சென்ரர், (கொமர்ஷல் வங்கி எதிரில்),
இல. 56, KKS வீதி, சுன்னாகம்.

## யாழ்ப்பாணத்தில் ......

இலகுவான முறையில் ஜேர்மன் மொழி கற்பிக்கப்படும்

ஜேர்மன் நாட்டுக்கு போக விரும்புபவர்களுக்கு இலகுவான முறையில் ஜேர்மன் மொழி கற்பிக்கின்றோம். ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்.

ஆண், பெண் இருபாலாரும் வயது வித்தியாசமின்றி விண்ணப்பிக்கலாம்.

**ஆசிரியர்: ஜோசப் கமில்ரன் அல்பிரட் (ஜேர்மன் பிரஜை)**
**தொடர்பு: 0772033415, 0212241260**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14.07.1951
மறைவு: 04.01.2009
திதி: ஸப்தமி 31.12.2011

அமரர்
**கனகசபாபதி புலேந்திரதாசன்**

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
அறிவின் இருப்பிடமே
ஆண்டுகள் மூன்று ஆகிலும்
ஆறவில்லையே எம் மனம்

போகும் இடமெல்லாம் உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல்
அப்பா என்று நாம் இனி யாரை அழைப்பது?
ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள் அப்பா!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.
மீசாலை கிழக்கு,
மீசாலை.

## BEACON

### கலை, வர்த்தகப்பிரிவு

**2014 A/L**

| கலைப்பிரிவு | வர்த்தகப்பிரிவு |
|---|---|
| தமிழ் | பொருளியல் |
| நாகதமிழ்நிதரன் | அருணன் |
| இந்துநாகரிகம் | கணக்கீடு |
| ரமணன் | சுகிர்தன் |
| அளவையியல் | வணிகக்கல்வி |
| S.S.மனோகரன் | முரளி |

ஆரம்பம்: **07.01.2012**
சனிக்கிழமை, காலை 8.00 மணிக்கு
(C/8508)(5,6,7)

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் போன் சொப்பிற்கு பெண் பிள்ளைகள் தேவை. நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **0774350610**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் திருமதி சிவமஞ்சுளா சூரியப்பிரகாஸ் அவர்களின் அன்புக் கணவர்

**பொன்னுத்துரை சூரியப்பிரகாஸ்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பது டன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக் கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம்.

## நீங்காத நினைவில்..........

ஈராண்டுகள்..........



பிறப்பு - 06.06.1946
இறப்பு - 23.12.2009

திதி:
மார்கழிமாத பூர்வபக்க ஸப்தமி
31.12.2011

அமரர்
**சிதம்பரப்பிள்ளை குலசபாநாதன்**

மண்ணுலகில் எம்மை
மாண்புற வாழவைத்த
விதியின் வழியே
விண்ணுலகம் சென்றாலும்
மங்காது, மறையாது, மாறாது
மனதில் நிறைந்த உங்கள்
நினைவுகள்.....!

ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்,
...ஷி தோட்டம்,
...

## இனிய புதுவருட வாழ்த்துக்கள் 2012



### STUDY IN UK

**அதிக செலவைத் தவிர்த்திட இன்றே தீர்மானியுங்கள்**

- நீங்கள் G.C.E O/L or G.C.E A/L தகைமையுள்ளவராயின் லண்டன் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடரலாம்
- லண்டன் அங்கீகாரமுள்ள ஆங்கில சான்றிதழ் உள்ளதா?
- ஆங்கில பரீட்சைக்காக (லண்டன்) ஆயத்தப்படுகிறீர்களா?
- மிகக்குறைந்த செலவில் Student visa பெற்றுக்கொள்ள அனைத்து ஆலோசனைகளும் கண்ணியமான முறையில் வழங்கப்படும்.
- own sponsor உள்ளவர்கள் செலவினைக் குறைக்கலாம்.

**JAN/FEB IN TAKE**

உங்கள் எதிர்கால கனவுகளை நிஜமாக்கிட இன்றே விரையுங்கள்.

(12296)(5,6,7)

## PS CONSULTING

...Station Road, Kondavil west,
Kondavil, Jaffna.
(Near the Uppumadam Junction)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## ஆற்றலைப் பட்டை தீட்டுங்கள்... ...இல்லையேல் கூழாங்கற்களாக!

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அழகியற் பாடத்துக்குத் தேவையான ஆசிரிய ஆளணியை நிரப்ப வேண்டியிருந்தது.எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பட்டதாரிகளிலிருந்து ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக ஒரு பரீட்சை நடத்தப்பட்டது. இப்பரீட்சையில் தோற்றிய அனைவரும் நுண்கலைப் பாடங்களைச் சிறப்புப் பாடங்களாகக் கற்றுப் பட்டம் பெற்றவர்கள்.

ஏனைய பாடங்களைப் போலல்லாது நுண்கலைப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அப்பாடம் தொடர்பான செய்முறை அறிவு உயர்வானதாக இருக்க வேண்டும். அதுபோலவே அறிமுறை (Theory) அறிவும் இருக்க வேண்டும்.இரண்டு அறிவும் 80 வீதத்துக்கு மேல் இருந்தால்தான் அவர்களால் நல்ல முறையில் பிள்ளைகளை வழிப்படுத்த முடியும்.

பரீட்சையை நடத்திப் பெறுபேற்றைப் பார்த்த அதிகாரிகளுக்கு அதிர்ச்சி.50 வீதத்துக்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் மிகக் குறைவானோராக -விரல் விட்டு எண்ணக் கூடியவராக- இருந்தனர். அனேகர் 35 புள்ளிகளுக்கு மேல் பெறவில்லை. இவர்களை ஆசிரியராக எடுத்து, இவர்கள் மூலம் பயிலப் போகும் பிள்ளைகளிடத்தில் எவ்வளவுக்கு நல்ல அடைவை எதிர்பார்க்க முடியும் என்ற அங்கலாய்ப்பு அதிகாரிகளுக்கு. நீரளவேயாகுமாம் நீராம் பல் என்பதற்கேற்பவே எல்லாம் இருக்கும் என்ற நிலை.

ஒரு பாடசாலைக்கு அழகியல் ஆசிரியை ஒருவர் நியமனம் பெற்று வந்தார். அவருக்கு வழங்கப்பட்டது ஓர் ஆரம்பப் பாடசாலையாகும். சிறிது காலத்தின் பின் பெரிய பாடசாலை ஒன்றுக்கு அவர் இடமாற்றப்பட்டார். அழகியல் ஆசிரியரது தேவை அப்பாடசாலைக்கு இருந்தமையாலேயே அவர் இடமாற்றப்பட்டார்.பதவியேற்று விட்டு அவ்வாசிரியை அதிபரிடம் சொன்னது "எனக்கு குறித்த பாடத்தில் ரச் (Touch) இல்லை.வேறு பாடங்கள் தாருங்கள்'' என்பதுதான். அதிபர் உடனடியாகச் செய்தது அவரை விரைவாக வேறு பாடசாலைக்கு இடமாற்றுவித்தது!



தமது துறை சார்ந்த அறிவை அழகியல் பாடப் பட்டதாரிகள் கொண்டிருக்காமைக்கு பல்கலைக்கழகத்துக்கும் பெரும் பொறுப்புண்டு. அத்தகைய தேர்ச்சியை அவர்கள் பெறவில்லையாயின் அவர்களைச் சமூகத்துக்கு அளிக்கும்போது ஏற்படக்கூடிய விளைவுகளையும் எண்ணிப் பார்க்கவேண்டும். 80களில் வெளிவந்த ஒரு சிறு சஞ்சிகையில் யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய ரியூட்டறி எது? என்று வினவப்பட்டு, அதற்கான பதிலாக பல்கலைக்கழகம் எனப் போடப்பட்டிருந்தமை ஞாபகத்துக்கு வருகின்றது. குறித்த வருடங்கள் இருந்தால் அவர்களைக் கடைத்தேற்றி அனுப்பும் வழக்கத்தின் அறுவடை இதுவாகும் என்றார் மூத்த கல்வியியலாளர் ஒருவர்.

அதே நேரத்தில் அழகியல் துறையில் மிகுந்த திறமை வாய்ந்தவர்கள் பலரையும் இதே பல்கலைக்கழகமே உற்பத்தி செய்தது என்பதையும் நாம் மறந்து விடலாகாது. இசைக் கலைஞர்களாக, ஓவியர்களாக, நடன விற்பன்னராக எங்கள் சமூகத்தில் உலா வருகின்றவர்களும் இங்கிருந்தே தோற்றம் பெற்றனர். அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பிள்ளைகளே தேசிய மட்டம் வரை சென்று பரிசில்களைத் தட்டி வருகின்றனர்.

அழகியல் பாடங்களைப் பயில்பவர்களுக்கு ஒரு பெரும் பொறுப்புண்டு.சித்திரமும் கைப்பழக்கம். செந்தமிழும் நாப்பழக்கம் என்று இதை அன்றே ஒளவையார் சொல்லி விட்டார். தமது அறிவை பிரயோக நிலையில் இற்றைப்படுத்திக் கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு அழகியல் பட்டதாரிகளுக்கு உள்ளது. அவர்கள் தொடர்ந்து சாதனை செய்து கொள்ளவேண்டும். தமது ஆற்றலைத் தொடர்ந்தும் பட்டை தீட்டிக்கொள்ள வேண்டும். அப்போது தான் வைரக் கல்லாய் ஜொலிக்க முடியும்.

இல்லையேல் வெறும் கூழாங்கற்களாகவே மாற முடியும். கட்டக்கரியதாய் இருந்தாலும் பேர் பொன்னம்மா என்று ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள். அது போல சங்கீதம் தெரியாவிட்டாலும் ஆள் சங்கீத ரீச்சர் என்று உங்களை யாரும் சொல்லக் கூடாது!

விழிச்சான் குஞ்சு.

# கல்வித்துறை லஞ்ச முறைப்பாடு அதிகரிப்பு
# இந்த வருடத்தில் மாத்திரம் 48 பேர் கைது

கொழும்பு,டிசெ.31

கல்வித்துறையில் லஞ்சம் தொடர்பாகப் பதிவாகின்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் கல்வித்துறையில் 324 லஞ்ச முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஜயவிக்ரம தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் இடம் பெறும் முறைகேடுகள், பாடசாலை அபிவிருத்தியில் இடம் பெறும் ஊழல்கள் என்பனவும் இதில் அடங்குகின்றன என்று அவர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளில் அதிகமானவை பாடசாலை அதிபர்களுக்கு எதிராகவே செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

அத்தோடு, பொலிஸ் திணைக்களம் தொடர்பில் 279 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2,180 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் 43 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# பாலியல் வன்புணர்வு அதிகரிப்பு
# இந்த வருடம் 1,637 சம்பவங்கள்

கொழும்பு,டிசெ.31

இலங்கையில் பாலியல் வன்புணர்வு வீதம் அதிகரித்து வருகிறது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கடந்தகால புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் வன்புணர்வு வழக்குகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. 13 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் மீதான வன்புணர்வு அதிகரித்துக் காணப்படுகின்றன.

1400 இற்கும் மேற்பட்ட வன்புணர்வு விவகாரங்களை இதுவரை பொலிஸார் தீர்த்து வைத்திருக்கின்றனர். இது போன்ற குற்றச்செயல்களைத் தடுப்பது சமூகத்திலுள்ள அனைவரதும் தார்மீகப் பொறுப்பாகும் என்று அவர் தெரிவித்தார்.

சமூகத்தை பொறுப்புமிக்க தாக்குவது அனைவரதும் கடமையாகும். மேல்மாகாணத்திலேயே அதிகமான வன்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதனைத்தவிர வடமத்திய, சப்ரகமுவா, தென்மாகாணங்களிலும் குறிப்பிட்டளவு சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன.

இளவயதுடைய பெண்களுக்கு சமூகத்தினால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தோடு பெற்றோரும் இவர்களுடன் நெருக்கமான அவதானிப்புகளில் ஈடுபடவேண்டும். இப்படியான சூழலை உருவாக்கினால் குற்றச்செயல்களைத் தவிர்க்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

பொலிஸாரின் பதிவுகளின் படி இந்த வருடத்தில் மாத்திரம் 1637 வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு வழக்கு

### நுகர்வோர் அதிகாரசபை தகவல்

கொழும்பு,டிசெ.31

இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும், நுகர்வோர் சட்டத்தை மீறிய 4 ஆயிரம் வர்த்தகர்களுக்கு எதிராக இந்த மாதத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் விசேட பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில், இந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக அதன் தலைவர் றூமி மர்ஷூக் தெரிவித்துள்ளார்.

பொருள்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, பொருள்களைப் பதுக்கி வைத்தல், மோசடி செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச)

# ஜே.வி.பியின் மாநாட்டுக்கு தடை விதிக்க முடியாது

### கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.31

ஹம்பாந்தோட்டை - தெபரவெவவில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க முடியாது என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டை இடைநிறுத்துமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார மற்றும் ஜி.குலரத்ன ஆகியோர் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மாநாட்டை நடத்த மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு அனுமதி அளிக்கவில்லை என்று இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததோடு மத்திய செயற்குழுவில் உள்ள சிலருக்கு மாநாட்டில் பங்குபற்ற அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நேற்று வெள்ளிக்கிழமை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மாநாட்டுக்கு இடைக்கால தடை விதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளது. (ச)

# ஹெரோயின் விநியோகம்; பெண் உட்பட 4 பேர் கைது

கொழும்பு,டிசெ.31

ஹெரோயின் போதைப் பொருள் விநியோகம் தொடர்பில் மொரட்டுவை பிரதேசத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 20 வயதான இளம் பெண் ஒருவர் அடங்குவதாகவும் அவர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் நீண்டகாலமாக இந்தச் சந்தேகநபர்கள் ஹெரோயின் போதைப் பொருளை விநியோகித்துள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

போதைப்பொருள் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டோ ஒன்றையும், மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச)

# தேசிய தாவரவியல் பூங்காக்கள் மூலம் இந்த வருடம் 311 மில்லியன் ரூபா லாபம்

கொழும்பு,டிசெ.31

தேசிய தாவரவியல் பூங்காக்களின் ஊடாக இந்த வருடத்தில் 311 மில்லியன் ரூபா லாபம் ஈட்டப்பட்டுள்ளது என்று தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையால் இந்த வருடத்தில் தேசிய தாவரவியல் பூங்காக்களில் 230 மில்லியன் ரூபா லாபம் பெறப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சிரில் விஜேசுந்தர தெரிவித்தார்.

பேராதனை, ஹக்கல மற்றும் கம்பஹா ஆகிய தேசிய தாவரவியல் பூங்காக்களின் ஊடாக இந்த லாபம் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். 2012 ஆம் ஆண்டாகும்போது நாட்டில் மேலும் 10 புதிய தாவரவியல் பூங்காக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.வை. தாமோதரம்பிள்ளையின் சிலை திறப்பும், நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ.31

சி.வை.தாமோதரம்பிள்ளை சிலை திறப்பு விழாவும், நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு ஏழாலை மத்தி கண்ணகை அம்பாள் ஆலய வளாகத்தில் நடைபெற வுள்ளது.

தாமோதரம்பிள்ளையின் ஞாப கார்த்த சபையின் ஏற்பாட்டில் ஆர்.பேரின் நாயகம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதரக யாழ்.அதிகாரி வெ.மகாலிங்கம், சிறப்பு விருந்தின ராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

தாமோதரம்பிள்ளையின் திருவுரு வச் சிலையை பிரதம விருந் தினர் திரை நீக்கம் செய்து வைப்பார். தாமோ தரம்பிள்ளையின் செந்தமிழ்ப் பணி ஆய்வுக் கட்டுரை நூலின் சிறப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்து வார்.

(வ-ரி)


## பொதுமக்கள் கவனத்துக்கு



பல நோயாளர்களின் முறைப்பாடு களுக்கு இணங்க பொதுமக்களுக்கு இந்த அறிவித்தலைத் தருகின்றோம். வைத்திய கலாநிதி க.இராமசுவாமி யின் இராமசுவாமி சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி கிழக் கிலுள்ள (பழம் சந்தி) மேல்மாடி வீட்டில் மட்டும் ஆரம்பம் முதல் தொடர்ந்து இயங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இந்த வைத்தியசாலைக்கு வேறு எந்தவிதமான தொடர்போ, கிளைகளோ இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றேன். நோயாளர்கள் வரும்போது தயவு செய்து விளம்பரப் பலகையையும் மேல்மாடிவீட்டையும் அவதானித்து வரவும். வதந்திகளினால் நோயாளர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவது டன் எமது வைத்தியசாலையின் பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்றது. எனவே வதந்திகளை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு சகல விதமான வியாதிகளுக்கும்
ஆயுள்வேத முறைப்படி சிகிச்சை அளிக்கப்படும்.

தொலைபேசி: 021 222 3809.

டாக்டர்
இராமசாமி மகேஸ்வரன் (D.A.M)

(11890)(3.6.7)



## அந்தியேட்டி அழைப்பு



அமரர் சிவசம்பு செல்வராஜா (மாம்பழம்)

கடந்த 01.12.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சிவசம்பு செல்வராஜா (மாம்பழம்) அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.12.2011) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு வழங்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

7/1, கொய்யாத்தோட்டம்,
புதுவீதி, யாழ்ப்பாணம்.

(121447)(2-6-7)

குடும்பத்தினர்.


## உரிமை கோரப்படாத சைக்கிள்

யாழ்ப்பாணம், டிசெ.31

உரிமை கோரப் படாத சைக்கிள் ஒன்று யாழ். பொலிஸாரினால் யாழ். நீதிமன்றத் தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

எனவே சைக் கிளின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி மூன்று மாத காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள் ளுமாறு நீதிமன் றத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(வ-313)


## நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......




★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
(மலாயன் கபே முன்பாக)

T.P: 021 222 9399

(சி/(6548)(2.6.7)



## G.C.E (A/L) பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கான

### கற்கை வழிகாட்டல் கருத்தரங்கும் வேலைவாய்ப்பும்

# ACCA

Association of Chartered Certified Accountants

நிலையம் : யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
இல. 46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பெருமாள் கோயிலுக்கும் Beacon இற்கும் இடையில் APSS

திகதி : 03.01.2012 செவ்வாய்க்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி

**OPEN DAYS**
**January 3rd to 8 th January -2012**

★ Those who join on or before OPEN DAY will be entitled to a Special offer.
★ 100% Scholarships for high performers in A/ Levels , O/ Levels.
★ Our Fees includes Study Text, Exam Kit , Mentor Program, Revision, Mock, Exams, Enteretainment Program & Conference.

மேலதிக விவரங்களுக்கு:

T.P. 0215670345 Email : jtiedu @gmail.com

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்



## மரண அறிவித்தல்

### இளையதம்பி சின்னப்பு



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப் பிடமாகவும், தற்போது ஊரெழு கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி -சின்னப்பு 27.12.2011 இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கணப திப்பிள்ளை-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னுத்துரை, நவரத்தினம் மற்றும் நல்லதம்பி, காலஞ்சென்ற செல்லையா மற்றும் பாக்கியம் ஆகியோரின் சகோதரரும், ஐயாத்துரை, திருநாவுக்கரசு, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பீதாம்பரம், நவரத்தினம், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சரஸ்வதி, பாலசிங்கம், தர்மலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், குமணா , இராஜசேகரம் (ராசன்-இத்தாலி), கோமதி (கனடா) , றஜனி (கனடா), உஷா (இத்தாலி), றஜிகலா, கிரிதரன் (ஜேர்மனி), பிரதீபன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவசாமி, பிறேமாவதி, சிவகுமார், சிவனேசராஜா, வரதராஜன், கணேசமூர்த்தி (அஞ்சல் அதிபர், வசாவிளான்), சுகந்தா, காஜத்திரி ஆகியோரின் மாமனும், அனுசியா, தனேஸ், தர்ஷன், தர்ஷா, சஞ்ஜீவன், பிரிஜங்கா, ரஜிதன், திபிஷா, சானுஜன், நிறோஜன், நிலக்சன், விதுசன், வினுசன், அபிநயன், ஆகாஷ், அனுஷ், றிசானா, சகானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு ஊரெழு கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

(12199)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகம்பம் - சுனாமி - அழிவு
## தலைவர்களைப் பலிகொண்ட ஆண்டு

## உலக அரங்கில் 2011

### ஜனவரி

ஜன-01 இஸ்ரேல் முன்னாள் ஜனாதிபதி மொஷே கட்சவ் பாலியல்வல்லுறவுக் குற்றவாளி என்று அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.
ஜன-02 எகிப்தில் கார்க்குண்டு வெடிப்பில் 21 பேர் உயிரிழப்பு, மேற்கு கரையில் அமைக்கப்படும் சர்ச்சைக்குரிய தடுப்புச் சுவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம்.
ஜன-03 ஆஸ்திரேலியாவில் கடும் வெள்ளம் காரணமாக 22 நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.
ஜன-10 ஈரான் விமான விபத்தில் 72 பேர் பலி.
ஜன-11 'ராடர்' கண்ணில் மண்ணைத் தூவும் போர் விமானத்தை தயாரித்தது சீனா.
ஜன-12 தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகை ஷோபனா சென்னையில் தற்கொலை.
ஜன-13 இலங்கை அரசை விமர்சித்ததால் 'செங்கடல்' திரைப்படத்துக்கு தடை.
ஜன-17 அயர்லாந்து அழகுராணி மிச்கேவா மிக் அரியாலி படுகொலை.
ஜன-18 இசையமைப்பாளர் ரகுமானுக்கு அமெரிக்க திரைப்பட விருது.
ஜன-19 ஐவரிகோஸ்ட் மீது ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத்தடை.
ஜன-23 டுனிசியா ஜனாதிபதி பென் அலி 1.5 தொன் தங்கத்துடன் வெளிநாட்டுக்குத் தப்பி ஓட்டம்.
ஜன-24 ஈரானுடனான அணுசக்திப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததாக மேற்கத்தைய நாடுகள் அறிவிப்பு.
ஜன-25 பிரேஸிலில் கடும் வெள்ளத்தால் 800 பேர் பலி.
ஜன-27 ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிலுள்ள விமான நிலையத்தில் மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 35பேர் பலி.
ஜன-28 அணு ஆயுத ஒப்பந்தத்துக்கு ரஷ்ய நாடாளுமன்றம் முதன் முறையாக ஒப்புதல்.
ஜன-29 பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக அப்ரிடி நியமனம்.
ஜன-30 சூரிய குடும்பத்தில் கடும் வெப்பமான டபிள்யூ.ஏ.எஸ்.பி-33 'பி' என்ற கிரகம் கண்டுபிடிப்பு.
ஜன-31 உலகின் மிக வயதான பெண்ணான சான் போர்ன் 115 வயதில் அமெரிக்காவில் மரணம்.



28 வருடக் கனவு...

### பெப்ரவரி

பெப்-01 தென் சூடான் உருவாவதற்கு ஆதரவாக 99 சதவீத வாக்குப்பதிவு எகிப்தில் அரசக்கு எதிரான கலவரத்தில் 150 பேர் பலி மியன்மாரின் நாடாளுமன்றம் 20 ஆண்டுகளின் பின்னர் கூடியது.
பெப்-02 இந்தியாவில் "2ஜி" ஊழலில், அமைச்சர் ஆர். ராசா கைது.
பெப்-04 நேபாள பிரதமராக ஜலநாத் தேர்வு.
பெப்-06 எகிப்திய ஆளும் கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து பதவி விலகினார் ஹோஸ்னி முபரக்.
பெப்-09 பாகிஸ்தானுடனான உயர்மட்டத் தொடர்பை துண்டித்தது அமெரிக்கா.
பெப்-10 வடகொரியா-தென்கொரியா இராணுவ மட்டப்பேச்சுக்கள் தோல்வி.
பெப்-11 மக்கள் புரட்சியின் எதிரொலி. எகிப்து அதிபர் கொஸ்னி முபாரக் இராஜினாமா.
பெப்-16 ஈரானில் அரசுக்கெதிரான போராட்டம் வெடிப்பு
பெப்-19 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் ஆரம்பம்.
பெப்-20 பிரபல பின்னணிப் பாடகர் மலேசியா வாசுதேவன் மரணம்.
பெப்-22 லிபியாவில் கடாபிக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 200 பேர் மரணம்
பெப்-25 அமெரிக்க-பாகிஸ்தான் தளபதிகள் ஓமானில் இரகசியப்பேச்சு.
பெப்-27 ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் லிபியா மீதான தடை நிறைவேற்றம் .
பெப்-31 டுனிஷிய பிரதமர் முகம்மது கண்ணோல்சி இராஜினாமா.


நீண்டநாள் காதலர்கள் கரம்பிடிப்பு...

### மார்ச்

மார்ச்-03 ஐ.நா. மனித உரிமை சபையில் இருந்து லிபியா நீக்கம்
மார்ச்-08 "பதவி விலக மாட்டேன், முடிந்ததை செய்து பாருங்கள்" கடாபி தெரிவிப்பு
மார்ச்-09 குவைத்தின் பிரதமர் ஷேக்நாசர் முகமது சுல் பதவி விலகக்கோரி நாடாளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம்.
மார்ச்-10 நைஜீரியாவில் விசமண்-தண்ணீரால் 400 இற்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழப்பு.


இயற்கையைச் சீண்டியதன் பரிசு...

மார்ச்-11 ஜப்பானில் ஆழிப்பேரலை காரணமாக 140 முக்கிய இடங்கள் நிர்மூலம்; மியாமி அணு உலை வெடித்தது. ரிச்சட் அளவில் 8.9 பதிவு, 2 ஆயிரம்பேர் பலி.
மார்ச்-14 ஹவாய்த் தீவையும் ஆழிப்பேரலை தாக்கியது.
மார்ச்-19 லிபியா மீது அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் கடும் தாக்குதல்.
உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் 34 ஆட்டங்களில் தொடர் வெற்றி. ஹட்றிக் சாதனை பாகிஸ்தானுடனான ஆட்டத்துடன் முடிவு.
மார்ச்-22 லிபியா அதிபர் கடாபியின் ஆறாவது மகன் ஹாமிஸ் படுகொலை.
மார்ச்-25 மியன்மாரில் ஏற்பட்ட 6.8 ரிச்சர் அளவு நிலநடுக்கத்தால் 50 பேர் வரையில் பலி.
மார்ச்-29 ஏமனில் அல்-குவைதா தாக்குதல், தீயில் 70 பேர் பலி.
மார்ச்-31 விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளின் அஸ்தி கன்னியாகுமரியில் கரைப்பு


வல்லரசுக்கே தண்ணி காட்டிய ஒசாமா...

### ஏப்ரல்

ஏப்-02 11 ஆவது உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியா வெற்றி.
ஏப்-06 தென்னிந்திய திரைப்பட முன்னணி நடிகையான சுஜாதா மரணம்.
ஏப்-10 இஸ்ரேல் விமானக் குண்டு வீச்சில் பலஸ்தீன காஸா எல்லையில் 14 பேர் உயிரிழப்பு.
ஏப்-12 ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி குவாக்கோ ஐ.நா. அமைதிப் படையால் கைது.
ஏப்-13 இந்தியாவின் தமிழக சட்டசபைத் தேர்தல்.
ஏப்-15 தமிழக காங்கிரஸ் கட்சி உடைவு.
ஏப்-18 லிபியாவின் மிஸ்ரட்டா நகரக் குடியிருப்புக்கள் மீது கடாபி படை கொத்துக் குண்டுத் தாக்குதல்.
ஏப்-19 நைஜீரியாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது தடவையாகவும் ஜோனாதன் வெற்றி.
ஏப்-20 கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ ராஜினாமா.
ஏப்-21 சத்திய சாயிபாபாவின் உடல் நிலை மோசம்; சிகிச்சை அளிக்க அமெரிக்காவிலிருந்து மருத்துவர் குழு.
ஏப்-24 சத்திய சாயிபாபா மகா சமாதியானார்.
ஏப்-29 பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் கேற்மிடில்ரன் திருமணம் பெரும் ஆடம்பரமாக நடந்தேறியது.


மகா சமாதியான சத்தியசாயிபாபா

### மே


மே-01 அமெரிக்க கூட்டுப்படைத் தாக்குதலில் கேணல் கடாபியின் புதல்வர் சைப் அல் - அராபும், மூன்று பேரன்களும் பலி. நடிகரும் மயாஜால நிபுணருமான அலெக்ஸ் மரணம்.
மே-02 அமெரிக்காவால் நீண்ட காலம் தேடப்பட்டு வந்த ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானில், அமெரிக்கப்படைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
மே-03 இலங்கையில் பிறந்த தமிழ்ப் பெண்ணான ராதிகா சிற்சபேசன் கனேடிய தேர்தலில் வெற்றி .
மே-09 ஈராக் சிறையில் தீவிரவாதிகளின் திடீர் கலவரத்தில் 11 பேர் பலி.
மே-11 பங்குச் சந்தை மோசடியில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட செல்வந்தர் ராஜ் ராஜரட்ணம் குற்றவாளி என்று அமெரிக்கா அறிவிப்பு.
மே-12 லிபியாவிலிருந்து இத்தாலிக்குச் சென்ற கப்பல் உடைந்ததால் 600 பேர் மரணம்.
மே-13 தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி. மீண்டும் மூன்றாவது தடவை முதல்வரானார் ஜெயலலிதா.
மே-20 2 'ஜி' அலைக்கற்றை முறைகேட்டு வழக்கில் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகள் கனிமொழி எம்.பி. சிறையில் அடைப்பு.
மே-26 ஏமனில் பழங்குடிப் படையினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற கடும் சண்டையில் 68 பேர் உயிரிழப்பு.
மே-28 நான்காவது ஐ.பி.எல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தொடர்ந்தும் இரண்டாவது முறையாகவும் சம்பியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகம்பம் - சுனாமி - அழிவு

## தலைவர்களைப் பலிகொண்ட ஆண்டு

# உலக அரங்கில் 2011



சாதனைத் தந்தையின் மறைவு....ஸ்ரீல்

### ஜூன்

ஜூன்-05 ஈராக்கின் திக்ரீத் நகரில் மசூதி, வைத்தியசாலை மீது வெடி குண்டுத் தாக்குதல். 24 பேர் பலி.

ஜூன்-07 பெரு நாட்டின் அதிபர் தேர்தலில் அலன்டோ ஹீ மாலா வெற்றி.

ஜூன்-08 இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக்கோரி ஜெயலலிதாவால் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்.

ஜூன்-14 தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் சொகுசுக் கப்பல் சேவை 30 வருடங்களின் பின்னர் ஆரம்பம்.

ஜூன்-17 அல் - குவைதா இயக்க புதிய தலைவராக ஷேக் அய்மன் அல் ஜவாஹிரி தேர்ந்தெடுப்பு.

ஜூன்-21 அதிகாரத்தைப் பயன்படுத்தி வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்தமைக்காக துனிஷிய முன்னாள் அதிபர் ஜீனி அல்- சுபதீனுக்கு 35 ஆண்டு சிறைத் தண்டனை விதிப்பு.

ஜூன்-23 ஐ.நா பொதுச் சபைத் தலைவராக கட்டார் நாட்டைச் சேர்ந்த நஸீர் அப்துல்லா அஜீஸ் - அல் நாஸர் தேர்வு

ஜூன்-26 ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூரில் வைத்தியசாலையொன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 60 பேர் பலி

ஜூன்-27 ரஜனியின் 'எந்திரன்' படத்துக்கு 12 ஆவது சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் 3 விருதுகள்.

ஜூன்-28 இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலாளராக ரஞ்சன் மத்தாய் நியமனம்.



ஒரு புரட்சி வெற்றிபெற்றது...தென்சூடான்

### ஜூலை

ஜூலை-7 இந்திய மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் ராஜினாமா.

ஜூலை-9 சூடான் நாட்டிலிருந்து பிரிந்த தெற்கு சூடான் என்னும் புதிய நாட்டின் முதலாவது சுதந்திர தினம்.

லை-10 பிரிட்டனில் புகழ்பெற்ற 'நியூஸ் ஒப் தி வேர்ல்ட்' பத்திரிகை மூடப்பட்டது.

லை-21 அமெரிக்காவின் கடைசி விண்வெளி ஓடமான அட்லாண்டிஸ் 30 ஆண்டு கால பயணத்தை முடித்துக்கொண்டு பூமிக்குத் திரும்பியது.

ஜூலை-25 அதிவேக புல்லட் ரயில் மோதி சீனாவில் 35 பேர் பலி.

### ஓகஸ்ட்

ஓக-2 பசுபிக் நாடான பப்புவா நியூகினியாவின் புதிய பிரதமராக பீட்டர் ஓ நீல் தெரிவு

ஓக-8 பிரிட்டன் தலைநகர் லண்டனில் கலவரம் வெடிப்பு.

ஓக-14 நேபாள பிரதமர் கலால் நாத்கனால் ராஜினாமா.

ஓக-16 ஊழலுக்கு எதிராக காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப்போவதாகத் தெரிவித்த ஹஸாரே கைது.

ஓக-21 லிபிய தலைநகர் திரிபோலியில் கடாபி ஆதரவுப் படைக்கும், புரட்சிப் படைக்கும் இடையே மோதல். 1,300 பேர் பலி

ஓக-23 லிபியா முழுவதும் புரட்சிப் படைகளின் கட்டுப்பாட்டில்.

ஓக-30 ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற மூவரைத் தூக்கிலிட இருமாதத் தடைவிதித்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு.

### செப்ரெம்பர்

செப்-7 டில்லி உயர் நீதிமன்ற வாயிலில் குண்டு வெடிப்பில் 9 பேர் பலி.

செப்-8 நைஜீரியாவில் இனக்கலவரத்தில் 18 பேர் பலி.

செப்-9 தென்னிந்திய நடிகை காந்திமதி 65 ஆவது வயதில் காலமானார்.

செப்-11 இந்தியாவின் 58ஆவது தேசிய திரைப்பட விழாவில் ''தாதா சாஹேப்' விருதினை தமிழக திரைப்பட இயக்குநர் கே. பாலச்சந்தர் பெற்றார்.

செப்-13 2011 ஆம் ஆண்டின் மிஸ் யுனிவர்சலாக அங்கோலா நாட்டைச் சேர்ந்த லைலா லூப்ஸ் தெரிவு.
நைரோபியாவில் பெற்றோல் குழாய் வெடித்து 120 பேர் பலி.

செப்-14 பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் வெள்ளப் பெருக்கு காரணமாக 219 பேர் உயிரிழப்பு.

செப்-16 டென்மார்க் நாடாளுமன்றத் தேர்தலில் அந்த நாட்டின் முதல் பெண் பிரதமராக ஹெல்லே தெரிவு.

செப்-19 இந்திய சிக்கிம் பூகம்பத்தில் சிக்கி 40 பேர் பலி.

செப்-21 ஆப்கன் தலைநகரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் முன்னாள் அதிபர் ரப்பானி படுகொலை.




சர்வாதிகாரத்தின் ஒடுக்கம்....கடாபி

### ஒக்ரோபர்

ஒக்-5 அப்பிள் நிறுவனத்தை உருவாக்கிய ஸ்டீவ் கோப்ஸ் புற்றுநோயால் காலமானார்.

ஒக்-9 மூன்றாவது சம்பியன் லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் கிண்ணம் வென்றது.

ஒக்-10 போலந்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் டொனால்ட் டஸ்க் பிரதமராகத் தெரிவு.

ஒக்-20 லிபிய ஜனாதிபதி மும்பர் கடாபி கிளர்ச்சிப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஒக்-31 உலக சனத்தொகையில் 700 கோடியை நிறைவுசெய்த குழந்தை பிலிப்பைன்ஸில் பிறப்பு.

### நவம்பர்

நவ-1 அமெரிக்காவின் கடும் எதிர்ப்பின் மத்தியிலும் பலஸ்தீனத்துக்கு 'யுனெஸ்கோ'வில் நிரந்தர உறுப்புரிமை.

நவ-3 வெள்ளத்தில் மின் கசிந்ததில், அதனூடாக சென்று கொண்டிருந்த 50 பேர் தாய்லாந்தில் துடிதுடித்து மரணம்.

நவ-7 2011 ஆம் ஆண்டுக்கான உலக அழகியாக வெனிசுலா நாட்டைச் சேர்ந்த சர்கோஸ் கொலி மெனார்ஸ் தெரிவு.

நவ-11 கிறீஸ் நாட்டின் புதிய பிரதமராக லூகாஸ் பப்படெமோஸ் தெரிவு.

நவ-13 அரபு லீக் அமைப்பிலிருந்து சிரியா இடை நிறுத்தம்.

நவ-27 நேட்டோப் படையின் திடீர் தாக்குதலில் பாகிஸ்தான் படைவீர்கள் 28 பேர் பலி.




அழகின் அழகே நீ யாரடி?-லைலா?

### டிசெம்பர்

டிசெ-2 இந்தோனேஷியாவில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்குண்டு 35 பேர் உயிரிழப்பு.

டிசெ-4 ஈரானிய வான்பரப்புக்குள் ஊடுருவிய அமெரிக்க ஆ.கியூ-170 ரக ஆளில்லா விமானத்தை ஈரானிய புரட்சிப்படை சுட்டு வீழ்த்தியது.

டிசெ-5 முல்லைப் பெரியாறு அணையை உடைக்கத் துடிக்கும் கேரளாவைக் கண்டித்து தமிழ் நாட்டின் தேனீ மாவட்டம் கடலூரைச் சேர்ந்த இளைஞரொருவர் தீக்குளித்து மரணம்.

டிசெ-6 ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மற்றும் மஸார் இஷெர்ப் ஆகிய இரு நகரங்களில் நடத்தப்பட்ட இரு தற்கொலைத் தாக்குதல்களில் 34பேர் உயிரிழப்பு.

டிசெ-7 டிசெம்பர் 4ஆம் திகதி நடத்தப்பட்ட ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் புடின் வெற்றிபெற்றதுக்கு எதிராக மக்கள் பேரணி.

டிசெ-8 கிரிக்கெட் அரங்கில் ஒருநாள் ஆட்டத்தில் அதிகூடிய ஓட்டமாக 219 ஓட்டங்களை சேவாக், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக விளாசினார்.

டிசெ-15 ஈராக்கில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப்படைகள் 9 ஆண்டுகளின் பின்னர் அங்கிருந்து வெளியேறின.

டிசெ-17 பிலிப்பைன்ஸில் புயல் காரணமாக ஒரே நாளில் 436 பேர் உயிரிழப்பு.

டிசெ-19 வடகொரியாவின் கம்யூனிஸ்ட் சர்வாதிகாரியான கிம் ஜோங் 69 வயதில் காலமானார்.

டிசெ-25 நைஜீரியாவில் குண்டுவெடிப்பு; 100 பேர் உடல் சிதறிப்பலி.

டிசெ-26 இந்தியப் பிரதமர் மன்மோகன் தமிழ்நாடு வருகை.


டிசெ-27 மணிக்கு 500 கி.மீ. அதிவேக ரயில் சோதனை ஓட்டம் சீனாவால் நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு - ஏமாற்றம் - இழுபறி

## முடிவில்லாப் பேச்சுடன் முடிந்த ஆண்டு

இலங்கை அரங்கில் 2011



புதுத்திறப்பு... சங்குப்பிட்டிப்பாலம்.

### ஜனவரி

ஜன.1 அரசு - கூட்டமைப்பு பேச்சு இடம் பெறும் சாத்தியம் இருப்பதாக கூட்டமைப்புத் தெரிவிப்பு.
யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தொடர் கொலை, கொள்ளைகளையடுத்து இராணுவம் மீண்டும் இரவுநேரச் சோதனை.
கிளிநொச்சியில் வெள்ளை வானில் மாணவன் கடத்தப்பட்டு விடுவிப்பு.

ஜன.4 குடாநாட்டின் கொலை, கடத்தல்களை ஆராய சர்வகட்சிக் குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கோரிக்கை.

ஜன.6 ஐ.நா.நிபுணர் குழு இலங்கைக்கு விசாரணைக்கு வந்தால் 'விஸா' வழங்கப்படமாட்டாது- கெஹலிய.

ஜன.7 தமிழ்க் கட்சிகளின் அரங்கம் குழம்பியது.

ஜன.10 அரசு- கூட்டமைப்பிடையே முதலாவது சந்திப்பு ஆரம்பம்.

ஜன.14 யாழ்ப்பாணத்தில் வைத்து முதல் முறையாக 78 முன்னாள் போராளிகள் விடுவிப்பு.

ஜன.16 கேரதீவு- சங்குப்பிட்டிப் பாலம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு.

ஜன.17 யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தலைமையில் தேசிய பொங்கல் விழா.

ஜன.18 பண்ணை முதல், ஊர்காவற்றுறை வரையான பகுதிகளின் பாதுகாப்பு கடற்படையினரிடமிருந்து இராணுவத்துக்கு இடமாற்றம்.

ஜன.20 யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக தமிழ்ப் பொலிஸார் கடமையேற்பு.

ஜன.21 யாழ். நகரில் இந்தியன் வங்கிக் கிளை இந்தியத்தூதுவர் அசோக் கே. காந்தாவால் திறந்து வைப்பு.
யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடுகை.

ஜன.22 யாழ். பிரதம தபாலகத்தில் சுங்கத் திணைக்கள அலுவலகம் திறப்பு.
பூநகரியில் கௌதாரி முனையில் அழிவடைந்த நிலையில் புராதன இந்து ஆலயம் கண்டுபிடிப்பு.

ஜன.24 'அ'புர சிறைச்சாலையில் சிறை அதிகாரிகளுக்கும் கைதிகளுக்கும் இடையிலான மோதலில் ஒருவர் பலி, 25 பேர் காயம்.
அமெரிக்க தகவல் கூடம் யாழ். நகரில் அமெரிக்க தூதர் பற்றீசியாவினால் திறந்து வைப்பு

ஜன.25 அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட மஹிந்தவுக்கு எதிராக வெள்ளை மாளிகை முன் ஆர்ப்பாட்டம்.

ஜன.26 அரசு - புலம் பெயர்ந்த தமிழர் களிடையே தூது செல்ல தாம் தயாரென சொல்ஹெயிம் என்று பகிரங்க அறிவிப்பு.

ஜன.27 யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான அரச தரப்பின் அனைத்து வேட்பு மனுக்களும் நிராகரிப்பு.

ஜன.30 அரச பாதுகாப்புடன் கே.பி. யாழ்ப்பாணத்துக்கு வருகை.

ஜன.31 லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தீ வைத்து எரிப்பு

### பெப்ரவரி

பெப்.4 நாட்டில் 15 மாவட்டங்களிலும் கடும் மழை - 3 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு.

பெப்.9 ஸ்ரீமகா போதி அரச மரக்கிளை யாழ். நகரில் பவனி.

பெப்.10 தடுப்புக் காவலில் உள்ள விடுதலைப் புலிகளின் விசாரணையைத் துரிதப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு.

பெப்.11 கொழும்பு - தூத்துக்குடி சரக்குக் கப்பல் சேவை ஆரம்பம்.

பெப்.15 எல்லை மீறிய இந்திய மீனவர்கள் 112 பேர் பருத்தித்துறையில் சிறைப்பிடிப்பு.

பெப்.20 தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள் மரணம்.
உள்ளூராட்சி தேர்தல் யாழ்ப்பாணத்தில் ஒத்திவைப்பு.

பெப்.25 செஞ்சிலுவை சர்வதேசக்குழு யாழ். அலுவலகம் மூடப்பட்டது.



அழித்தவர்களின் அழிவு....கிபீர் விமானம்

### மார்ச்

மார்ச்.1 கம்பஹா வான் பரப்பில் முள்ளிவாய்க்காலில் குண்டு மழை பொழிந்த 'கிபிர்' விமானம் வெடித்துச் சிதறியது.

மார்ச்.4 தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் இல்லம் அமைந்திருந்த கோப்பாயில் இராணுவத்தினரின் 51 ஆவது படைத் தலைமையகம் திறப்பு.

மார்ச்.7 தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பயணித்த வாகனம் மீது நொச்சியாகமாவில் வைத்துக் கைக்குண்டுவீச்சு, துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்.

மார்ச்.8 ஒல்லாந்தர் காலத்து தொல்லியல் சின்னங்கள் - சாவகச்சேரி புதிய நீதிமன்ற வளாகத்தில் மீட்பு.

மார்ச்.14 யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவப் பதிவை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றம் சென்றது.

மார்ச்.17 முதற்கட்டமாக நடைபெற்ற 234 உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றி.

மார்ச்.29 யாழ். பல்கலைக்கழக புதிய துணைவேந்தராக வசந்தி அரசரட்ணம் நியமனம்.
இலங்கையில் முரளிதரன் இறுதியாக ஆடிய ஒரு நாள் ஆட்டம். (நியூஸிலாந்துக்கு எதிரானது)

மார்ச்.30 1996 ஆம் ஆண்டு உரும்பிராயில் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்யப்பட்ட ரஜனி கொலை வழக்கில் 3 சிப்பாய்களுக்கு மரண தண்டனை விதித்தது நீதிமன்றம்.

மார்ச்.31 முல்லைத்தீவுக் கடலில் ரோந்து சென்ற கடற்படையினரின் படகிலிருந்த 4 கடற்படையினர் மாயம். படகு மட்டும் சேதமின்றி கரை ஒதுங்கியது.

### ஏப்ரல்

ஏப்.2 இலங்கையின் சுழல் நாயகன் முரளிதரன் சர்வ தேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு.


ஏப்.4 யாழ். மாநகர சபையின் ஆளுந்தரப்பில் முதலாவது பிளவு. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்துச் செயற்பட முடிவு.

ஏப்.7 யாழ். மாநகர சபையின் ஊழலை வெளிக்கொண்டுவந்ததற்காக ''உதயனுக்கு'' மாநகரசபை வளாகத்துக்குள் தடை.

ஏப்.11 யுத்தம் முடிவடைந்த பின்னர் வருமானத்துக்காக குற்றச் செயல்களில் ஈ.பி.டி.பி மற்றும் கருணா குழு ஈடுபட்டதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிக்கை வெளியீடு.
கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரால் மாவீரர் நாள் நிகழ்வுகள்.

ஏப்.12 இலங்கையின் இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில், ஐ.நா.செயலாளர் பான்கீமூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையை வெளியிட்டது..

ஏப்.28 2002 ஆம் ஆண்டு மிருசுவில் எண்மர் படுகொலை வழக்கில் சம்பவம் இடம் பெற்ற இடத்தை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேரடி ஆய்வு.



எப்போது முடியும்....பேச்சுவார்த்தை

### மே

மே.3 அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்குப் பொறுப்பான துணைச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் வன்னிக்குப் பய ணம்.

மே.9 21 வருடங்களின் பின்னர் மாவிட்டபுரம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகள் மக்கள் பாவனைக்கு விடுவிப்பு.

மே.10 இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளரும் அகதிகளுக்கான ஐ.நா. அபிவிருத்தித்திட்ட வதிவிடப் பிரதிநிதியுமாக சுபினே நாண்டி நியமிப்பு.

மே.12 உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட அரச தரப்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் தீர்ப்பு.

மே.16 வன்னியில் இறுதிக்கட்டப் போரின் போது கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் அஞ்சலி.

மே.18 வன்னியில் பலியான மக்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் துக்க தினம் பிரகடனம்.
இலங்கையின் முதல் பெண் பிரதம நீதியர்சராகக் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா பதவிப் பிரமாணம்.

மே.19 முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளின் நினைவு யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு.

மே.23 பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு இராணுவ முகாமில் தலைமைத்துவப் பயிற்சி ஆரம்பம்.

மே.28 உதயன் அலுவலகச் செய்தியாளர் செ. கவிதரன் மீது சரமாரித் தாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு - ஏமாற்றம் - இழுபறி

## முடிவில்லாப் பேச்சுடன் முடிந்த ஆண்டு

இலங்கை அரங்கில் 2011


### ஜூன்

ஜூன்.6 கொக்காவில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறப்பு.

ஜூன்.16 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அளவெட்டியில் நடத்திய உள்ளூராட்சித் தேர்தல் விளக்கக் கூட்டத்துள் புகுந்த இராணுவத்தினர் அங்கு சமுகமளித்திருந்தோர் மீது தாக்குதல்.

புதிய பொலிஸ்மா அதிபராக என்.கே. இலங்கக்கோன் நியமனம்.

ஜூன்.28 நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவு எதுவாயினும் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவிப்பு.



உண்மையைச் சொன்னதன் பரிசு.... குகநாதன்.

### ஜூலை

ஜூலை.2 கிறீஸ் தலைநகர் எதேன்ஸில் நடைபெற்ற மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக்கில் யாழ்ப்பாணம் சிவபூமி மாணவன் துஷ்யந்தனுக்கு வெள்ளிப் பதக்கம்.

ஜூலை.6 இலங்கையின் மூத்த தமிழ்ப் பேராசான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 84 ஆவது வயதில் காலமானார்.

ஜூலை.23 யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக சபைகளைக் கைப்பற்றி அமோக வெற்றி.

ஜூலை.25 யாழ்ப்பாணத்தில் சிறுவர் புற்றுநோய் வைத்தியசாலையை நிர்மாணிக்கும் முகமாக இடம்பெற்ற நடைபயணம் யாழ்ப்பாணம் வந்தடைந்தது.

ஜூலை.27 தெல்லிப்பழையில் சிறுவர் புற்று நோய்ச் சிகிச்சை பிரிவுக்கான அடிக்கல்லை இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தனா நாட்டினார்.

ஜூலை.28 யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 இலிருந்து 6 ஆகக் குறைப்பு.

ஜூலை.29 உதயன் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீது காடையர்களால் கொலை வெறித்தாக்குதல்.

### ஓகஸ்ட்

ஓக.1 இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான மீட்புப் பணி, என்று அரசு விவரிக்கும் செயற்பாடுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சால் தயாரிக்கப்பட்ட 'மனிதாபிமான நடவடிக்கை- உண்மை பகுப்பாய்வு ஜூலை 2006 -மே 2009 அறிக்கை வெளியீடு.

ஓக.2 உதயன் பத்திரிகை செய்தி ஆசிரியர் மீதான தாக்குதலை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்.

ஓக.3 யாழ். முத்திரைச் சந்தியில் அமைந்திருந்த சங்கிலியன் சிலை முற்றாக தகர்க்கப்பட்டு மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

ஓக.4 அரசு - தமிழ் தேசியக் கூட்டமைப்பிடையிலான பேச்சுவார்த்தை 10 ஆவது சுற்றுடன் இழுபறியில்.

ஓக.11 'கிறீஸ் மனிதன்' பீதியால் ஹப்புத்தளையில் இருவர் வெட்டிக்கொலை.

ஓக.16 உதயன் பத்திரிகை செய்தி ஆசிரியர் மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்.

ஓக.20 வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் நல்லூரில் பதவியேற்பு.

ஓக.22 படையினர் - பொது மக்கள் இடையே நாவாந்துறையில் அடிதடி துப்பாக்கிச் சூடு, வீடுகளுக்குள் புகுந்த படையினர் ஆண்களைப் பிடித்துச் சென்றனர்.

ஓக.25 30 ஆண்டுகாலமாக இருந்து வந்த அவசரகாலச் சட்டம் ஜனாதிபதியால் நீக்கம்.

### செப்ரெம்பர்

செப்.4 ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உதயனுக்கு விஜயம்.

செப்.13 அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்குக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்.

செப்.16 வடமராட்சி தம்பசிட்டி மாயக்கைப் பகுதியில் 7 லட்சம் ஆண்டுக்கு முற்பட்ட கற்கால ஆயுதம் மீட்பு.

செப்.20 கொக்கிளாயில் சிங்களக் குடியேற்றம், 45 குடும்பங்களுக்குப் புதிதாக காணிகள்.

செப்.28 மரபுரிமைச் சின்னமான யாழ்ப்பாணத்தின் பழைய பூங்கா வடமாகாண ஆளுநரின் உத்தரவுக்கு அமைய இடித்தழிப்பு.

### ஒக்ரோபர்

ஒக்.2 இலங்கையின் வடமேற்கே மன்னார் கடற்பரப்பில் முதலாவது எரிவாயு கிணறு கண்டுபிடிப்பு.

ஒக்.6 குரும்பசிட்டியில் 21 வருடங்களின் பின்னர் பொதுமக்கள் மீளக்குடியமர்வு.

ஒக்.8 ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரேமச்சந்திர கொலன்னாவையில் தேர்தல் பிரசாரத்தின்போது சுட்டுக் கொலை.

ஒக்.9 இந்திய வெளியுறவுச் செயலாளராகப் புதிதாகப் பதவியேற்ற ரஞ்சன் மத்தாய் யாழ். விஜயம்.

ஒக்.16 யாழ். பல்கலைக்கழக மாணவர் தலைவர் சுப்பிரமணியம் தனபாலசிங்கம் மீது இனந்தெரியாதோரால் தாக்குதல்.

ஒக்.17 காணிப்பதிவை எதிர்த்து வவுனியா நகர சபை மண்டபத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உண்ணாவிரதம்.

ஒக்.30 திருகோணமலையில் தந்தை செல்வாவின் சிலையின் தலை கொய்து வீசப்பட்டது.



அறிக்கைக்குப் பொய்யழகு... நல்லிணக்க ஆணைக்குழு

### நவம்பர்

நவ.8 கீரிமலை - தொண்டமானாறு கடற்பிரதேசத்தில் மீன் பிடிக்க 21 வருடங்களின் பின்னர் அனுமதி.

நவ.9 வடக்குக் - கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட 'பிம்சவிய' காணி உரித்துப் பதிவு திட்டத்தை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவு.

நவ.10 யாழ். நகரப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஹெரோயின் பாவனை, அதிரடி நடவடிக்கையில் போதைப் பொருள் விநியோகித்த ஒருவர் கைது.

நவ.11 இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வேயின் பங்குப் பணிகளை மீளாய்வு செய்யும் அறிக்கை வெளியீடு.

2018 ஆம் ஆண்டு இலங்கையில் கொமென்வெல்த்போட்டிகளை நடத்தும் வாய்ப்பை இலங்கை கோட்டை விட்டது.

நவ.18 சரணடைந்த புலித் தலைவர்களைக் கொல்ல கோத்தபாய உத்தரவு எனப் பொய்யுரைத்தமைக்காக முன்னாள இராணுவத் தளபதி பொன்சேகாவுக்கு 3 வருடச் சிறை.

இலங்கையில் முதன்முறையாகப் பார்வைப் புலனற்றோர் வாசிக்கக் கூடிய 'பிரேய்லி' எழுத்து பத்திரிகை வெளியிடப்பட்டது.

நவ.20 நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி மஹிந்தவிடம் கையளிப்பு.

நவ.23 6 மாதங்களுக்குள் அரசியல் தீர்வை காணும் பொருட்டு அமைக்கப்படவுள்ள தெரிவுக்குழுவுக்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு.

நவ.24 இலங்கையின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த (வயது - 73) காலமானார்.

நவ.27 யாழ். பல்கலைக்கழக விடுதியில் மாவீரர் சுடர் ஏற்றப்பட்டது.

இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை தெற்கில் ஜனாதிபதி மஹிந்தவால் திறந்து வைப்பு.



தலைவனைப் பெற்ற தாய்... பார்வதி அம்மாள்.

### டிசெம்பர்

டிசெ.5 வடமாகாண பிரதம செயலாளராக திருமதி விஜயலட்சுமி ரமேஷ் நியமனம்.

டிசெ.6 காணி, பொலிஸ், வடக்கு - கிழக்கு இணைப்பு கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுமேசையில் முன்வைத்தது.

டிசெ.7 வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்.

டிசெ.9 அச்சுவேலி தொழிற்பேட்டை புனரமைப்பை இந்தியா பொறுப்பேற்பு, 1.7 மில்லியன் செலவில் புனரமைப்பு.

டிசெ.10 மனித உரிமை தினத்தில், நாம் இலங்கையர் அமைப்பின் வடக்கு இணைப்பாளர் லலித் குமார் மற்றும் குகன் ஆகிய இருவரும் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிப்பு.

டிசெ.14 யாழ்.பொதுநூலகம், தந்தை செல்வா நினைவுத் தூபி உள்ளிட்ட யாழ்ப் பாணத்தின் முக்கிய கட்டடங்களை வடிவமைத்த கட்டடக்கலை நிபுணர் வி.எஸ். துரைராஜா காலமானார்.

டிசெ.16 நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு.

டிசெ.19 நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிப்பு.

ஐ.தே.க. தலைமைப் பதவியை ரணில் மீண்டும் கைப்பற்றினார்.

டிசெ.22 காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க முடியாது என அரசு திட்டவட்டமாக அறிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## கிளிநொச்சி மாவட்ட மட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் - 2012

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திணைக்களங்களுக்கு (கச்சேரி மற்றும் பிரதேச செயலகங்கள் உட்பட)2 மில்லியனுக்குட்பட்ட வேலைகளை செய்ய விருப்பமுடைய கிளிநொச்சி மாவட்டத்தினை முகவரியாகக் கொண்ட ஒப்பந்தகாரர்கள் (தரம் M-VII க்கான அல்லது அதற்கு மேற்பட்ட நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திற்கான நிறுவகத்திடமிருந்து செல்லுபடியான பதிவொன்றை அல்லது 10 மில்லியன் ரூபாவுக்காக ஓர் அரசாங்கத் திணைக்களத்திலான பதிவொன்றை வைத்திருத்தல் வேண்டும்.) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2012 ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தகாரர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்ப படிவங்களை மாவட்ட செயலகத்தில் நிர்வாகக்கிளையில் 01.01.2012 தொடக்கம் 15.01.2012 வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் ப.ப 3.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை இடும் கடித உறையின் (9''X4'') இடது பக்க மேல் மூலையில் ''வேலை அளிப்பு ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தல்- 2012'' எனக் குறிப்பிட்டு தபாலில் அனுப்புவதாயின் ''அரசாங்க அதிபர்'' நிர்வாகக்கிளை, மாவட்ட செயலகம் கிளிநொச்சி''எனும் முகவரிக்கு 30.01.2012 பி.ப 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஒப்பந்த வேலைகள் தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வேலையின் தன்மைக் கேற்ப தகுதியானவர்களிடமிருந்தே 2012ம் ஆண்டிற்கான ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என்பதால் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கோ ஏனைய சகல திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ ஒப்பந்த வேலைகள் வழங்க விருப்பமுடையவர்கள் இம் மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று பதிவுகள் மேற்கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்ப வைத்தல் வேண்டும்.

திருமதி.ரூ.கேதீஸ்வரன்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர் ,கிளிநொச்சி மாவட்டம்

# அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபை பிடிக்கின்ற உரிமை கோராத கட்டாக்காலி மாடுகளை 05.01.2012 வியாழக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு வியாழனும் திங்களும் முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும். உடனே முழுப்பணத்தையும் செலுத்தி கேள்விக்காரர்கள் மாடுகளை அப்புறப்படுத்த வேண்டும்.

**சிற்றம்பலம் துரைராசா,**
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்

# அரசாங்கஅறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலகம்,
பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கான

## வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2012

கிளிநொச்சிமாவட்டச் செயலகத்திற்கும்,பிரதேசசெயலகங்களிற்கும் கீழ் குறிப்பிடப் பட்டிருக்கும் பொருள்கள்,சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடையவழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்கள் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடமிருந்து 2012ம் ஆண்டுக் கானபொருட்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்வதற்கானவிண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.இதற்கானவிண்ணப்பப் படிவங்களைமாவட்டச் செயலகநிதிக்கிளையில் 02.01.2012 தொடக்கம் 10.01.2012வரைஅலுவலகநாட்களில் காலை 9.00 மணிதொடக்கம் பி.ப 3.00மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்டவிண்ணப்பப் படிவத்தினைகடிதஉறையின் (9"X4'') இடது பக்கமேல் மூலையில் வழங்கல்கள்/சேவைகள் பதிவுசெய்தல் - 2012''எனக் குறிப்பிட்டு தபாலில் அனுப்புவதாயின் ''அரசாங்க அதிபர்,மாவட்டச் செயலகம்,கிளிநொச்சி'' என்னும் முகவரிக்கும் நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கிளையிலும் 15.01.2012 இற்குமுன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

### வழங்கல்கள்

1. காகிதாதிகள்,எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையபொருள்கள்.
2. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்(மரம்/உருக்கு)
3. கணினிகள்,கணினியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள்,றோணியோ இயந்திரங்கள் /போட்டோக் கொப்பி இயந்திரங்கள் /தொலைபேசிகள் / தொலைநகல்கள் /தட்டச்சு இயந்திரங்கள் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக தளபாடங்கள்.
4. இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்.
5. ஜன்னல்திரைச்சீலைகள்,சீருடைகள் மற்றும் துணி வகைகள்.
6. மின்சாரப் பொருள்களும். அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும்.
7. கட்டிட, இரும்புப் பொருட்கள்,தீந்தை வாணிஸ் மற்றும் சகல காட்வெயார்பொருள்களும்.
8. தும்புத்தடி,விளக்குமாறு,கால்துடைப்பங்கள்,மொப்பர்கள்,வைப்பர்கள்.
9. கார்பிக்,விம்,பைனோல்,சவர்க்காரம்,மாபிள் அசிட்,குளோறின்,எயாப் பிறஸ்னர்கள். (Air Freshner)
10. நீர் இறைக்கும் மோட்டார்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புகளான பைப்,பென்ட்,சொக்கற் வகைகள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர் டியுப்புகள். பற்றறிகள்.
12. பளாஸ்ரிக் பைவர் கிளாஸ் உற்பத்திசெய்யப்பட்டபொருட்களானகதிரைமேசைபோன்றபொருட்கள்.
13. பால்மாவகைகளும் பிளாஸ்ரிக் குவளைவகைகளும் (Nescafe Premix, Nestea &Disposal Cups, Etc. )
14. கட்டடமற்றும் வாகன வளிபதனாக்கி(A/C)
15. தோல் வகைஉற்பத்திப் பொருட்கள்.
16. விளையாட்டுப் பொருட்களும் அதனுடன் தொடர்புடையபொருட்களும்.
17. கல்,மண் வகைகள்,உற்பத்திசெய்யப்பட்ட கட்டிடப் பொருட்கள்.
18. உலர்மின்கலப் பொருள் வகைகள்.
19. ஒலிபெருக்கிசாதனங்களும், ஒலிவாங்கிசாதனங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்கள்

**சேவைகள் / திருத்தங்கள்**

1. கட்டிடநிர்மாணம் மற்றும் கட்டடவேலைகள் மற்றும் சேவைகள். (Service)
2. மோட்டார்வாகனங்கள் திருத்தவேலை/ சுத்திகரிப்புவேலைகள், பற்றரிதிருத்த வேலைகள் (Service)
3. அச்சிடுதல், இறப்பர் ஸ்ராம்புகள், திகதி ஸ்ராம்புகள்.
4. அலுவலக அடையாள அட்டைகள். (Plastic)
5. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்தவேலைகளும் பராமரிப்புகளும். (கணினிகள்/கல்குலேற்றர்கள்/றோணியோ இயந்திரங்கள்/போட்டோக் கொப்பி இயந்திரங்கள்/தொலைநகல்கள் /தட்டச்சு இயந்திரம் போன்றன)
6. குளிர்சாதனப்பெட்டிகள்,எயார் கொண்டிசனர்கள் திருத்தவேலைகளும் பராமரிப்புகளும்.(Service)
7. மர,உருக்குத் தளபாடத் திருத்தவேலைகள்.
8. பெயர்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள் (3D உட்பட) செய்தலும்.
9. உள்ளகதொலைபேசித் திருத்தவேலைகளும் பராமரிப்புகளும். (Service)
10. மின் மோட்டர்கள்,நீர் இறைக்கும் இயந்திரங்கள்,மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்மற்றும் பராமரித்தலும் மீள்முறுக்கலும் (winding)
11. மின்சாரவயறிங் வேலைகள்,கணினிவலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்.
12. நீர்வழங்கும்குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்.

**பதிவுதொடர்பானவை**

மாவட்டச் செயலகத்தில் பொருட்கள் சேவைகள் வழங்குதல் தொடர்பாகப் பதிவுகளை மேற்கொள்பவர்களிடம் இருந்தே 2012ம் ஆண்டிற்கான பொருள்கள் சேவைக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதால் மாவட்டச் செயலகங்களுக்கோ, பிரதேச செயலகங்களுக்கோ,மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக் களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருட்கள் சேவைகள் வழங்க விருப்பு முடையவர்கள் மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று பதிவுகளைமேற்கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி.ரூ.கேதீஸ்வரன்,
மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும்
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF SCIENCE

Senior Professor / Professor in
**Mathematics /Statistics/ Physics/ Botany/ Zoology/ Marine Biology**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in
**Mathematics/Statistics/Physics/Botany*/Zoology/Chemistry**/Computer Science**

**Note:**

* Preference will be given to those who have specialization at postgraduate level and have research publication in the field of **Virology** for the appointment of Senior Lecturer in Botany.

** Preference will be given to those who have specialization at postgraduate level and have research publication in the field of **Inorganic Chemistry** for the appointment of Senior Lecturer in Chemistry.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755 - 11x900 - 67,655/- p.m. |
| Professor | Rs.50,905 - 13x850 - 61,955/- p.m. |
| Senior Lecturer Grade I | Rs. 42,650 - 7x800 - 48,250/p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 37,650 - 11x700 - 45,350/-p.m. |
| Lecturer (Probationary) | Rs. 26,900 - 10x585 - 32,750/-p.m. |

**Note:**
In addition to the above salary, the following allowances will also be paid:
(i) Academic allowance
(ii) Special allowance - 5% of the basic salary
(iii) Cost of living allowance of Rs. 5,850/- p.m.
(iv) Any other allowance approved by the UGC

**Statutory benefits:**
(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr. II and above.
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

**Closing date:**

| | |
|---|---|
| Post of Senior Professor/Professor | - 31.03.2012 |
| Other posts | - 07.02.2012 |

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the applications forms drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
29.12.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பயிற்சி அதிகார சபையால் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையில் அடுத்த வருடம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் நடைபெறவுள்ள பயிற்சி நெறிகளுக்காக ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியானது ஆறுமாதகால முழுநேர உள்ளகப் பயிற்சியும் அதன் பின்னர் ஆறுமாதகால வெளிக்களப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. (வ-ரி)

### கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.



RSF
Electric Scale
புதுக்கடைத் திறப்பு
யாழ்.மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில்
[பூபதி வெதுப்பகத்துக்கு அருகில்]
20 % கழிவு இன்றில் இருந்து 30 நாள்கள் வரை
T.P.0774635125
எமது கடைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை ஆண்கள், பெண்கள்.
(12281)(6.7.8)

### தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை

1. கணக்காளர் (Accountant ஆண்/பெண்)
முன் அனுபவம் உள்ளவர்கள்
2. விற்பனையாளர் அனுபவம் உள்ள ஆண்/பெண்

நேர்முகத் தேர்வு: 31.12.2011 காலை 9 மணி
இடம் :
யாழ். பேபி நீட்ஸ் அன் பார்மசி அன்ட் சன்றைஸ் மெடி கிளினிக் (யாழ். பஸ் நிலையம் முன்பாக)

## நேர்முகத் தேர்வு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில மொழிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர் வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ம-319)

### ENGLISH PERSONAL CLASSES

ஆங்கிலம்
பிரத்தியேக வகுப்புக்கள்
அனுபவமிக்க ஆசிரியர்
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்குப்
0776589443

போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும்.
யாழ். மானிப்பாய் வீதி,ஆனைக்கோட்டை.
(பூபதிக்கு அருகில்)

### கடையும் அதனுடன் காணியும் விற்பனைக்கு

ஆடியபாதம் வீதியில்,
பல்கலைக்கழகத்துக்கு அருகில்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0771737144

### திருமண சேவை

1. 81 இல் பிறந்த 8இல் செவ்வாய் பாவம் 60 உடைய MBBS டாக்டருக்கு Bank, ஆசிரியை மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
2. 84 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 42¾ பாவமுடைய லண்டனில் சட்டப்படிப்பை முடித்து லண்டனில் வேலை புரியும் மணமகளுக்கு, இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகனை லண்டனில் அல்லது ஊரில் பார்க்கின்றோம்.

தொடர்பு: கமலக்கண்ணைவ் திருமணசேவை,
இல. 171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி,நல்லூர்.
T.P. 0776070862

### SMAK பழரச பானங்கள்

திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் வைபவங்கள், வருடாந்த ஒன்று கூடல்கள் மற்றும் பொது நிகழ்வுகள் அனைத்துக்கும், இயற்கையான பழவகைகளால் தயாரிக்கப்பட்ட பழரச பானங்களையும், தண்ணீர் போத்தல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

T.K.S Enterprises
SMAK உற்பத்திகளுக்கான யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
இல. 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 0214925102, 0714312730

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

## மரண அறிவித்தல்

### நடராசா தேவராசா
(தேவன்ஸ் சவுண்ஸ் உரிமையாளர்)



பிரான்பற்று, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், கனடா, ரொறண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தேவராசா (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும் மற்றும் லிங்கேஸ்வரி (கனடா) யின் அன்புக் கணவரும், யோகம், சிவபாக்கியம், மகேஸ்வரி,இந்திரா, வசந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மலிங்கம் (ஜேர்மனி), தங்கவேல், பாஸ்கரன் , வரதராசா ஆகியோரின் மைத்துனரும், ஜெசுரேசினி (கனடா), ஜெதர்சினி (கனடா), ஜெமாலினி (கனடா), ஜெறோசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (கனடா), சத்தியசீலன் (கனடா), செந்தூரன் (கனடா), திருமகன் (கனடா) ஆகியோரின் மாமனும், தாரணி, தாட்சாயினி, காஸ்மீரா , கிசோர், மயூரி , சரண், திருமுருகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (31.12.2011) சனிக்கிழமை வீட்டுக் கிரியைக்காக வைக்கப்பட்டு, அன்று பி.ப. 12.30 மணியளவில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமகன்
(வரதராசா சுரேசன்)

(12279)(6-7-8)

## யாழ் நகர் மைய றோட்டறக்ட் கழகமும் Ur friend foundation உம் முதல்தர வானொலி FM சூரியன் அறிவிப்பாளருடன் இணைந்து நடத்தும் மாபெரும் கலை பண்பாட்டு விழா



ஜதிகளின் ஜாலங்களும்
சுருதிகளின் சுவாரசியங்களும் - சூரிய ரீங்கார
கவிகளின் காத்திரமான பிரக்ஞைகளும்
விவாதங்களின் விநோதமான கருத்தாடல்களும்
கலந்து சங்கமிக்கும் கலை வானவில்

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 01.01.2012
நேரம் : பிற்பகல் 2.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

நிகழ்ச்சிக்குப் பிரதான அனுசரணை வழங்குவோர்

1. Marsha Systems (Pvt) LTD
74, Kannathiddi Road, Jaffna.

2. K.J.Enterprices
105/6, c Ponnambalam Lane,
Power House Road, Jaffna.

இணை அனுசரணை வழங்குவோர்

TOP paz,
No.70, Power House Road,
Grand Bazaar, Jaffna.

Aiyngaran Electricals,
Whole sale & Retail dealers
No - 60, Palaly Road,Thirunelvely.

Saravana Tex,
526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்.
770, 772 கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.
171 பிரதான வீதி, நெல்லியடி.

சொலக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

College of informatics
Studies,
K.K.S. Road Inuvil.

Jeyasri Printers,
College Road,
Neeraaviyadi, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வேண்டாத' நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்கா புற்றுநோயைப் பரப்புகிறதா?

## வெனிசுலா அதிபர் சாவேஸ் சந்தேகம்

லண்டன்,டிசெ.31

அமெரிக்கா தனக்கு வேண்டாத நாடுகளின் தலைவர்களுக்கு இரகசியமாகப் புற்றுநோயைப் பரப்பி வருகிறதா? என்று வெனிசுலா அதிபர் சாவேஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவின் தீவிர எதிர்ப்பாளரான சாவேஸ் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர். அவர் தவிர பிராகுவே ஜனாதிபதி பெர்னாண்டோலுகோ, பிரேசில் ஜனாதிபதி டில்மா ரௌசெஃப், அவருக்கு அடுத்த நிலையில் உள்ள லூயிஸ் ஆகியோரும் இந்த ஆண்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆர்ஜெண்டீனா ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டஸுக்கு தைரொய்ட் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக சாவேஸ் மேலும் தெரிவித்ததாவது;

இந்த விவகாரம் தொடர்பாக எவர் மீதும் குற்றச்சாட்டுக் கூற நான் விரும்பவில்லை. ஆனால் அமெரிக்கா நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இவ்வாறு நோயைப் பரப்பியிருந்தால், அது மிகக் கொடூரமான செயல். உண்மையில் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள இடதுசாரித் தலைவர்களுக்குத் தொடர்ந்து இதுபோன்று நிகழ்ந்து வருவதை இயல்பானது என்று கூறி முற்றிலுமாக ஒதுக்கி விடவும் முடியாது- என்றார். (ந)

# ஹோம்ஸ் நகரில் தங்கியிருந்து நிலைமைகளை அறிய வேண்டும்

## அரபு லீக் குழுவிடம் பிரான்ஸ் கோரிக்கை

பரிஸ்,டிசெ.31

சிரியாவில் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டறிய அரபு நாடுகளின் கூட்டமைப்பு, குழுவொன்றை சிரியாவுக்கு அனுப்பியுள்ளது. அவர்கள் உடனடியாக நாடு திரும்பிவிட்டனர். இந்தநிலையில் அரபுநாடுகளின் குழு ஹோம்ஸ் நகரத்தில் அதிக நாள் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்று பிரான்ஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பிரான்ஸின் வெளிவிவகாரச் செய்தித் தொடர்பாளர் பெர்னார்ட் வலேரோ தெரிவித்ததாவது;

இந்தக் குறுகிய காலப் பயணத்தால் நிலைமையை முழுதாகத் தெரிந்து கொள்ள முடியாது. அவர்கள் அங்கு தங்கியிருந்து மக்களிடம் நேரடியாக நிலைமை குறித்துக் கேட்டறிய வேண்டும். அப்போது தான் உண்மை நிலையை அறிய முடியும் - என்றார்.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை தலைநகர் டமாஸ்கஸைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அந்த இடங்களுக்குச் செல்லவில்லை. (ந)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் அன்னராசா
தபீபன்

மலர்வு: 10.04.1982

உதிர்வு: 11.01.2011

எண்ணியிருக்கவில்லை
ஓராண்டு போனதென்று-உன்
வண்ண முகமின்றும்
விழிகளில் விழுகின்றது
இருந்தாலும்
உதடு உச்சரிக்கின்றது
உன்னாமத்தை தபீபன் என்று
என்ன தான் செய்வோமையா....?

அன்னாரின் திடீர் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் 45 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட அனைவருக்கும், நன்றி கூறுவதுடன், இவரின் ஓராண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று (31.12.2011) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் . அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

161, காரைநகர் வீதி,
வில்லூன்றிப்பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்

அன்னராசா (கிளி-தந்தை)
குடும்பத்தினர்

(12305)(6-7-8)

# 6ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
28
.
11
.
1954

உதிர்வு
28
.
12
.
2006

## அமரர் பேரானந்தம் சிவானந்தன்
(ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை பணியாளர்)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆறு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்

39/9, மின்சார நிலைய வீதி,
3ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மனைவி, மகன்

(சீ/8514)(3.6.7)

## கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி மாணவருக்கு

குருநகர்,டிசெ.31

யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் 06.05.2009 தொடக்கம் 17.06. 2009 வரையான காலப் பகுதியில் கடல் வரை படம் வாசித் தல், செய்மதி உபகரணம் இயக் குதல் ஆகிய பயிற்சி நெறிகளைப் பயின்ற மாணவர்களை மேற்படி கல்லூரிக்கு வருகை தருமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

நடராசா பிரபாகர், அசோக் மோகனராஜ், ரமேசன் ராஜ் பாஸ்கரன், லூக்டி மெல்சன், விநாயகமூர்த்தி செல்வரஞ்சன், செல்வேந்திரன் பிரதீபன், கந்தசாமி சுவேந்திரன், ஞானசேகரம் ஜெகதீசன், சிவஞானம் சபேசன், குணசிங் கம் மோகனகுமார், சண்முகரத்தினம் மகிழ்றாஜ் ஆகியோரையே வருகை தருமாறு மேற்படி கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்ரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(வ-51)

## ரஷ்ய சுற்றுலாப் பயணியின் பணம் திருடப்பட்டுள்ளது

இலங்கைக்குப் பயணம் செய்துள்ள ரஷ்ய சுற்றுலாப் பயணியின் பணம் திருட்டுப் போயுள்ளது.

சிகிரியாவில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கி யிருந்த போதே மேற்படி சுற்றுலாப் பயணியின் பணம் திருட்டுப்போய் விட்டது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா பணம் அந்த சுற்றுலாப் பயணிடம் களவாடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து ஹோட்டல் நிர்வாகத் திடமும், பொலிஸாரிடமும் சுற்றுலாப் பயணி முறைப்பாடு செய்துள்ளார்.

ஹோட்டல் அறையில் இருந்த பணமே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(வ)





புது வருடத்தை
முன்னிட்டு......

நியூ லக்கி அழகு நிலையம்
**New Lucky Beauty Parlour**

நியூ லக்கி அழகு நிலையத்தில் தை 01.01.2012 இல் இருந்து புதிய வகுப்புக்கள் (Facial, hair Style, Makeup) ஆரம்ப மாகவுள்ளன.
வகுப்பின் முடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.



குறுகிய கால எல்லைக்குள்
பயிற்சிகள் அனைத்தும்
முடிக்கப்படும்.
தொடர்புகளுக்கு 0775925397.
வாடிக்கையாளர்களுக்குப்
புத்தாண்டை முன்னிட்டு
50% விலைக்கழிவு வழங்கப்படும்.
01.01.2012 - 05.01.2012

No: 405, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்திக்கருகில்.

(12328)(6-8-7)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வைத்திலிங்கம்
செல்வநாயகம்
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)



அன்னை மடியில்
25.11.1928

திதி பூர்வபக்க ஸப்தமி

இறைவன் அடியில்
23.12.2009

எமது குடும்பத்தின் தூண்டாமணி விளக்காய் எம்மையெல்லாம் நெறிப்படுத்திய பெரியோனாய் அன்பின் இலக்கணமாய் பாசத்தின் இருப்பிடமாய் கண்ணீர்க் குளத்திலே உதிராத பூக்களாய் என்றும் எம்மை விட்டு நீங்காத நினைவலைகளாய் ஆறாத்துயரத்தில் எம்மை விட்டுச் சென்றீரே. சித்தி விநாயகரின் பதார விந்தங்களில் மலர் தூவி வணங்குகின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு.

அன்புள்ளம் கொண்ட
மனைவி, மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(12292)6-7-8)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து மகாராஜன்

(இளைப்பாறிய காசாளர்-இலங்கை வங்கி,சுன்னாகம், அளவெட்டி வெளிவள முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தா சபை செயலாளர்)



அளவெட்டி தெற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட தம்பிமுத்து மகாராஜன் நேற்று (30.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-சேதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இளையதம்பி-மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், செல்வராஜா, மரியம்மா, இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருள் நேசன், ஜீவநேசன் , அஞ்சுகா, ஆரணி, அபிராமி, நிலானி, அபிநேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சினி, சோபிஜா, சுதாகரன், பாபு, கஜேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(12303)(6-7-8)

## கனகரத்தினம் பாக்கியம்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, மாஞ்சோலை, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் பாக்கியம் (சீனி அன்ரி) கடந்த (28.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், சுரேஸ் (கனடா), சுரேன் (கனடா), சுதாகரன் (கனடா), சுபேந்திரன், சுஜீவா (ஜேர்மனி), சஞ்சீவன் மற்றும் காலஞ்சென்றவர்களான சுதையன் (கோபு), சுதர்சன் (சுதன்) ஆகியோரின் பாசமிகு தாயும், புஸ்பவதனா, அனிலங்காதேவி, ரஜனி, சந்திரராஜா, அனுஷா ஆகியோரின் மாமியும், வைஸ்ணவி, பிரவீன், துவாரகன், ஆரூரன் , துஷாரகன், தாரீகன், ஆர்த்திகன் , விதுர்சன், சுஜீர்தன், கின்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், வாடாமலர், குணசிங்கம் மற்றும் இராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (02.01.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

207/20, ஆடியபாதம் வீதி,
மாஞ்சோலை, கல்வியங்காடு.

தகவல்:
பிள்ளைகள்

(12279)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணப் பணிகளுக்காக 150 கோடி

### முதல்வர் ஒதுக்கீடு

தானே புயல் காரணமாக தமிழகத்தில் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணப் பணிகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை சீரமைத்தல் ஆகியவற்றுக்காக 150 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். (வ)

## ராஜ்யசபாவில் நிறைவேறாத லோக்பால் பிரேரணை


லோக்பால் பிரேரணை நேற்று முன்தினம் ராஜ்யசபாவில் நிறைவேற்றப்படவில்லை. கூச்சல், குழப்பம் காரணமாக மறு திகதி குறிப்பிடாமல் சபை ஒத்திவைக்கப்பட்டது.

கூட்டணிக் கட்சியான மம்தா பானர்ஜியின் திரிண மூல் காங்கிரஸ் பல முக்கிய திருத்தங்களைக் கோரியது. இதை செய்யாவிட்டால், பிரேரணையை ஆதரிக்க முடியாது என்று கூறிவிட்டது.

234 பேர் கொண்ட ராஜ்யசபாவில் காங்கிரஸ் கூட்டணிக்கு, திரிணமூலை சேர்த்தே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 97பேர் தான் உள்ள நிலையில் இதை நிறைவேற்றுவது சாத்தியமே இல்லை என்பது காலையிலேயே தெரிந்துவிட்டது.

# கரையைக் கடந்தது 'தானே' புயல் தமிழகத்தில் கோரத்தாண்டவம்

## 5பேர் சாவு, புதுச்சேரியில் வீடுகள் சேதம்





புதுச்சேரி, டிசெ.31

வங்கக்கடலோரத்தில் மையம் கொண்டுள்ள 'தானே' புயல் நேற்றுக் காலை 7 மணிக்கு கரையைக் கடந்தது. கடலூர் மற்றும் புதுச்சேரி அருகே கரையைக் கடந்த போது கடும் சூறாவளிக் காற்றுடன் பலத்த மழையும் பெய்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கடலோர மாவட்டப் பகுதி மக்கள் உஷார்படுத்தப்பட்டனர். புயல் தாக்கும் என்ற பகுதி யில் வாழும் மக்கள் மாற்று இடங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

புதுச்சேரி உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்திய தோடு, 5 பேரின் உயிரையும் பறித்து விட்டது. விழுப்புரம் மாவட்டம் கோடக்குப்பம் பகுதியில் நேற்று அதிகாலை தானே புயல் கோரத்தாண்ட வமாடியது. இதில் கோட்டக் கிராமத்தில் மிக பெரிய மரம் வேரோடு சரிந்து பிரகாஷ் என்பவர் வீடு மீது விழுந்தது. இதில் அந்த வீடு நொறுங்கியதோடு இடிபாடு களில் சிக்கி பிரகாஷின் மனைவி வீட்டுக்குள்ளேயே உயிரிழந் தார்.

இதேபோல் சங்கராபுரம் ஆலந்தூரில் ஒரு முதியவர் நேற்று அதிகாலை வீதியில் கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், புதுச்சேரியில் வீடு இடிந்து, வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்த 60 வயது முதியவர் உயிரிழந்தார். பலருக்கு காயம் ஏற்பட்டது. வானூரில் வீடு இடிந்து ஒருவர் பலியானார். 6 பேர் காயம் அடைந்தனர். ஆவடிப்பட்டாபராமில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்த முன்னாள் ராணுவ வீரர் ஏசுதாஸ் மின்சாரம் தாக்கி இறந் தார்.


புதுச்சேரி-கடலூர் இடையே கரையைக் கடந்த புயல் நிலப் பரப்புகளுள் புகுந்து, திருவண்ணா மலை வழியாகச் சென்றது. இதனால் திருவண்ணாமலை மற்றும் தருமபுரியில் பலத்த காற்றுடன் கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. புயல் கரையைக் கடந்தாலும் இதன் வேகம் இன்னும் குறையவில்லை. புதுச்சேரி, சென்னை, கடலூர் போன்ற இடங்களில் சூறாவளி காற்று டன் கனமழை பெய்து வருகி றது.

புயல் கரையைக் கடந்தாலும் அடுத்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கன மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் கடலின் கொந்தளிப்பு குறையாததால் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கனமழை ஒரு சில இடங்களில் மின்சாரத் துண்டிப்பும், போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரி உட்பட ஒரு சில இடங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

(வ)

# மரண அறிவித்தல்



## சிதம்பரம் சரவணமுத்து

### முன்னாள் ராதா ரெயிலறிங் (அச்சுவேலி) உரிமையாளர்

வயாவிளான் பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியையும் பிரான்ஸையும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரம் சரவணமுத்து 29.12.2011 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம்-சோதி தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான சந்தன்-பொன்னி தம்பதியரின் மருமகனும் தவமணியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், இலங்கையில் வசிப்பவர்களாகிய சின்னத்தம்பி, கனகம்மா, செல்லம்மா, செல்லக் கண்டு காலஞ்சென்ற சின்னத்தங்கைச்சி மற்றும் கிருஷ்ணசாமி (ராதா கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னமணி, காலஞ்சென்றவர்களான பரமு, பொன்னையா மற்றும் செல்லமுத்து, காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் விமலாதேவி (கனடா), நவமணி, யோகம்மா, இராஜநாயகம் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சின்னராஜா, அருணா ஆகியோரின் சகலனும், பிரான்ஸில் வசிப்பவர்களாகிய வசந்தகுமார், சிவகுமார், ஜெயமணி, செல்வகுமார், பிரேமலதா, பிரேமராதா ஆகியோரின் அன்புத் தந்தையும், வதனா, சுகன்ஜா, நடேசு, எவ்லின், இரவீந்திரன், தேவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும், கத்திரின், ஸ்ரெபான், சபின், நில்ஷா, நிதுஷா, நிலுக்ஷா, கிளேமோ, ஜூலியன், தர்ஷனா, செந்தூரன், பார்த்தீபன், நிலானி, ஆதவன், முகிலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 04.01.2012 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12 முதல் பிற்பகல் 2 மணிவரை பிரான்ஸில்நடைபெறும்.

தகவல்:

குடும்பத்தினர்.

தொடர்பு:
[illegible]159865883

(12353-39)

12353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை அணி தொடர்ந்து முதலிடத்தில்




யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தி வரும் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ். நகரின் சிறந்த கழக அணித் தெரிவின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி யாழ்.பல்கலைக்கழக அணி 19 போட்டிகளில் விளையாடி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 59 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 23 போட்டிகளில் விளையாடி 16 போட்டிகளில் வெற்றி பெற்று 51.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் 21 போட்டிகளில் விளையாடி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 47 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

2011ஆம் ஆண்டுசிறந்த அணியாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக அணிக்கான ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும், பணப் பரிசிலும் 2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் வைத்து வழங்கப்படும்.

2010 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழக அணி மேற்படி வெற்றிக்கிண்ணத்தையும் பணப்பரிசில்களையும் பெற்றுக் கொண்டது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ்.நகரில் சிறந்த அணித் தெரிவு ஆரம்பித்த பின்னர் 2011 ஆம் ஆண்டு 114 போட்டிகள் நடைபெற்றுள் ளன.

யாழ்.பல்கலைக்கழக அணி, ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகஅணி ஆகிய மூன்று அணி களும் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தவுள்ள முக்கோண வெற்றிக்கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டி 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெறவுள்ளது. 2011 ஆம் ஆண்டு முக்கோணத் தொடர் வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-23)

## உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம்,டிசெ.31

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் சீர்திருத்தம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்மதீனா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# சமநிலையில் முடிந்த ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வவுனியா வைரவப்புளியங்கு ளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்றுவருகின்றது.

இதில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து 'பிரெண்ட்ஸ்' விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடத்தில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டது.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இதன் போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறக் கடுமையாக மோதினர்.

முதலாம் பாதி ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடம் இருக்கையில் 'பிரெண்ட்ஸ்' விளையாட்டுக்கழக அணி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டது.

இதனால் முதல்பாதி ஆட் டம் இடை நிறுத்தப்பட்ட போது இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் கோல்களைப் பெறக்கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் அவை கைகூடவில்லை.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினைப் பெற்றமை யால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

(த-23)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

வலி வடக்கு, டிசெ 31

வேலனைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடம் பெற்ற உதைபந்தாட்டப் பயிற்சி முகாமின்போது யாழ் மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் முகுந்தன் விளையாட்டு வீரர்களுக்கு விரிவுரைகளை வழங்கினார்.

முதல் தடவையாக உதை பந்தாட்ட பயிற்சி முகாம் நடை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(த-86)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 * 08 * 1953



உதிர்வு 31 * 12 * 2009

அமரர்


**ரெட்ணம் சூசைபேணாட் (ராசு)**

இரண்டாண்டுகள் ஆனபோதும்
ஒவ்வோர் நிமிடமும் உங்கள்
நினைவுகள்தான் அப்பா,
நான் பாய் விரித்து,
படுக்கைக்குத் தயாராகும் என் அப்பா,
நான் படுக்கை விரிக்காமலே
இன்றும் துயில் கொள்கின்றார்,
நான் சிரிக்க என்னோடு சிரித்தவர்
இன்று நான் அழுதும்
என்னைப் பாராமல்
நீண்ட துயில் கொள்கின்றார்
எழுந்திருக்க முடியாமல்..

நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

இல.7, ஒடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

## அரையிறுதிக்கு சென்றலைட்ஸ்



யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திய யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 104:54 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது.

(த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.31

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் ஆர். அன்புதாசனின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டியும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிகெற் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் பங்குகொள்ளும் அணிகளின் விபரங்கள் வருமாறு.

அண்ணா விளையாட்டுக்கழக அணி எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி. (பி.ப 3.30 மணி).

ஏ.பி.சி விளையாட்டுக்கழக அணி எதிர் சிறுவர் பூங்கா விளையாட்டுக்கழக அணி.(பி.ப 2 மணி). (த-23)




*2011 ஆம் ஆண்டு தேசிய, மாகாணம், மாவட்டம் ஆகிய மட்டங்களில் இடம்பெற்ற கராத்தே போட்டிகள் மற்றும் கராத்தே கழகங்கள் நடத்திய கராத்தே சுற்றுப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றியீட்டிய சென்சேய் விஜயராஜ் ஆசிரியரின் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை கீறின் பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.*

*இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நீதிவான் கணேசராசா கலந்து கொண்டார்.*

(த-23)

12324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வொட்சனுடன் ஸிடில்



சச்சின் டெண்டுல்கர்

# மறக்க முடியாது

கடந்த 30 ஆண்டுகளில் மெல்போர்ன் மைதானத்தில் இந்திய அணி ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் கூட வெற்றி பெற்றதில்லை. தற்போது தொடர்ச்சியாக 5 ஆவது தோல்வியை சந்தித்துள்ளது. மெல்போர்ன் டெஸ்டில் 4 ஆவது நாளிலேயே தாக்குப் பிடிக்க முடியாமல் தோற்றது.

இந்திய அணி துடுப்பாட்டத்தில் வலுவாக இருப்பதால் அதை எதிர்கொள்ளும் வகையில் ஆஸ்திரேலியா சிறந்த பந்துவீச்சாளர்களை அணியில் சேர்த்தது. அவர்களின் பந்துவீச்சில் இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் எடுபடவில்லை. ஆஸ்திரேலிய அணியில் புதுமுக பந்துவீச்சாளர் பற்றின்சனின் பந்துவீச்சு அனைவரையும் கவர்ந்தது.

அவர் ஆஸ்திரேலியாவின் புதிய நம்பிக்கை நட்சத்திரமாக உதயமாகி இருப்பதாக பாராட்டுக்கள் குவிந்துள்ளன. விக்டோரியா மாகாணத்தைச் சேர்ந்த பற்றின்சனுக்கு 21 வயதே ஆகிறது. ஏற்கனவே நியூசிலாந்துக்கு எதிராக 2 டெஸ்டிலும் இந்தியாவுக்கு எதிராக முதல் முறையாகவும் பந்து வீசி இருக்கிறார்.

ஏற்கனவே நியூசிலாந்து டெஸ்டில் முதல் ஆட்டநாயகன் விருது பெற்ற பற்றின்சன் நேற்று இரண்டாவது டெஸ்டில் ஆட்டநாயகன் விருது பெற்றார். அவர் 108 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 6 இலக்குகளை கைப்பற்றியதன் மூலம் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பற்றின்சன் கூறியதாவது:

நான் இந்தியாவுக்கு எதிராக மெல்போர்ன் டெஸ்டில் விளையாட வேண்டும் என்று ஆவலில் இருந்தேன். அணியில் இடம் பிடித்து இந்தியாவுடன் விளையாடியதன் மூலம் எனது கனவு நிறைவேறியது. டெண்டுல்கர் கிரிக்கெட் விளையாட வந்தபோது நான் பிறக்கக் கூடஇல்லை. அவருக்கு பந்துவீசியது மறக்க முடியாத அனுபவம்.

இந்தியாவின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்தியது மகிழ்ச்சியாக இருக்கிறது. துடுப்பாட்டத்தில் சிறந்த இணைப்பாட்டக் காரர்கள் கிடைத்துவிட்டால் அவர்களை பிரிப்பது கடினம். இதற்காக நான் வலைப் பயிற்சியின் போது விசேட கவனம் செலுத்தி பயிற்சி பெற்றேன். அது எனக்கு கைகொடுத்தது என்று கூறினார். (15)

ஹசி, பொன்டிங்



# நம்பிக்கை தேவை

ஆஸ்திரேலிய அணியின் மூத்த வீரர்களான பொன்டிங், ஹசி மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இருவரும் ஓய்வு பெற வேண்டும் என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர்கள் பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் பொன்டிங் 2 இன்னிங்சிலும் அரைச் சதம் விளாசினார். ஹசி இரண்டாவது இன்னிங்சில் 89 ஓட்டங்கள் எடுத்து சிறப்பான இலக்கு அமைய அணிக்கு உதவினார்.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய தெரிவுக் குழுவினர் இவர்கள் இருவர் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், பொன்டிங்கும், ஹசியும் சம்பியன் வீரர்கள். இளம் வீரர்களை பார்ப்பதை போல் அவர்களை பார்க்க கூடாது. இருவருக்கும் எந்தவித நெருக்கடியும் கொடுக்காமல் சுதந்திரமாக ஆட விட வேண்டும்.

இளம் வீரர்கள் அணிக்கு தேவை தான். அதற்காக ஒட்டுமொத்த மூத்த வீரர்களையும் புறக்கணித்தால் தவறான பாதையில் பயணிக்க வேண்டி இருக்கும். பொன்டிங், ஹசி ஆகியோர் இளம் வீரர்களுக்கு எல்லா வகையிலும் உதவ முடியும். சச்சின், டிராவிட் போல் இவர்கள் இளம் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்றார். (15)

# ஆஸிக்குப் பாராட்டு



ஆட்டமிழந்த டோனி

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே மெல்போர்னில் நடைபெற்ற முதல் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி படு தோல்வியை சந்தித்துள்ளது. 122 ஓட்டங்களால் தோல்வியடைந்த இந்திய அணியின் தலைவர் டோனி இதுகுறித்துப் கூறியதாவது:

இரண்டு இன்னிங்ஸிலும் முன்னணி வீரர்கள் ஓட்டங்கள் குவிக்கத் தவறி விட்டனர். வெற்றி பெற அதிக ஓட்டங்கள் வேண்டும். இல்லையெனில் ஆட்டத்தில் வெற்றி பெறுவது கடினமாகிவிடும். மேலும் ஆஸ்திரேலியாவின் இளம் வேகப் பந்து வீச்சாளர்கள் மிகத் துல்லியமாகப் பந்து வீசி எங்களை சரித்து விட்டனர்.

சிட்னியில் எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி நடைபெற உள்ள இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அணியில் உள்ள மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களை தெரிவு செய்து களமிறக்க உள்ளோம்.

நாங்கள் கடுமையான பயிற்சி மேற்கொண்டு தோல்வியிலிருந்து திரும்பி வருவோம். மீதமுள்ள ஆட்டங்களில் வெற்றி பெறு வோம். இதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார். (15)

## காயத்தால் வொட்சன் அவதி

காயம் குணமடையாததால் ஆஸ்திரேலிய வீரர் வொட்சன், சிகிச்சைக்காக வீடு திரும்பினார்.

தொடையின் பின் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, அண்மையில் முடிந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் வொட்சன் இடம் பெறவில்லை. இந்தியாவுக்கு எதிரான மெல்போர்ன் டெஸ்டில் விளையாடவில்லை என்றாலும், அடுத்த ஆட்டத்துக்காக அணியினருடன் தான் இருந்தார்.

இப்போது, இவரது காயம் முழுமையாக குணமடையாததால், நேற்று முன்தினம் காலை வீட்டுக்கு அனுப்பப்பட்டார். இதனால் சிட்னி டெஸ்டிலும் வொட்சன் இடம் பெறமாட்டார். (15)

# பொருட்படுத்துவதில்லை!



விமர்சனங்கள் குறித்து தாம் கவலைப்படுவதில்லையென ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார்.

ரிக்கி பொண்டிங் துடுப்பாட்டம் குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள் பலர் விமர்சனம் வெளியிட்டுள்ளனர். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் அவரை இணைத்துக் கொண்டது குறித்தும் பல கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

இது தொடர்பில் தெரிவிக்கையிலே பொன்டிங், தான் விமர்சனங்கள் குறித்து கவலைப்படுவதில்லையென்று தெரிவித்துள்ளார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாயில் புதிய ஓர் உதயம்

# தர்மரூபன்

1. சர்வதேச விமான பற்றுச் சீட்டுக்கள்
2. வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை
3. இன்ரநெற்
4. போட்டோக் கொப்பி
5. கவரிடுதல்
6. தொலைத் தொடர்பு பக்ஸ்
7. நெற்கபே

இடம்

**தர்மரூபன் தொலைத் தொடர்பு**

யாழ் வீதி, சந்தை ஒழுங்கை, மானிப்பாய்

தொலைபேசி இல: 0774254860, 0212255811.

ஏக விநியோகஸ்தர்:

**NATION POPULAR TRAVELS & TOURS.**

Hot line- +94214920920


## 31ஆம் நாள் கண்ணீர்க் காவியம்

தாயின் அரவணைப்பில்:-
1963.02.24
ஆண்டவன் அரவணைப்பில்:-
2011.12.02



**அமரர் சமரக்கொடி மேரி ஜெயராணி**

*நட்பு எனும் நந்தவனத் தோட்டத்தில்
நீங்கள் வாடாத பூக்கள்
வாழும் வரை வாழ்க்கை
வெல்லும் வரை தோல்வி நீங்கள் எம்மை
விட்டுச் சென்றது எமக்குக் கிடைத்த தோல்வியே!*

மரித்த அமரர் ச.மேரி ஜெயராணியின் ஆன்ம இளைப் பாற்றுக்காக இன்று (31.12.2011) சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

மயிலி வீதி, ஆறுகால்மடம்

## பகிரங்க ஏலம்

பருத்தித்துறைப் பிரதேச சபை- புலோலி

**மானாண்டிச் சந்தையில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக் கடை**

மேற்படி மாட்டிறைச்சிக்கடையை 2012ஆம் ஆண்டு எடுத்து நடத்துவதற்கான ஏலம் 06.01.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் [புலோலி] நடைபெறும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏலதாரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பணத்தை தலைமை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

பூ.சஞ்சீவன், தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.


7 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான ஆங்கிலக் கற்கை நெறி
7ஆவது புதிய பிரிவும் ஆரம்பம்-
01.01.2012 பி.ப 1 மணி
புறஜெக்ரர் மூலம் அகலத் திரையில்......
5 மாத காலம் மாதாந்தம் ஒவ்வொரு பிரிவிலும் 25 பேர் மட்டுமே.
தொலைபேசி மூலம் பதிவுகள் இடம்பெறமாட்டாது.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016, 0214914527.
www.thisakaddi.lk. thisaikaddi@sltnet.lk

யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை



A/L பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் சித்தியடையாதவர்களும் வெளிநாட்டில் உங்கள் கல்வியைத் தொடர விசேட ஆங்கில நெறிகள் ஆரம்பம்.

**IELTS, B1**
*AUDIO VIDEO*
புறஜெக்ரர் உதவியுடன்
01.01.2012 பி.ப 2 மணி

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016, 0214914527.
www.thisakaddi.lk.
thisaikaddi@sltnet.lk



INSTITUTE OF INFORMATICS STUDIES

அனைத்து கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் :- 05.01.2012 / 07.01.2012 — 10.00 a.m

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

**கணினி திருத்தம் (Computer Repair)**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.3
அழையுங்கள் -0779086737




**BTEC HND in Business Management**
Leading to BBA / B.Com. from UK

கல்வியாண்டு 2012 தை மாதத்திற்குரிய (வார, வாரஇறுதிநாள்) பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

புதிய பிரிவு ஆரம்பம் : 28.01.2012 காலை 10.00 மணி

உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannal Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk


## மரண அறிவித்தல்

### பொன்னையா நாகலிங்கம்



நெல்லியடி பாணாதறையைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொரண்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகலிங்கம் கடந்த 29.12.2011 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - லக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முருகேசு, சிவப்பிரகாசம், தங்கம்மா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கமணி (கனடா), சிவபாலன் (லண்டன்- இலங்கை மின்சாரசபை சுன்னாகம்), சிவயோகன் (கனடா-S.I.Srilanka), சிவதீசன் (கனடா), தயாமணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகம்மா, தங்கம்மா, வல்லிபுரம், பத்மவேணி, சின்னத்துரை, சிவக்கொழுந்து, மகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபாஜினி, கோபிநாத் (ஆஸ்திரேலியா), பிரேம்நாத், வ.முரளி, விஜிதா, நிருஜா, நிரஞ்சன், வருணா, சாஜினி, ராகுலா, நிலாஜினி, மாதுமை, சிந்துசா, பாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஜோதி, கீர்த்தனா, லக்ஸ்மனா, அரிசா ஆகியோரின் அன்புப் பூட்டனும் முன்னாள் நெல்லியடி பிரபல வர்த்தகர் திருமகள் புத்தகசாலை உரிமையாளரான காலஞ்சென்ற வல்லிபுரம் சிவசோதி அவர்களின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.01.2012) ஞாயிற்றுக்கிழமை ரொரண்டோ, கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: P. சண்முகம்,
(முன்னாள் திருமகள் ஊழியர்).

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி, கரவெட்டி.


**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்**
அனைவருக்கும் 75% வரை கட்டணக்கழிவு

**DMI** COMPUTER EDUCATION

**veta®**
Experts in English Training

- Diploma in Information Technology
- Diploma in PC Application
- Diploma in Microsoft Office
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Tally Financial Accounting Training
- Diplima in Video Production & Multimedia
- AutoCAD 2D & 3D Animation

**Veta-Spoken English**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | Time |
|---|---|---|
| பிரிவு II | 02/01/2012 | 9.30 am |
| பிரிவு III | 04/01/2012 | அல்லது |
| பிரிவு IV | 07/12/2012 | 3.30 pm |

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) | No.174, கண்டி வீதி, | KKS வீதி, ஜெட் மோட்டோர்ஸ், கட்டடம் NSB அருகில். |
| Tel.: 021-222 4403 | Tel. : 021-226 2470 | Tel. :021-227 0243 | Tel. :021-224 1970 |

**மணமகன் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் லக்கினத்தில் செவ்வாய், 50 பாவம், 23 வயது மணமகளுக்கு (உத்திரட்டாதி) வெளிநாட்டுப் பிரஜாவுரிமையுடைய மணமகன் தேவை.
தொடர்பு- 0750469793, 0775023469

**German, Swiss வகுப்புகள்**
டொச்ஸ்(Deutsch) மொழி வகுப்புகள்CD-Book விளக்கத்துடன் நடைபெறுகிறது. அடுத்த வகுப்புகள் 02.01.2012 ஆம் திகதி ஆரம்பமாகிறது. German Embassyயில் கேட்கப்படும் Certificate க்கு எற்றவாறு
**10, Palaly road, Jaffna.**
**T.P- 0771604823**

**தேசிய கல்வியியற்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட....**

# ஆசிரிய மாணவர்களே!

உங்களுக்குத் தேவையான சீருடைப் பொதி

**Bottom ✲ T.Shirt ✲ Shoes**
**Cap ✲ Fit Shorts** போன்றவற்றுக்கு

விசேட விலையில்

**ஒலிம்பியா ஸ்போட்ஸ்**
இல.6, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel.: 0212223490, 0778060267


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புயல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யம் நேற்றுக் காலை நீங்கியது. இது நேற்று இந்தியாவை ஊடறுத்துச் செல்லும் போது தமிழகத்தின் புதுச்சேரி மாவட்டத்தைத் தாக்கியது. [illegible]னால் அங்கு 5 [illegible] வரை பலியானார்கள்.

(த-15)

## முஷ்டியை முறுக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனும் உறுப்பினர்களின் பெயர் பொறிக்கப்பட்ட பலகை ஒன்றை எடுத்துக் கொண்டு விஜயகாந்தை நோக்கி வீறுகொண்டு பாய்ந்தார். இந்தவேளையில் சக உறுப்பினர்கள் இருவரையும் பிடித்துக் கொண்டனர். கடமையில் இருந்த பொலிஸாரும் பாய்ந்துவந்து கைகலப்பு ஏற்பாடாதவாறு இருவரையும் பிடித்தனர்.

முதல்வர் பொலிஸாரைப் பார்த்து நிஷாந்தனையும், மங்களநேசனையும் கைது செய்யுமாறு கூறினார். இந்தவேளையில் எதிரணி உறுப்பினர்கள் சபை உறுப்பினர்களைக் கைதுசெய்ய முடியாது எனக் கூச்சலிட்டனர்.

முதல்வர் கைது செய்யுமாறு கூறியதை அடுத்துப் பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்யச் சென்றனர். உறுப்பினர்கள் இருவரும் தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்ததை அடுத்துப் பொலிஸார் கைது செய்யாமல் திரும்பிச் சென்றனர்.

இந்தவேளையில் மாநகரசபை உறுப்பினர் நிஷாந்தன் முதல்வரைப் பார்த்து 'முடிந்தால் கைது செய்து பாருங்கள்' என்று சவால் விடுத்து வெளியேறினார். அவருடன் மங்களநேசனும் சென்றார்.

நிஷாந்தனும், மங்களநேசனும் சபை உறுப்பினர்களுக்கான அறையில் சிறிது நேரம் ஓய்வில் இருந்தபின்னர் மீண்டும் கூட்டத்துக்கு வந்தனர்.

இதனையடுத்து சிறிது நேரத்தின்பின் கூட்டம் நிறைவுறுவதாக முதல்வர் அறிவித்தார்.

(த-7)

# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் மகேஸ்வரன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது B17-2/2 மாளிகாவத்தை தொடர் மாடியில் வசித்தவருமான வீரசிங்கம் மகேஸ்வரன் 28.12.2011 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உருப்பிராய் வடக்கு வீரசிங்கம் லட்சுமிபிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான உரும்பிராய் வடக்கு மாரிமுத்து சிவஞானவதி தம்பதியரின் மருமகனும், இரத்தினாவதியின் அன்புக் கணவரும் Dr. ரோகன், யசோதா, சுஜாதா, சுகந்தா, திலீபன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாமரைச் செல்வி, சிவதாசன், யோகேந்திரா, விஜயகுமார், சுகன்யா ஆகியோரின் மாமனாரும், சஞ்சிற்,பிரணேஸ் [illegible]தர்சிகன், அஸ்வினி, கவிணேஸ் ஆகியோரின் [illegible]பரனும், காலஞ்சென்ற சச்சிதானந்தன் ராஜேஸ்வரி மற்றும் பஞ்சனானந்தன்(Retd Survey or Department) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகாம்பிகை, பராசக்தி, சற்குணவதி, சிவணேசன் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் பரஞ்சோதி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் 02.01.2012 திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் பொரலை ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப.2.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

B17-2/2
மாளிகாவத்தை,
கொழும்பு - 15.

தகவல்:
ரோகன்(மகன்)

## பழனித்துரை புஸ்பநவக்குமார் (நவம்)



நல்லூர், சிவன் புது வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பழனித்துரை புஸ்பநவக்குமார் (நவம்) 29.12.2011 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனித்துரை- இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் பெறாமகனும், ஞானம்-லூத்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஏமல்டா (கலா- கொழும்பு) வின் அன்புக் கணவரும், றொசானி (மஞ்சு- கொழும்பு) பாசமிகு தந்தையும், புஸ்பரெத்தினம், புஸ்பமாலா, புஸ்பவரதகுமாரன் (லண்டன்), புஸ்பவரதகுமாரி (சுவிஸ்), வரதகோகிலகுமாரி (இந்தியா), ஜெனபதகல்யாணி (சுவிஸ்), நந்தினி (ஜேர்மனி), இமையாணன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2011) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

109/08, சிவன் புதுவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர், சி. நிஷாந்தன்.

## தியாகர் அருணாசலம் (நயினாதீவு)

(முன்னாள் உரிமையாளர், வெள்ளிவிலாஸ் யாழ்ப்பாணம்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொட்டடி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகர் அருணாசலம் நேற்று (30.12.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

117/4, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
சு.தியாகலிங்கம், (அதிபர்,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை).

## நியாயமான, நிலைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு கூறினார் தமிழரசுக் கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

திருகோணமலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இரா. சம்பந்தன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன், அரியநேத்திரன், யோகேஸ்வரன், சிறிதரன், செல்வராசா, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சி.வி.கே. சிவஞானம், குலநாயகம், பரஞ்சோதி, பேராசிரியர் சிற்றம்பலம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான துரைரட்ணசிங்கம் உட்பட வடக்கு, கிழக்கிலுள்ள கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

சம்பந்தன் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாடாளுமன்ற தெரிவுக்குழுவை கூட்டமைப்பு முற்றாக நிராகரித்து விடவில்லை. கூட்டமைப்பும் அரசும் நடத்தும் பேச்சுகளில் காணப்படும் இணக்கப்பாடுகளை ஆராய்வதாகவே நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைய வேண்டும்.

நாம் ஒன்றும் புதிதாக கேட்கவில்லை பண்டா - செல்வா ஒப்பந்தம், மங்கள முனசிங்க தெரிவுக் குழுவால் முன்வைக்கப்பட்ட விடயங்களையே முன்வைத்துள்ளோம். - என்றார்.

* தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்துதல்; கிளைகளை அமைத்தல்.
* நிர்வாக ரீதியில் சில மாற்றங்களை ஏற்படுத்துதல்
* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்தல்
* அரசியல் நிலை - அரசியல் தீர்வு
* சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு
* நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை
* ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை
* ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம்

ஆகிய விடயங்கள் விரைவாக ஆராயப்பட்டன.

திருகோணமலையில் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டம் காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை நடைபெற்றது.

''தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கடும்போக்கை பின்பற்றுகின்றது, புலிகளின் கோட்பாடுகளுக்கு அமைய செயற்படுகின்றது, புலம்பெயர் தமிழர்களின் எண்ணப்பாடுகளுக்கும் அவர்களுடைய அட்டவணையின் படியும் செயற்படுகின்றது.'' என்ற ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்களையும் சம்பந்தன் முற்றாக நிராகரித்தார்.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலும் மேற்கொண்ட அரசியல் முயற்சிகளின் அடிப்படையிலும் நியாயபூர்வமாக நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். நாம் அரசுடனான பேச்சுகளின் நிதானமாகவும் பக்குவமாகவும் செயற்பட்டுவருகின்றோம் அரசும் உண்மையை உணர்ந்து நேர்மையாகச் செயற்பட முன்வரவேண்டும்.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து இன மக்களும் நன்மை அடைய இது அவசியம். போர் முடிந்த பின்னர் அதற்குக் காரணமாக இருந்த கருமங்களை கருத்தில்கொண்டு காணப்படும் அரசியல் தீர்வுதான் சமாதனத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் வழிவகுக்கும் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சட்டபூர்வமாக பதிவு செய்வது தொடர்பாக ஆராயப்பட்டதாக கூறிய சம்பந்தன், தற்போது அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடப்பட்டு பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் சம்பந்தன் கூறினார்.

இதேவேளை, தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பது குறித்தான பேச்சின் போது இலங்கை அரசு முன்வைத்துவரும் அடிப்படையற்ற நிபந்தனைகள் குறித்து இலங்கை தமிழரசுக்கட்சி நேற்று விரிவாக விவாதித்திருக்கிறது.

### அடுத்த வருடாந்த மாநாடு மட்டக்களப்பில்

அடுத்த வருடம் கட்சியின் வருடாந்த மாநாட்டை மட்டக்களப்பில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும், அரசுடன் நடத்தப்பட்டுவரும் தீர்வுப் பேச்சுகளின் தற்போதைய நிலைமை குறித்தும் தலைவர் சம்பந்தன் விரிவான விளக்கமொன்றை ஆரம்பத்திலேயே வழங்கினார்.

இதன் பின்னர் கட்சியின் இதர உறுப்பினர்கள் தற்போதைய நிலவரம் மற்றும் தமிழ் மக்களின் உணர்வுகள் குறித்து விரிவாக விவாதித்தனர்.

''தீர்வுப் பேச்சுகளில் தமிழ்க் கூட்டமைப்பு மிகவும் பொறுமையாக, மிதவாதப் போக்கைக் கடைப்பிடித்து வருவது நிரந்தர தீர்வொன்று தமிழர்களுக்கு கிடைக்கவேண்டும் என்ற இதயசுத்தியுடன்தான். ஆனால், இதனைப் பலவீனமாகக் கருதும் அரசு பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகிறது'' என்று இங்கு பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### விட்டுக்கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை

காணி, பொலிஸ் அதிகாரங்கள் என்பன புதிய கோரிக்கை அல்ல. எமது பிரச்சினையின் அடிப்படை அவை. அவ்வாறானவற்றை விட்டுக்கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் எடுத்துக்கூறினர்.

சுயநிர்ணய உரிமை, வடக்கு, கிழக்கு இணைப்பு மற்றும் இதர அடிப்படை உரிமைகளுக்கான கோரிக்கை தமிழரசுக்கட்சியினால் இன்று நேற்றுக் கொண்டுவரப்பட்டவை அல்ல. தந்தை செல்வாவின் காலத்திலிருந்து இவை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பின்னிப்பிணைந்தவை. இந்தக் கொள்கையிலிருந்து இம்மியளவேனும் பின்வாங்கக் கூடாது என்று தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் இந்தக்கூட்டத்தின்போது ஏகோபித்த குரலில் வலியுறுத்தினர்.

(ஒ-2)

**வாகனம் விற்பனைக்கு**

TOYOTA dolphin GL body Engine 100%
நல்ல நிலையில் உள்ள van JC-xxxx
[illegible]
தொடர்புக்கு
0775776660, 0777066625

## குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் திருவெம்பாவை வழிபாடு

குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரி அம்பாளின் திருவருளால் இருபது வருடங்களின் பின்னர் திருவெம்பாவை வழிபாட்டினை குரும்பசிட்டி கிராமத்திலேயே நிகழ்த்தக் கூடிய சூழல் உருவாகியுள்ளமையை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

திருவெம்பாவை பூஜை வழிபாட்டு நிகழ்வுகள் தினமும் காலை 7.30 மணி முதல் நடைபெறும். வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளுடன் தினந்தோறும் அன்னதான நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அடியார்களின் வசதி கருதி வடக்குப் புன்னாலைக் கட்டுவன் சந்தியில் இருந்து காலை 7.00 மணிக்கு தனியார் பேருந்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகிறோம்.

இவ்வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்புடன் அழைக்கிறோம்.

கோவில் திருப்பணிகளுக்கு உதவ விரும்புவோர் அதற்கான பற்றுச்சீட்டினை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பரிபாலனசபை,
குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களே!
பக்கம் 22 ஐப் பார்க்கவும்......

BEACON
கலை, வர்த்தகப்பிரிவு
2014 A/L
கலைப்பிரிவு: தமிழ் நாகதமிழிந்திரன், இந்துநாகரிகம் ரமணன், அளவையியல் S.S.மனோகரன்
வர்த்தகப்பிரிவு: பொருளியல் அருணன், கணக்கீடு சுகிர்தன், வணிகக்கல்வி முரளி
ஆரம்பம்: 02.01.2012
திங்கட்கிழமை, காலை 8.00 மணிக்கு
C/8508)(5,6,7)

## இசை நிகழ்வில் மோதல்; 5 பொலிஸார் படுகாயம்

மாத்தறை ஹக்மன பகுதியில் இசைநிகழ்ச்சி ஒன்றின் போது பொலிஸாருக்கும், கிராம இளைஞர்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பொலிஸார் ஐந்துபேர் படுகாயமடைந்தனர். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இசைநிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்ற பொலிஸார் இரவு 10 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக்கூடாது என்று அறிவித்ததையடுத்து அங்கிருந்த இளைஞர்கள் பொலிஸாரைத் தாக்கத் தொடங்கினர். பொலிஸாரும் தற்பாதுகாப்பு நடவடிக்கைக்காகத் தயாரானபோது அங்கு பெரும் மோதல் ஏற்பட்டது.

## 15,000 பட்டதாரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 296 அதிகாரிகள் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், அலரிமாளிகைக்கு சென்று நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது, அரச கொள்கைகளுக்கமைய அரச சேவையிலுள்ள பதவி வெற்றிடங்களை வருடாந்தம் நிரப்புவதற்கு இனி நடவடிக்கை எடுப்பது என்று கொள்கையளவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(உ)

THE SCIENCE CORNER
2012 DAY CLASS
Biology
நேரம்: சனி, ஞாயிறு 10.30 - 11.30 a.m.
ஆரம்பம்: 31.12.2011 (நாளை)
சு.பொன்திவாகரன்

THE SCIENCE CORNER Clock Tower Lane, Jaffna
PHYSICS ➡ K.Selvan BSc (Hons)
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 30.12.2012
English Medium — Sat, Sun : 2.00-3.00p.m — A/L 2014
தமிழ் மொழி மூலம் Batch I : செவ், வியா : 4.00-5.00p.m Batch II : சனி, ஞாயிறு : 10.30-11.30a.m
A/L 2013 அலைகளும் அலைவுகளும் திங்கள், வெள்ளி : 4.30-5.30
A/L 2012 கடந்தகால வினாவிடை மீட்டல் வகுப்புகள் செவ், வியா : 6.15 - 7.30a.m

A/L - 2012
Day Class
ஆரம்பம்: ஜனவரி - 2
கலை
திங்கள் - காலை 7 மணி
வர்த்தகம்
திங்கள் - காலை 8 மணி
DMI Jaffna
(C/7166(5)

PHYSICS ➡ K.Selvan BSc (Hons)
Group Class A/L 2014
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 01.01.2012 ஞாயிறு - 5.00P.M
Tamil & English Medium
புகையிரத வீதி, அரசடி, கந்தர்மடம்

புதியதோர் உலகம் செய்வோம்
DCM
1 (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) யாழ்நகர்
2 வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்
A/L DAY CLASS
பொருளியல் வரதராஜன் | புவியியல் குமரன்
கணக்கீடு பகீரதன் | தமிழ் சந்திரலிங்கம்
வணிகக் கல்வி முரளி | இந்துநாகரீகம் ஸ்ரீஸ்
அரசியல் சுகாஷ் | வரலாறு ஆனந்தன்
அளவையியல் துரை | நாட. அரங்கியலும் ரமேஸ்
இரு இடங்களிலும்
ஆரம்பம் 2-1-2012 திங்கள் 8.00
கீழே விழ்வது தோல்வியல்ல. எழாமல் கீழேயே கிடப்பதுதான் தோல்வி. தோல்வியடைவது கஷ்டமானதுதான் ஆனால், வெற்றிக்கு முயற்சிக்காதது அதைவிட மோசமானது.
நிர்வாக இயக்குநர் S.வரதராஜன் B.A (Hons)
(பேராதனைப் பல்கலைக்கழக முன்னைநாள் பொருளியற்துறை விரிவுரையாளர்)
DCM

விஜ்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி-யாழ்.
தரம் 6 இலிருந்து O/L வரை EVENING BATCH
புதிய பிரிவு ஆரம்பம்: 02.01.2012 பி.ப.3.30
தீவக, தென்மராட்சி மாணவர்களுக்கான
O/L Sat, Sunday BATCH ஆரம்பம்: 07.01.2012 (3 மணி-2மணிவரை)

D.C.M யாழ். நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
வரலாறு
R.R.ஆனந்தன்
Day Class
திங்கள், செவ்வாய், வெள்ளி 8.00
ஆரம்பம்: 02.01.2012 திங்கள்

A/L DAY CLASS
ஆரம்பம் : ஜனவரி 02 திங்கள் காலை 8.00
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு : K.பாலகஜன்
பொருளியல் : NB.கஜீதரன்
வணிகக்கல்வி : S.K.பாலசுபேஸ்
கலைப்பிரிவு
தமிழ் : A.K கீர்த்திராஜன் | அளவையியல் : P. கமல்
இந்து நாகரீகம்: T.ஸ்ரீஸ் | பொருளியல் : NB. கஜீதரன்
வரலாறு : RR.ஆனந்தன் | அரசியல் : A.K ஜெமின்சன்
புவியியல் : S.R.பாலா | நாட அரங்கியல் : S.R. ரமேஸ்
இலகு கணிதம் : S.சயந்தன் | இந்து சமயம் : T. ஸ்ரீஸ்
விவசாயம் : K.கிரி | கிறிஸ்தவம் : R.கஸ்ரோன்
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோவில் அருகாமை)

விஜ்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி-யாழ்.
A/L DAYCLASS
கலைப் பிரிவு
Tam. குழந்தை (8.00) | H/C. N.T. தரன் (9.00)
Geo. தினேஸ் (10.00) | Log. வாகீசன் (11.00)
His. தாஸ் (12.00) | P/Sc. ஸ்ரீரங்கநாத் (Sat, Sun. 10.00)
Chri. அமலன் (9.00) | Dram.கஜீதரன்(12.00)
ஆரம்பம்: 02.01.2012 8 மணி
தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
கல்வியாண்டு 2012/13
யாழ், பேராதனைப் பல்கலைக்கழகங்களின் பட்டப் பாடநெறிகளான
❖ G.A.Q
❖ 1st in Commerce
க.பொ.த. உயர்தரம் எப்பிரிவிலேனும் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விரிவுரைகள் 07.01.2012 ஆரம்பமாகின்றன.
தொ.பே. இல. 0726807756 0773825266
இயக்குநர், பட்டப்படிப்புகள்கல்லூரி, 57/18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை வங்கி முன்பாக)

ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி
இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாதிருப்பதற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தமையாலாகும்.
ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புத்தகம் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட உங்கள் தாய்மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!
எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தன் தாய்-தந்தையருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.
நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப்பட்டறையில் (work shop) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 02.01.2012 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். (இம்முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்)
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப. 8 - 10 | பிரிவு III பி.ப. 01 - 03
பிரிவு II மு.ப. 10 - 12 | பிரிவு IV பி.ப. 03 - 05
பயிற்சிக் கட்டணம் 3000/= (அடுத்த ஆண்டிலிருந்து பயிற்சிக் கட்டணம் ரூபா. 6500/=)
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்) TEL:0776214567

DCM
A/L - 2014
கலை, வர்த்தகம்
ஆரம்பம் ஜனவரி 7 8 மணி
யாழ்.நகர்
DCM

பொறித்த விலையைவிடக் குறைவான விலையில்....
பாடசாலை மாணவர்களுக்கான Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள
கபிலா காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
27.12.2011 முதல் 01.01.2012 வரை
கபிலா பாதணியகம்
13,நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

துன்பம் வந்து விடுமோ என்று நினைக்கும் எண்ணங்கள் இருக்கிறதே இவை துன்பத்தை விட துயரமானவை.
-ஹைஸாடிக்-



# வார வசந்தம்



உதயன் | 31 டிசெம்பர் 2011 சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

## தமிழ் மக்களின் உரிமையை மறுக்கிறது சிங்கள அரசு!

**வி**டுதலைப் புலிகள் தாம் வகுத்துக் கொண்ட கொள்கைகளுக்கு அமைய , தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளுக்கு தொடர்பு இருக்கிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். இந்தியாவில் இருந்து வெளியாகும் ''டெக்கன் குரோனிக்கல்'' நாளேட்டில் செய்தியாளர் பகவான் சிங்கிற்கு அலரி மாளிகையில் வைத்து அளித்துள்ள செவ்வியிலே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேற்கு நாடுகளில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் தான் இலங்கைக்கு எதிராக அடிப்படையற்ற விவகாரங்கள் குறித்து அங்குள்ள அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள் என்றும் செவ்வியிலே தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தில் இருக்கும் புலி ஆதரவாளர்களால் இலங்கைக்கு என்றுமே ஆபத்து இருக்கிறது. நாடு கடந்த தமிழீழ அரசின் தலைவராக இருக்கும் உருத்திரகுமார் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தவர் என்ற செய்திகள் ஆரம்ப நாள்களில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. போர் இடம்பெற்ற காலப்பகுதியில் உருத்திரகுமாரின் செயற்பாடுகள் முக்கிய பங்கு வகித்துள்ளன.

விடுதலைப் புலிகளுடன், சிங்கள அரசு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்ட 2002 காலப் பகுதியில், உருத்திரகுமார் வன்னிக்கு பல தடவைகள் வந்து சென்றமை எல்லோரும் அறிந்த விடயம். இப்பொழுது உருத்திரகுமார் நாடு கடந்த தமிழீழ அரசின் தலைவராக இருப்பது, மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தலையிடியை என்றைக்குமே கொடுக்கப் போகிறது. இதனை அறிந்து கொண்டுதான் ராஜபக்ஷ ''டெக்கன் குரோனிக்கலுக்கு'' வழங்கிய நேர்காணலில் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கேட்ட வடக்கு, கிழக்கு இணைப்பு பொலிஸ் மற்றும் காணி அதிகாரப் பகிர்வைத்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கேட்டுள்ளனர். இதற்கிடையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஜனவரி மாதம் நடுப் பகுதியில் இலங்கை வரவுள்ளார்.

தீர்வில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என அரசு பகிரங்கமாகவே தெரிவித்து வருகிறது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுகள் முறியும் கட்டத்தில் உள்ள நிலையில் கிருஷ்ணா வருவதானது தமிழ் மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு அல்ல. இலங்கை அரசில் அக்கறை கொண்டே வருகிறார். சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகள் குறித்து இந்தியாவுக்கு நன்கு தெரியும். அதனால் தான் தமிழர் பேச்சு முறியும் தறுவாயில் இலங்கைக்கு வந்து தமிழ் தலைமைகளை குழப்பி, மீண்டும் பேச்சுக்கு இழுத்து தீர்வைப் பின் நகர்த்தி விட்டு அதில் குளிர் காயவுள்ளது. தமிழ்த் தரப்புகள் தாமாக எடுக்கும் முடிவுகளில் தான் தீர்வு விடயத்திலும் ஒரு முன்னேற்றகரமான செயற்பாடுகள் உருவாக வாய்ப்பிருக்கிறது.

இந்தியாவின் முடிவையோ அல்லது, வேறு சர்வதேச நாடுகளின் கருத்துக்களைக் கேட்டு எந்த முடிவு எடுத்தாலும் அது தமிழர் தரப்புக்குப் பாதகமான விளைவாகத்தான் அமையும் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்தியா தனது நாட்டின் நலனில் அக்கறை கொண்டே எமது நாட்டு தீர்வு விடயத்தில் மூக்கை நுழைக்கிறது. இந்தியாவினால் ஈழமக்கள் பட்ட காயம் இன்னும் ஆறவில்லை. இதற்கிடையில் மேலும் தமிழர்களுக்கு வலிகளைக் கொடுக்க முடியுமே தவிர ஈழத்தமிழர்களின் தீர்வு விடயத்தில் இந்தியா எந்தவிதமான நடவடிக்கைகளிலும் துணை நிற்கப்போவதில்லை என்பது வரலாறு தந்த படிப்பினையாகும்.

30 வருடங்கள் கழிந்தாலும் தமிழ் இனம் தமது உரிமை விடயத்தில் சிங்கள அரசுடன் சளைக்காமல் போராட வேண்டும். சளைக் காமல் போராடும் போதுதான் தமிழ் மக்களுடைய தீர்வு தொடர்பில், தமிழ் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்ற வெளிப்படையை உருவாக்கமுடியும்.

போரில் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் தமது அவயங்களை இழந்துள்ளனர். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி இறந்துள்ளனர். தமிழர் போராட்டம் தோல்வி கண்டநிலையிலும் எமது சிந்தனை இலக்கு அனைத்தும் மாறாமல் அரசியல் போராட்டத்தை நடத்த வேண்டும்.

தமிழ் மக்கள் கேட்டதைத்தான் விடுதலைப் புலிகள் கேட்டார்கள். விடுதலைப் புலிகள் கேட்டதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்கிறது. விடுதலைப் புலிகள் சம பலத்துடன் இருக்கும் போது பல பேச்சுகளைச் சிங்கள அரசுடன் மேற்கொண்டனர். அந்த பேச்சுகளில் தமிழ் மக்களுடைய உரிமைகளை வலியுறுத்தியே விடுதலைப் புலிகள் பேச்சுகளில் ஈடுபட்டனர். கடைசி வரை விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே போராடி மடிந்தனர். அதே போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இறுதிவரை தமிழ் மக்களின் உரிமைக்காகப் பேச வேண்டும். அப்பொழுதுதான் உலக நாடுகள் ஓர் உண்மையை விளங்கிக் கொள்வார்கள்.

பேச்சுகளில் பாதிக்கப்பட்ட தரப்பு வலிமையாக இருக்கும் போதே பேச்சு வினைத்திறனுடன் செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் உருவாகும். இதனால் தமிழ்த் தரப்பு தன்னளவில் வலிமையாக இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். போர் முடிவுற்ற ஆரம்பகாலத்தில் தமிழ்த் தரப்பு வலிமை நிலையில் இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் தற்போதைய நிலை அவ்வாறானதல்ல.

தேர்தலில் கிடைத்த வெற்றிகள் உள்ளூர் மட்டத்தில் இருந்து ஒரு வலிமை நிலை யினைக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்கள் ஒரு சிறிய தேசிய இனம். அது தன் முழு வலுவையும் ஒன்று திரட்டி செயல்படும் போதே புறத்தேயிருந்து வருகின்ற தேசிய இன ஒடுக்கு முறைக்கு முகங்கொடுக்க முடியும். பேச்சுக்களத்தைத் தனது நலனுக்காக அரசு ஒரு நாடக மேடையாகப் பயன்படுத்த முனைகின்றது என்பது தமிழ் மக்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேசமயப் பட்டுள்ள சூழ்நிலையில் அரசு எதுவும் வழங்காமல் இருப்பது சர்வதேச ரீதியாக தமிழ் மக்களை பலப்படுத்தவே உதவும். சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இப்பேச்சு வார்த்தை நடைபெறுவதனால் சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்களைக் கொண்டே இப்பொறிமுறையை உருவாக்குவது நல்லது. இனப் பிரச்சினைக்கு உள்ளூர் மட்டத்தில் தீர்வு காண முடியாததனால் விவகாரம் சர்வதேச மட்டத்துக்குச் சென்றது. திரும்பவும் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இல்லாமல் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடக்கும் என ஒரு போதும் கூறிவிட முடியாது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். வட கிழக்கு தமிழ் மக்களினுடைய பாரம்பரிய பிரதேசங்கள். தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு. இதனை சிங்கள அரசு மறுத்து வருகிறது.

■துன்னாலைச் செல்வம்

## எழுவான் திசையில் கதிராய் எழுவோம்

**"ஜ**னநாயக ஆட்சியின் வழிகாட்டிகளாக நாமே இருக்க வேண்டும்" என்பது ஐ.நா. சபையின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான பிராங்ளின் ரூஸ்வெல்ட்டின் கருத்தொன்று. தவிர்க்க முடியாதபடி இன்று உலகின் ஒப்பற்ற தனிப்பெரும் வல்லரசாக ஐக்கிய அமெரிக்கா விளங்குகின்றது. பல்வேறு பட்ட சாணக்கியங்களைக் கையாண்டு இன்றைய உலக ஒழுங்கில் வலுவான நிலையை அது பெற்றுள்ளது.

சூரியன் அஸ்தமிக்காத இராச்சியம் என்ற தனிப் பெருமையுடன் உலக நாடுகள் பலவற்றில் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் கோலோச்சிய பிரித்தானியாவின் ஒரு குடியேற்ற நாடாக இருந்த அமெரிக்கா 1ஆம், 2 ஆம் உலக மகா யுத்தங்களில் எவ்வாறான தந்திரோ பாயங்களைக் கையாண்டு இன்றைய நிலையை எய்தியது? இந்த நிலையை தக்க வைக்க எவ்வாறான காய் நகர்த்தல்களை மேற்கொள்கின்றது? என்பன தனியான ஆய்வுகள்.

இலங்கையின் சுதந்திரகாலமுதல் இங்கு கனன்று கொண்டிருந்த இனப் பிரச்சினையானது கடந்த மூன்று தசாப்தங்களாகக் கொழுந்து விட்டெரிந்து; உறங்கு நிலைக்குச் சென்றுள்ள தற்போதைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாதபடி அமெரிக்க நலன் சார்ந்தும் தமது இலக்கை நோக்கி நகர வேண்டிய சூழமைவில் உள்ளமை வெளிப்படை. என்றுமில்லாத வகையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெற்ற ஈழத் தமிழர்கள் சார்ந்த பல சுற்றுப் பேச்சுக்கள் இத னையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

எண்பதுகளின் தொடக்கத்தில் ஈழ விடுதலை அமைப்புக்களின் தலைவர்களுக்கும் இந்தியாவுக்குமிடையில் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் இடம் பெற்ற உறவுகளை மீள நினைவுபடுத்தும் ஒரு தோற்றப்பாட்டை இதில் அவதானிக்க முடிகின்றது. அந்தக் கால கட்டத்தில் எந்த அமெரிக்க பிரசன்னத்தை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தவிர்ப்பதற்கு இந்தியா ஈழத் தமிழர் பிரச்சினையை பயன்படுத்த நினைத்ததோ அதே அமெரிக்க நலனை முன்னிறுத்தி தமது வாழ்வுரிமையை நிர்ணயிக்கும் புறநிலைக்குத் தள்ளியுள்ள வரலாற்று முரணை இந்தியா ஏற்படுத்திவிட்டுள்ளது.

இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் தவறான வழிகாட்டல்கள், முடிவுகள் காரணமாக ஈழத்தில் ஏற்பட்ட கொந்தளிப்புகள், பேரிழப்புகள், அழிவுகள் அளவிட முடியாதவை. உலக அரங்கில் இந்தியா தன் இறைமையை, சுயாதிபத்தியத்தை எவ்வாறு பேண முற்படுகின்றதோ அவ்வாறு ஈழத்தமிழர்களது வாழ்வுரிமையும் சுயாதிபத்தியமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை இந்தியா தொடர்ந்து புறந்தள்ளி [illegible].

தமது வி[illegible] முடியாத ஒப்பற்ற தியாகங்களாலும் அளவிட முடியாத இழப்புக்களாலும் கட்டியெழுப்பிய மக்களியக்கத்தை இந்தியா ஏனைய பல நாடுகளின் துணையுடன் தமிழர் தாயகத்திலிருந்து உடைத்தெறிந்துள்ளது. போர் நிறைவுக்கு கொண்டுவரப் படுவதாக அறிவிக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களின் வாழ்வியலில் முன்னேற்றம் ஏற்படவில்லை. உருப்படியான அரசியல் தீர்வுக்காண எவ்விதமான எத்தனங்களும் இங்கு காணப்படவில்லை. போருக்கான வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்கிய இந்தியா இன்று ஈழத் தமிழர்களின் துயர் துடைக்க ஆக்கபூர்வமாக எதையுமே செய்யவில்லை. மாறாக உலகின் எட்டுத் திசைகளிலிருந்தும் இலங்கைக்கு எதிராக எழுப்பப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அதனைப் பாதுகாப்பதில் இந்தியா தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

எந்த வகையில் பார்த்தாலும் ஈழத்தமிழர்களது வாழ்வுரிமைப் பிரச்சினை நீண்டு செல்வதற்கும் அமெரிக்காவரை எடுத்துச் செல்லப்பட்டிருப்பதற்கும் முக்கிய காரணம் இந்தியாவே. இந்தியா தன் தென் மாநிலங்களிலுள்ள கோடிக் கணக்கான மக்களின் கோரிக்கைகளை புறமொதுக்கி, அவர்களின் பழம் பெருமைகளையும் வீரமிகு வரலாற்றையும் உதாசீனம் செய்து மேற்கொண்டு வரும் இந்திய கொள்கை வகுப்புக்கள் இந்திய இறைமைக்கே சவாலாகக் கூடிய ஏது நிலையைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்கள் இந்தியா மீது கொண்டிருந்த ஆழமான பற்றுறுதியை, நம்பிக் [illegible] காலங்களிலிருந்து தெளிந்து கொள்ள முடியும்.

**நிகழ்வு -1** 1984 இல் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சீக்கியத் தீவிரவாதி ஒருவனால் சுட்டுக் கொல்லப்படுகின்றார். இந்தச் செய்தி ஈழத்தில் பரவியதும் இங்கு பெரும் சோகம் கவிகிறது. என்றுமில்லாதவாறு மக்கள் தாமாகவே வீதிகளில் இறங்கி வாழை, தோரணங்கள் கறுப்புக் கொடிகளைக் கட்டி தமது துக்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

**நிகழ்வு-2** 1987 ஜூலை 29 இல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து ஆயுதம் தாங்கிய இந்திய இராணுவத்தினர் அமைதிப் படையினர் என்ற முத்திரையுடன் ஈழத்தில் தரையிறங்குகின்றனர். இந்தியா எப்போதும் தமக்கு நீதியே செய்யும் என்று உறுதியான நம்பிக்கை கொண்ட மக்கள் மிக அன்புடன் மாலையிட்டு அவர்களை வரவேற்கிறார்கள். வீதிகளில் செல்லும் போதெல்லாம் கையசைத்து தமது அன்பை வெளிப்படுத்தினார்கள். பின்னர் அதே மக்கள் மீது இந்திய அமைதி காக்கும் படையினர் நடத்திய கொடூரங்கள் எண்ணில் அடங்காதவை.

**நிகழ்வு- 3** இறுதியாக இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கையை வென்று இந்தியா கிண்ணத்தை வென்றெடுக்கின்றது. தமிழர் பிரதேசங்களில் இனம்புரியாத மகிழ்ச்சி பல இடங்களில் பட்டாசுகள் கொழுத்தப்பட்டு தமது மகிழ்ச்சியை வெளிப் படுத்து கின்றனர். இன்னும் இந்தியாவுக்கு வேறு எந்த நாட்டுக்காயினும் துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெறும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஈழத்து ரசிகர்கள் இந்தியாவுக்கே தமது ஆதரவை வெளிப்படுத்து கின்றனர்.

■செவ்வேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (14)

**எண் 3. குரு ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் குறித்த விவரங்கள் தொடர்ந்து இவ்வாரமும் பிரசுரமாகின்றன.**

**பிறப்பு எண்3 விதி எண் 6**

குரு சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலைகளின் கர்த்தாக்கள். கலைநயம் மிக்கவர்கள். ஜோதிடம் , மருத்துவம், பொறியியல் போன்ற கலைகளில் சிறந்து விளங்குவார்கள். வாழ்க்கையில் படிப்படியாக உழைத்து முன்னுக்கு வருவார்கள்.

நல்ல மனைவி, குழந்தைகள் வாய்க்கும். சிறந்த சமூக சேவகராக இருப்பார்கள். சுதந்திரப்பிரியர்கள். தனது காரியத்தில் அடுத்தவர்களின் தலையீட்டை விரும்ப மாட்டார்கள். அனைவரிடமும் அன்பு காட்டுவார்கள்.

தியாக மனமுடையவர்கள். தன்னலங்கருதாத உழைப்பாளிகள். தெய்வ நம்பிக்கை உடையவர்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1, 10, 19,28,9,18,27,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள்

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கனக புஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், ஓபல், அக்கோமரின், பெரில்,டெரிடாட்.

**பிறப்பு எண் 3 விதி எண் 7**

குரு, கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நாட்டுக்குச் சேவை செய்வதிலேயே முழு நேரமும் ஈடுபட்டிருப்பார்கள். கற்பனை வளம் மிக்கவர்கள். புதுமை விரும்பிகள். கதை, இலக்கியம், சங்கீதம், சினிமா போன்ற துறைகளில் ஈடுபட்டால் பெரும் புகழ் கிடைக்கும். சாதனைகள் பல செய்வார்கள். தனிமையை அதிகம் விரும்புவார்கள். இவர்களில் சிலருக்கு பலதார அமைப்பு, தாரக் குற்றம் நிறைந்த வாழ்க்கையும் அமைந்து விடும். சிறந்த கவிதை எழுதும் திறன் இருக்கும். சிறுவர்கள், குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாக கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

பிரச்சினை வரும் போது அதனைப் பேசித் தீர்மானிக்கும் சமாதான விரும்பிகள். எழுத்தாலும் பேச்சாலும் முன்னேற்றம் அடைவார்கள். இவர்களில் சிலர் தூய்மையான உள்ளம் உடையவர்கள். கடினமாக உழைத்து உயர்ந்த நிலைக்கு வருவார்கள். நல்ல வாழ்க்கை துணை அமையும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

3, 13,21,30,1,10,19,28,5,14,23.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப் பூ நிறம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கனக புஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், ஓபல், வைடூரியம்,முத்து

**பிறப்பு எண் 3 விதி எண் 8**

குரு,சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். ஆரம்ப வாழ்வு கடினமாக இருந்து பிற்கால வாழ்க்கை பல நல்ல வசதிகளுடன் வாழும் பாக்கியம் உடையதாகும். புறம் பேச மாட்டார்கள். தனக்குப் பிடிக்காதவர்களை விட்டு உடனே விலகி விடுவார்கள். பண விஷயத்தில் நாணயம் மிக்கவர்கள். எப்பேர்ப்பட்ட சிக்கல்கள் நிறைந்த பிரச்சனைகளையும் பேசியே தீர்த்து விடுவார்கள். பணவிஷயத்தில் கண்டிப்பு இருக்கும். தான தர்மங்களை மனம்' விரும்பிச் செய்வார்கள். பேச்சு, வசியம் மிக்கதாக இருக்கும்.



எழுத்தினால் புகழடைவார்கள். லாபம் தராத தொழில்களில் ஈடுபடமாட்டார்கள். தோல்விகளைக் கண்டு துவள மாட்டார்கள். புத்திக் கூர்மையானவர்கள். அஞ்சா நெஞ்சமும் மனத்தைரியமும் மிக்கவர்கள்.

எல்லோரிடமும் ஒத்துப் போகக்கூடியவர்கள். எத்துறையிலும் மேன்மையுண்டு. சுய முயற்சியால் பூரணவெற்றி கிடைக்கும். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் அமையும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

3,12,21,30,1,10,19,28,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப் பூ நிறம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கனக புஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், நீலக்கல், இந்திர நீலம்

**பிறப்பு எண் 3 விதி எண் 9**

குரு, செவ்வாய் ஆதிக்கம் பெற்ற இவர்கள் உடல் வலிமையுடையவர்கள். திறமைசாலிகள். பேச்சிலும், எழுத்திலும் அதிகாரத்தோரணை இருக்கும். ஆணுக்குப் பெண்ணாலும் பெண்ணுக்கு ஆணாலும் நன்மைகள் உண்டாகும்.

இளமையிலேயே மிகவும் கடினமாக உழைத்து வெற்றி பெறுவார்கள். சிறப்பான வாழ்க்கை வாழ்வார்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். கலைத் துறைகளில் பிரகாசமுண்டாகும். வசிகரமாகப் பேசிக் காரியம் சாதிப்பார்கள். அரசியலில் பிரகாசிப்பார்கள். தனது மனம் கூறும் யோசனைப்படியே எதையும் செய்வார்கள். முன் எச்சரிக்கையுடன் செயற்படுவார்கள். பொதுவாழ்வில் பிரகாசிப்பார்கள். சேவை மனப்பான்மை உடையவர்கள். அயராத உழைப்பின் மூலம் மிக உயர்ந்த இடத்தைப் பிடிப்பார்கள். தேக பலம் மிக்கவர்கள். பல தகுதிகள் பெற்றிருப்பார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாக கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

3,12,21,30,1,10,19,28,9,18,27,5,14,23.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப் பூ நிறம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கனக புஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், பவளம், ஓபல்,ப்ளட்ஸ்டோன்.

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

குரு ஆதிக்கதினர் தங்கள் பெயரை அதிர்ஷ்டகரமானதாக்க குரு, செவ்வாய், சூரிய ஆதிக்க எழுத்துக்களையும் விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றிச் சேர்த்து பெயரமைக்க வேண்டும்.

முதலாம் எண் பெயர்கள் மிகுந்த அதிர்ஷ்டத்தை நல்கும். 9, 27, 45,72,3,21,30,75 போன்ற எண்களில் பெயரமைக்கவும். நல்ல விரைவான அதிஷ்டம் கிடைக்கும். விதி எண் வலுவாக இருந்தால், விதி எண் மாத வருட எண்களையும் கவனத்தில் கொண்டு பெயரமைக்கவும்.

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

| பிறப்பு எண் | கூட்டு எண் | அதிர்ஷ்டப் பெயர் எண் |
|---|---|---|
| 3 | 1 | 1,3,5,9 |
| 3 | 2 | 1,3,5 |
| 3 | 3 | 3,9,1 |
| 3 | 4 | 1,5 |
| 3 | 5 | 1,5,9 |
| 3 | 6 | 1,9,5 |
| 3 | 7 | 1,5 |
| 3 | 8 | 1,5,9 |
| 3 | 9 | 3,5,9 |

*(தொடரும்)*

## சிற்பத்துறைக்கான கலாபூஷண விருது



கலாசார அலுவல்கள் திணைக்களம் 2011 ஆம் ஆண்டிற்கான சிற்பத்துறைக்கான "கலாபூஷண விருது" கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகராசாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டீ.பி.ஏக்கநாயக்காவால் கடந்த 17 ஆம் திகதி கொழும்பு ஜோன்.த.சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## மக்கள் முகம்



கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வருடந்தோறும் நடத்தும் கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வில் 2011 ஆம் ஆண்டுக்குரிய விருது பெறுவோரில் புத்தூர் வே. இளைய குட்டி இடம்பெற்றுள்ளார். இவர் ஓய்வுபெற்ற ஆசிரியராவார். இவர் சென்ற ஆண்டு ஆளுநர் விருதையும் பெற் றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வெள்ளி விழா எழுத்தாக்கப் போட்டியில் மரபுக் கவிதைக்கு முதற்பரிசையும் பெற்றிருந்தார்.

அவ்வப்போது பல பத்திரிக்கைகளில் இவருடைய கவிதை ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. 'ஆண்பாவம்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டிருந்தார்.

சமூகப் பார்வையில் நாட்டமுள்ள இவர் கவிதை ஆற்றல் [illegible] இலக்கியத்திலும் வெளிப்பட்டிருந்ததால் தமது ஊரான புத்தூர் மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பேரில் கீர்த்தனை வடிவத்தில் இரண்டு பாமாலைகளை ஆக்கியிருந்தார். இந்தப் பாமாலைகள் தென் னிந்திய இசையமைப்பாளர் ராஜ்குமார் பாரதியின் இசையமைப்பில் உருவானவை.

சங்கீத பூஷணம் சி.பத்மலிங்கம் அவர்களின் பிள்ளைகள் வசந்தன், ஜெயகீதா ஆகியோரின் இனிய குரல் வண்ணத்தில் இறுவட்டு வடிவில் வெளிவந்துள்ளன. இலக்கியத் துறைக்கு ஆற்றிய பணிக்காக புத்தூர் வே. இளையகுட்டி அவர்கள் இவ்வாண்டு "கலா பூஷணம்" விருது பெறுகின்றார்.

★ ★ ★



பருத்தித்துறைப் பிரிவிற்கான திடீர் மரணவிசாரனை அதிகாரியாக சதானந்தம் சிவ ராஜா நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற கட்டட மேற்பார்வையாளராக இவர் வடமராட்சி இந்து மகாணசபை உறுப்பினராவ்ார். துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், காயாபரி மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் திடீர் மரணவிசாரனை அதிகாரியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனின் துரோகம்



- திவ்யா -

(கடந்த வாரத் தொடர்ச்சி)

திரும்பி வந்து பார்த்த போது அந்தப் பேழை கீழே விழுந்திருந்தது. அப்பொழுது ஒரு பூனை அறையில் இருந்து வெளியே வந்து கொண்டிருந்தது. பெட்டிக்கு மேல் உள்ள பால் உறிக்காகப் பூனை தாவும் போது பேழை விழுந்திருக்க வேண்டுமெனக் கேசவன் நினைத்தான். உடனே கேழே விழுந்து சிதறிக் கிடந்த முத்துக்களை ஒன்றும் விடாமல் பொறுக்கி எடுத்து எண்ணினான். அதில் 98 முத்துக்களே இருந்ததைப் பார்த்து ஒரு கணம் அதிர்ந்தான் கேசவன்.

''அய்யோ! நீதிபதி 100 முத்துக்கள் கொடுத் தனுப்பினாரே! அவற்றில் 2 குறைகிறதே! எங்கே போயிருக்கும்'' என்று வீடெல்லாம் ஓர் இடமும் தவறாது தேடினான். கடைசி வரையில் 2 முத்துக்கள் கிடைக்கவேயில்லை. கேசவனுக்கோ பயம் வந்து விட்டது. ''இப்போது 98 முத்துக்களை மட்டும் கோர்த்து எடுத்துப் போய்க் கொடுத்தால் 2 முத்துக்களை நான் திருடிவிட்டேனென்று நீதிபதி கடுமையான தண்டனை விதிப்பாரே! இந்தத் தண்டனையில் இருந்து தப்புவது எப்படி?'' என்று நினைத்த கேசவனுக்கு கந்தனிடம் மோசடி செய்த 2 முத்துக்களின் நினைவுக்கு வந்தது.

உடனே அந்த இரண்டு முத்துக்களையும் எடுத்துச் சரத்தில் கோர்த்து 100 முத்துக்கள் கொண்ட மாலை யாக ஆக்கிவிட்டான் கேசவன். மறுநாள் கேசவன் முத்துமாலையைக் கொண்டு போய் மரியாதை ராமனிடம் கொடுத்ததும் முதல் வேலையாக மரி யாதை ராமன் முத்துக்களை எண்ணத் தொடங்கினான்.

கேசவனோ ''நல்லவேளையாக 2 முத்துக்கள் என்னிடமிருந்தது. இல்லையேல் இப்போது தண் டனை கிடைத்திருக்கும்'' என்று நினைத்துக் கொண்டிருந்தான். முத்துக்களை எண்ணி முடித்த மரியாதை ராமன் காவலர்களைப் பார்த்து ''இவனைக் கைது செய்யுங்கள்'' என்றான்.

காவலர்கள் மரியாதை ராமனின் ஆணைப்படி கேசவனைக் கைது செய்தார்கள். கேசவனோ ''நான் என்ன தவறு செய்தேன்? ஏன் என்னைக் கைது செய்கிறீர்கள்?'' என்றான்.

''நான் உன்னிடம் கொடுத்தது 98 முத்துக்கள் தான். அப்படியிருக்க இந்த மாலையில் மேற்கொண்டு 2 முத்துக்கள் எப்படி வந்தன என்ற விவரத்தை நீ சொல்லாவிட்டால் உனக்கு கடுமையான தண்டனை கிடைக்கும் என்றான்'' மரியாதை ராமன். தண்ட னைக்குப் பயந்த கேசவன் கந்தனிடம் மோசடி செய்து 2 முத்துக்களை அபகரித்து வைத்திருந்ததை சொல்லி விட்டான்.

அவன் வாயாலேயே உண்மையை வரவழைத்த மரியாதை ராமன் கந்தனுக்கு அவனது 2 முத்துக் களைக் கொடுத்துவிட்டு, கேசவனுக்கு ஏமாற்றிய குற்றத்துக்காகத் தண்டனையும் கொடுத்தான்.

மரியாதை ராமனின் சமயோசிதமான யோசனை யால் உண்மை வெளிவந்ததை எண்ணி மக்கள் ராமனை மிகவும் பாராட்டினார்கள்.

(முற்றும்)

# விடுகதைகளும் விடைகளும்

1.வால் நீண்ட குருவிக்கு, வாயுண்டு வயிறில்லை. அது என்ன?

2. மரத்திலே இலைவடிவம். அரைத்தாலோ கலைவடிவம். அது என்ன?

3. யானை எண்ணும், சேனை உண்ணும், அடித்தால் வலிக்கும் அது என்ன?

4. வாய் இல்லை; வார்த்தைகள் செல்வான், உயிரில்லை ஊருக்குப் பிரப்பான். கால் இல்லை, வீட்டுக்கு வருவான் அவன் யார்?

5. சிவப்பு நிறச் சிங்காரி தண்ணீர்ப் பட்டால் கறுப்பாயி. அவள் யார்?

6. ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது. அது என்ன?

7. வாழ்க்கை முழுக்க வாயை மூடாதவன். அவன் யார்?

8. இருட்டில் கண் சிமிட்டும்; நட்சத்திரம் அல்ல. அது என்ன?

1. அகப்பை 2. மருதானி 3. கரும்பு 04. கடிதம்
05. நெருப்பு 06. ஊஞ்சல் 07. தபாற்பெட்டி
08. மின்மினிப்பூச்சி

தா.தமிழினி
தரம்-9ஏ, யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

# சீப்பு

உலகின் முதல் சீப்பு ஆபிரிக்க கண்டங்களில் ஒன்றான நியூகினியாவில் உருவாக்கப்பட்டது என்று மானுடவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இங்கு வசிக்கும் மக்களின் முடி சுருள் சுருளாக இருக்கும். ஆங்காங்கே வளையல்களை கட்டி தொங்கவிடும் பழக்கம் கொண்டவர்கள். அக்காலத்தில் தலையில் எண்ணெய் தேய்க்கும் பழக்கமும் இருந்தது. எனவே முடியை ஒழுங்குபடுத்த மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். பிறகு சிறு குச்சியை கொண்டு சுத்தம் செய்தனர்.

பின்னர் மிருகங்களின் எலும்பைக் கொண்டு சீப்பைத் தயாரித்தனர். அதன் பின்னர் மரம், எருமை, மாட்டுகொம்பு முதலியவற்றில் சீப்பு தயாரித்தனர்.

எருமை மாடுகளின் கொம்புகளை போன்ற அமைப்பில்தான் இவர்களின் சீப்பு இருந்தது. இத்தகைய சீப்புக்கள் சுவிற்ஸர்லாந்து அருங்காட்சியகத்தில் இன்றும் உள்ளன. ஆசியாவிலுள்ள மக்கள் தான் முதன் முதலில் மூங்கில் மற்றும் தென்னை மரப் பட்டையிலிருந்து சீப் பைத் தயாரித்தனர். இன்று ஆண்களும், பெண்களும் பயன்படுத்தும் கையடக்க சீப்பு இன்றைய நவீன தயாரிப்பு அல்ல. ரோமப் பேரரசின் அழிந்து போன இடிபாடுகளுக்கு இடையே இருந்து யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள் கிடைத்துள்ளன. இவை அமெரிக்க நாட்டு அருங்காட்சியகத்தில் இன்றும் உள்ளன.



# இத்தாலியின் தலைநகரம் உரோம்

இத்தாலியக் குடியரசு அல்லது இத்தாலி தெற்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. இதன் நிலப்பகுதியானது கால் பாதம் போன்ற தீபகற்பப் பகுதியையும், மத்திய தரைக்கடல் பகுதிகளான சிசிலி மற்றும் சார்டீனா என்ற தீவுப் பகுதி களையும் கொண்டதாகும். இத்தாலியின் வடக்கே அல்ப்ஸ் மலைப் பகுதியில் பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து, ஆஸ்திரேலியா, சில்வேனியா, ஆகிய நாடுகள் எல்லை களாகவும் அமைந்துள்ளன. இத்தாலி, ஐரோப்பியப் பண்பாடுகள் பலவற்றின் உறைவிடமாக விளங்கு கிறது. இதன் தலைநகரம் ரோம். பல நூற்றாண்டு களாக இருந்து வருகிறது. பிரோக் என்றழைக்கப்படும் மேற்குலக கலாசாரம், 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரோமிலேயே ஆரம்பமானது. அத்துடன் கத்தோலிக்கத் திருச்சபையும் இங்கேயே இருக்கிறது. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து 20 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரையில், இத்தாலி காலனித்துவப் பேரரசாக இருந்தது. இன்று இத்தாலி ஒரு மக்களாட்சிக் குடியரசாகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது. மக்களின் வாழ்க்கைத் தர நிலை அளவீட்டில் உலகின் 8 ஆவது நாடாக இத்தாலி விளங்குகிறது. இத்தாலி ஐரோப்பிய ஒன்றியம், நோட்டோ ஆகிய அமைப்புகளின் ஆரம்ப உறுப்பு நாடாகும். ஜி 8 அமைப்பிலும் ஒரு உறுப்பு நாடாக உள்ளது.





வவுனியா அட்வென்டிஸ்ற் சர்வதேச பாடசாலையின் வருடாந்த கலை விழாவில் இடம்பெற்ற ஆரம்பப் பிரிவு மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்ச்சியை படத்தில் காண்கிறோம்.
(421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது




- மணி

(சென்றவாரத் தொடர்ச்சி)

உத்தர காசிக்கு அருகே நகூரி என்ற ஊரில் மலையில் ரேணுகாதேவி ஆலயம் இருப்பதாகக் கூறினார்கள்.

ஜமதக் கினி முனிவர் தவம் செய்ததும், அவருடைய மகன் பரசுராமன் தகப்பனாரின் வேண்டுகோள் பிரகாரம் தாயாரான ரேணுகாதேவியின் தலையைக் கொய்ததும், பின்னர் முனிவரின் ஞான திருஷ்டியால் ரேணுகாதேவி உயிர்பெற்றதுமான நிகழ்வு இந்த இடத்திலேயே நடந்ததாகவும் வழி காட்டி கூறினார்.

அதுமட்டுமல்லாமல் துரியோதனன் பாண்டவர்களைக் கொல்வதற்காக அரக்கு மாளிகை அமைத்ததும், சிவபிரான் அருச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் வழங்கிய இடமும் இந்த உத்தர காசியிலேயே என்றும் கூறினார்.

நாம் உத்தர காசியிலிருந்து மறுநாள் காலை 5.30 மணிக்குப் புறப்பட்டு ஏறக்குறைய 110 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கங்கோத்திரியை நோக்கி பிரயாணத்தை மேற்கொண்டோம். எமது பிரயாணத்தின்போது மண்சரிவு காரணமாக, பாதை சீரின்மையால் சற்றுத் தாமதமாகவே செல்ல வேண்டியிருந்தது.

நாம் செல்லும் பாதையில் பாகீரதி கங்கையைத் தரிசித்த வண்ணம் மலைப்பாம்பு போல வளைந்து வளைந்து சென்ற பாதையூடாக (இங்குள்ள சகல மலைப்பாதைகளும் அவ்வாறே) இயற்கை அன்னையின் எழிலைத் தரிசித்த வண்ணம் பிரயாணத்தை மேற்கொண்டோம். வழியில் பட்வாடி என்ற இடத்தில் சபுலங்கா கங்கை, பாகீரதி கங்கை ஆகியவற்றின் அருகே 8 ஆம் நூற்றாண்டில் சீலவர்மன் என்ற அரசனால் கட்டப்பெற்ற சிவன் கோயில் சிவனை நோக்கி சூரிய பகவான் தவம் செய்த பாஸ்கர ஷேத்திரம், கங்கனானி என்ற இடத்தில் வியாசரின் தந்தை பராசர முனிவர் தவம் செய்த இடம் பாராசர முனிவர் நீராடிய ரிஷி குண்டம் ஆகியவற்றை வாகனத்திலிருந்தவாறே பாகீரதி கங்கையும், தீபெத்தில் இருந்து வரும் ஜானவி நதியும் சங்கமமாகின்ற கங்கோத்ரியை அடைந்தோம்.

கங்கோத்திரி

இது இமாலயத்திலுள்ள நாற்படை யாத்திரைத் தலங்களுள் இரண்டாவதாகத் தரிசிக்க வேண்டிய இடமாகும். இது 3140 மீற்றர் (10465 அடி) உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு குளிர் மிகக் கடுமையாக இருந்தது. பனிப்பொழிவும் மேகமூட்டமும் காணப்பட்டது. இங்குள்ள இயற்கைக் காட்சிகளை ரசித்த வண்ணம் தனது மூதாதையரின் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்காக பகீரதனால் பூலோகத்துக்கு வரவழைக்கப்பட்ட பாகீரதி கங்கையில் நாமும் நீராடுவோம் என்ற விருப்பத்துடன் கங்கையை நோக்கிச் சென்றோம். அங்கு நீர் ஜில் என்று கடுமையாகக் குளிர்ந்தது. ஆற்றில் கால் வைக்க முடியவில்லை, கரையில் படிக்கட்டில் இருந்தவாறே செம்பினால் நீரை அள்ளித் தலையில் மூன்று செம்பு ஊற்றியதுடன் நீராடுவதை நிறுத்திக் கொண்டோம். உடலெல்லாம் ஒரே நடுக்கமும், குளிருமாக இருந்ததுடன் விறைத்தும் விட்டது.

நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களைக் கழுவி எம்மைக் கடையேற்றும் கங்கா அன்னையை காங்கோத்திரியில் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மனம் மகிழ்ந்தோம்.

பின் ஆற்றங்கரைக்கு வந்த பண்டாவின் (புரோகிதர்) உதவியுடன் நானும், நண்பர் ஜோர்ஜ்ஜும் பிதிர் பூஜை, கங்காபூஜை ஆகியவற்றை சங்கல்பம் செய்து நிறைவேற்றினோம். கங்காதேவிக்கு எமது கைகளினாலேயே அர்ச்சனை செய்து, ஆரத்தி காட்டினோம். புனித கங்கைக்கு பூஜை செய்யும் புண்ணியம் கிடைத்ததையிட்டு உளம் மகிழ்ந்தோம்.

கீதையில் கிருஷ்ண பரமாத்மா நதிகளில் நான் கங்கையாக இருக்கிறேன் என்று கூறியுள்ளார். அத்தகைய பெருமை மிக்க கங்கைக்கு பூஜை செய்து, தீபாராதனை காட்ட எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. எமது பூர்வ ஜென்ம புண்ணியம் என்றே கருதினோம்.







கங்கா பூஜை நிறைவேறிய பின் ஆலயத்தை நோக்கிச் சென்றோம். ஆலய முன்றிலில் சிறிய பள்ளத்தாக்கில் பகீரதன் தவம் செய்த கருங்கற் பாறையைத் தரிசித்து வணங்கினோம். சகர மன்னரின் வம்சத்தில் உதித்த பகீரதன், முனிவர் ஒருவரின் சாபம் காரணமாக சாம்பல் மேடாக இருந்த தனது மூதாதையருக்கு பிதிர் கடன்களைச் நிறைவேற்றுவதற்காக இந்தப் பாறையிலிருந்தே கடுந்தவம் செய்து கங்கையை இங்கு கொண்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

(தொடரும்)

# மாற்றம்

-பாஷோவின் கரும்பலகை-

பாஷோவிடம் ஒருவர் வந்தார். ''நான் இரண்டு முறை இரண்டு புதிய வேலைகளில் ஈடுபட்டுப் பார்த்தேன்.. இரண்டிலுமே பெரிய நஷ்டம் வந்து விட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை... எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் அதில் ஏதாவது புதிய மாறுதல் நடந்து விடுகிறது... எனக்கு என்னை மாற்றிக் கொள்ள முடியவில்லை...''

பாஷோ புன்னகைத்தார்.

''உங்கள் சகோதரன் விவசாயி தானே...?''

''ஆமாம்..''

''இப்போது என்ன செய்திருக்கிறார்?...''

''கரும்பு''

'' போன பருவத்தில் என்ன செய்தார்...''

'நெல்...''

'அதற்கு முன்பருவத்தில்...?''

'சோளம்...''

'' நீங்கள் இப்போது என்ன உடை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?''

''பருத்தி கோடைக்கு நல்லது...''

''மழைகாலம் வந்தால்...?''

''பாஷோ என்ன கேள்வி இது... குளிரடித்தால் கம்பளி தானே சரியான உடை...''

பாஷோ புன்னகைத்தார்.

''ஒரே ஒரு நிலம் தான்... பருவத்திற்கு தகுந்த மாதிரி அதில் கரும்பு, நெல், சோளம் என மாற்றம் செய்கிறீர்கள்... ஒரே உடம்பு ... அதற்குத் தேவையான உடைகளும் அவ்வப்போது மாற்றம் செய்து கொண்டிருக்கிறீர்கள்...

இப்படி மாறிக்கொண்டே இருப்பது தானே இயற்கையின் விதி... உங்கள் வேலையில், தொழிலில், அலுவ லகத்தில் மட்டும் மாற்றம் நடக்கிறதா? நடந்து தானே ஆக வேண்டும்... மாற்றம் வந்தால் தானே வளர்ச்சி அதிகரிக்கும்... அதற்கேற்ப சிறுசிறு மாறுதல்களை நீங் களும் செய்து கொள்வது தானே இந்த இயற் கையின் விதிப்படி சரியானது... அப்போது தானே உங்களுக்கும் தொடர்ந்து வளர்ச்சி இருக்கும்... மாற்றமே இல்லாத இடத்தில் பழமை படிந்து விட்டதா...?

அந்த இளைஞர் மலர்ந்தார்.

# பெர்னாட்ஷாவி...

# வாழ்... பொ... மொ...




சிறிது காலத்தில் தந்தையாருடன் இருந்த பெர்னாட் ஷாவும் லண்டன் சென்று அன்னையுடன் ஒன்றிணைந்து கொண்டார். பெர்னாட்ஷா தனது இசைக் கலையை தாயிடமிருந்து கற்றுக் கொள்ள முடிந்தது. இது அவரது பிற்கால வாழ்வுக்கு நன்கு உதவியது.

பெர்னாட்ஷா முதலில் லண்டனில் உள்ள தோட்டத்தில் கணக்காளராக இணைந்து கொண்டார். அதேவேளை லண்டனிலிருந்து வெளி யாகும் தி ஸ்டார் என்ற பத்திரிகையில் சங்கீத விமர்சகராகப் பணியாற்றினார். லண்டனிலிருந்து பிரசுரமாகும் தி சண்டே ரிவ்யூ என்ற வார இதழில் நாடகங்கள் பற்றியும் விமர்சனங்கள் எழுதி வந்தார்.

பெர்னாட்ஷா பின்னர் தானே நாடகங்களை எழுத ஆரம்பித்தார். அத்துடன் தனது இருபத்தைந்தாவது வயதில் சைவ உணவை உட்கொள்ளத் தொடங்கி விட்டார்.

புலால் உண்ணுவதை நிறுத்துவதற்கு பிரதான காரணியாக விளங்கியது ஆங்கிலக் கவி ஷெல்லியின் படைப்புக்களே எனலாம்.

மிருகங்களும் மனிதனைப் போன்றவையே அவற்றை மனிதன் உணவுக்காகக் கொல்வது கூடாது எனக் கருதினார்.

1893 இல் மனைவி இழந்தோர் [illegible] லண்டனில் [illegible] லண்டன் மாநகரிலுள்ள சேரிகளில் காணப்படுகின்ற கொடுமைகளையும் பணக்காரர்கள் ஏழைகளின் குருதியை உறிஞ்சும் கொடூரத் தன்மையையும் விளக் கியிருந்தார். ஜோன் புல்லின் மற்றொரு தீவு என்ற அயர்லாந்து அரசியல் பற்றிய நகைச்சுவை நாடகம் பிரசித்தி பெற்றது. 1905இல் மனிதனும் மேம்பட்ட மனிதனும் என்ற நாடகம் லண்டன் கோர்ட் தியேட்டரில் நடைபெற்றது.

சட்டத்தின் மூலம் திருத்த முடியாத மன நிலையை நாடகத்தின் மூலம் திருத்த முடியும் என்று உணர்ந்த பெர்னாட்ஷா பல உன்னத நாடகங்களை எழுதினார்.

1905 ஆம் ஆண்டு முதல் பெர்னாட்ஷா உலகப்புகழ் பெற்ற நாடக ஆசிரியராக விளங்கினார். பெர்னாட்ஷா எழுதிய செயின்ட் ஜோன் நாடகம் அவரின் புகழை உச்ச நிலைக்கு ஏந்திச் சென்றது. ஆனால் மெதூசலவுக்கு மீண்டும் என்ற நாடகமே மிகச் சிறந்ததாக எல்லோராலும் போற்றப்பட்டது. அப்பிள் வண்டி என்ற தலை சிறந்த நாடகமும் பெர்னாட்ஷாவினால் அரங்கேற்றப் பட்டது.

இறுதியாக பெர்னாட்ஷாவின் நகைச்சுவை மற்றும் பொன்மொழிகள் சில வற்றை நோக்குவோம். பெர்னாட்ஷாவிற்கு பூக்கள் மீது அலாதி பிரியம் என்று கேள்விப்பட்ட ஒருவர் அவர் பாதைக்குச் சென்றார். ஆனால் அங்கு மலர்களையே காணோம். அலங்காரத்துக்கு வைக்கப்படுகின்ற பூச்சாடிகள் கூட தென்பட வில்லை. வியப்படைந்த அவர் ஷாவை

அணுகி உங்க...
பிரியம் என்றல்...
என்றார். அதற்கு...
யென்று யார் ...
கள் மீதுதான் பி...
ளின் தலைகளை...
அலங்கார பூ...
வேண்டுமென்...
பெர்னாட்ஷாவை...
என்று எண்ணிய...
னிகள் சிலர் ...
மொன்றில் பேசு...

பெர்னாட்ஷா...
தான் பேசினார்...
மென்றே ஒருவ...
அத்துடன் த...
அவரைப்பற்றி...
பெர்னாட்ஷா ...
என்று ஷேக்ஸ்...
கருதினார்கள்.

பெர்னாட்ஷ...
புரிந்து விட்டது...
எழுந்து நின்று ...
ஷேக்ஸ் பியர் ...
போது பேசிய ந...
யாக இல்லை...
கின்றது. ஷேக்ஸ்...
தான் அது உங்...
நான் பொறு...
பெர்னாட்ஷா க...
அபிமானிகள் மு...

பேரழகி ஒ...
...ணம் செ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதுமை

-கண்ணதாசனின் -
கடைசிப்பக்கம்

அதோ, அந்த ஆலமரத்து நிழலில், அந் தக் கிழவன் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். கடந்து போன காலக் கணக்குகளை ஐந்தொகை போடும் வயது. கால நெடுஞ்சாலையிலே கடைசி மைல் கல்லிலே அவன் நிற்கின்றான். பருவகாலம் படுத்திய பாட்டை இப்போது அவன் எண்ணிப் பார்க்கிறான்.

அந்நாளில் அழகழகாக அலங்கரிக்கப்பட்ட ரோமங்கள் சிக்குப் பிடித்து விட்டன. பளபளவென்றிருந்த கன்னங்களிலே காலதேவன் முத்திரைக் கோடுகளைப் போட்டு விட்டான். வண்டியில் ஏற்றுவதற்காகச் சரக்கு ஸ்டேஷனுக்கு வந்துவிட்டது. மௌன தேவதையின் பரிபூரண ஆட்சியில் அவன் அமைதியுற்றிருந்தான். அவனது பிரார்த்தனை எல்லாம் இதுதான்.

''இறைவா!''

''சொர்க்கம், நரகம் என்று இரண்டிருப்பது உண்மையானால், என்னை நரகத்துக்குக் கொண்டு போ!''

''இங்கே நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அதுதான் நியாயம்.''

''ஆசை, காதல், அன்பு, பாசம் என்ற சொற்சிலம்பங்களில் எதிலே நான் அதிகம் ஆடினேன் என்பது உனக்குத் தெரிந்ததே!''

''ரத்தம் சூடாக இருந்தபோது, சித்தம் கல்லாக இருந்தது.''

நரம்புகள் முறுக்கேறி இருந்த போது, விரும்பியவை, கோடானு கோடி''

''இப்படியொரு முதுமை எனக்கும் உண்டு என்று நான் எண்ணிப் பார்த்ததில்லை''

''ஆன்மா தனது பலவிதப் பயணங்களில் எந்த ஸ்டேஷனில் அதிகம் நின்றதோ, எனக்குத் தெரியாது''

''ஏதோ சில பாவங்களை நானும் செய்திருக்கிறேன்''

''கொதிக்கின்ற வெந்நீர், மூடியைத் தள்ளுவது போல், துடிக்கின்ற ரத்தம், அச்சத்தை விலக்கியிருக்கிறது.

''செத்துப் போன ஜூலியஸ் சீஸரின் உடைவாளும் செயலற்றுப் போனது போல், முடிந்து விட்ட பருவமும் செயலற்றுப் போனதே!''

''ஆரோக்கியத்தை இனி நான் எதிர்பார்க்க முடியாது. உனது அருள்வேண்டியே இந்தத் தவம்.''

''விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முதுமைக் காலம் தவக் கோலமே இறைவா!''

''மறுபடியும் நான் பிறப்பதானால் என்னை ஓர் ஆலமரமாகப் பிறப்பித்து விடு. காரணம் சிலருக்காவது நிழல் தந்த வரலாறு அதற்கு இருக்கிறது''. கிழவனின் வேதாந்த ராகம் இங்கே முடிகிறது.

லோகாயத வாதம் அப்போது சாரமற்றுப் போகிறது. தெய்வ தத்துவமே கண்முன்னால் தோன்றுகிறது.

பரம நாத்திகனும், படுக்கையில் படுத்த பின் இறைவனை நினைக்கிறான். அவனது பிரார்த்தனை பலிக்கிறதோ இல்லையோ, ஆத்மா சாந்தியடைந்து விடுகிறது. அதோ அந்த மரத்தடியில் கிழவன் தூங்கிக் கொண்டிருக்கிறான். நீங்கள் ஏன் அவனை எழுப்ப முயற்சி செய்கிறீர்கள்?

அவன் நிரந்தரமாகத் தூங்கி வெகு நேரமாகி விட்டது.

★★★



# மாற்றம் காண மரம் நடுவோம்



மரம் நடுவோம் மரம் நடுவோம்
மாற்றம் காண மரம் நடுவோம்
அல்லலுறும் சூழல் - நாளை
அமைதி பெற மரம் நடுவோம்

தரையில் நாங்கள் மரம் நடுவோம்
நல்ல இனம் பல நடுவோம்
கண்ணைரிப்பட்டும் காத்திடுவோம்
மண்வளமும் பேணிடுவோம்.

மழை வேண்டும் மரம் நடுவோம்
மண் மகிழ மரம் நடுவோம்
இறைவன் தந்த ஜீவனெல்லாம்
இனிதே மகிழ மரம் நடுவோம்.

தேவைக்கென்று வெட்டும்போது - நாளை
தேவையென்று மரம் நடுவோம்
வெம்மை அகன்று தண்மை பெற
வெட்ட வெட்ட நாட்டிடுவோம்.

வீட்டுக்கொரு மரம் நடுவோம்
நாட்டைக் காக்க மரம் நடுவோம்
வீறு கொள்ளும் வெப்பமழை
விரட்டிடவே மரம் நடுவோம்.

க.பத்மகாந்தன்
வரணியூரான்



...வின்
...ாழ்வும்
பொன்
...மாழியும்

அணுகி உங்களுக்கு மலர்கள் மீது மிகுந்த பிரியம் என்றல்லவா கேள்விப்பட்டேன் ! என்றார். அதற்கு பெர்னாட்ஷா ஆமாம் இல்லையென்று யார் கூறியது எனக்கு குழந்தைகள் மீதுதான் பிரியம் அதற்காக அவர்களின் தலைகளைக் கொய்து என் வீட்டு அலங்கார பூச்சாடிகளை அழகு படுத்த வேண்டுமென்பதில்லையே! என்றார். பெர்னாட்ஷாவை மட்டந்தட்ட வேண்டும் என்று எண்ணிய ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் சிலர் பெர்னாட்ஷாவை கூட்டமொன்றில் பேசுவதற்கென்று அழைத்தனர்.

பெர்னாட்ஷா நல்ல நகைச்சுவையுடன் தான் பேசினார். ஆனாலும் வேண்டுமென்றே ஒருவரும் கைதட்ட வில்லை. அத்துடன் தலைமை தாங்கிய ஒரும அவரைப்பற்றிக் கிண்டலாகப் பேசினார். பெர்னாட்ஷா விற்கு நல்ல மூக்குடைப்பு என்று ஷேக்ஸ் பியரின் அபி மானிகள் கருதினார்கள்.

பெர்னாட்ஷாவிற்கு நிலைமை நன்கு புரிந்து விட்டது. அவர் உடனடியாகவே எழுந்து நின்று பேச ஆரம்பித்துவிட்டார். ஷேக்ஸ் பியர் அபிமானிகளே ! நான் இப்போது பேசிய நகைச்சுவைப் பேச்சு சுவையாக இல்லையென்று குறை கூறப்படுகின்றது. ஷேக்ஸ்பியரின் சொந்த நகைச்சுவை தான் அது உங்களுக்கு சிரிப்பு வராததற்கு நான் பொறுப்பாளி அல்ல என்று பெர்னாட்ஷா கூறியதும் ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் முகங்களில் ஈயாடவில்லை.

பேரழகி ஒருத்தி பெர்னாட்ஷாவை ...ணம் செய்ய விரும்பினாள்.

(தொடரும்)

ந.சுந்தரம்பிள்ளை



# நாடகம் எழுதுவது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி)

### எழுச்சி

நாடக அமைப்பின் இரண்டாவது கட்டம் எழுச்சியாகும். தோற்றுவாயில் இருந்து நாடகத்தின் உச்சக் கட்டம் வரையிலான பகுதியே இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. இதுவே நாடகத்தின் வளர்ச்சிப் பகுதியுமாகும். சுவையான பகுதியும் இதுவே. இங்கு சிக்கல்கள் இறுகி நாடகம் விரைவாக வளர்ந்து செல்கிறது.

மேலே கூறப்பட்ட முரண்கள் அதற்கு உதவுகின்றன. பாத்திரங்கள் தங்கள் லட்சியங் களை அடையப் போராடுவதே எழுச்சியாகும். இந்தக் கட்டத்தில் பார்வையாளரும் அப்பாத்திரங்களுடன் ஒன்றி நின்று அவற்றுக்கு அனுதாபப்பட்டு அவற்றுடன் சேர்ந்து போராடுவர். நாடகத்தின் கதைக்கும், பாத்திரங்களுக்கும் பொருத்தமான நிகழ்வுகளை அமைத்து, நாடகாசிரியர் சிறிது கூடத் தொய்வு விழாதபடி கதையை நகர்த்திச் செல்ல வேண்டும். முறுக்கு சற்றுத் தளர்ந்தாலும் பார்வையாளர்களது கவனம் குறையும் அது நாடக ரசனையையும் பாதிக்கும்.

### உச்சக்கட்டம்

நாடகத்தின் மிகவும் உயர்ச்சிச் செறிவான பகுதியே உச்சக் கட்டமாகும். நாடகக் கதைப் பின்னலின் உச்சக்கட்டமும் இதுவேயாகும். இது நாடகக் கதைப் போக்கின் ஒரு திருப்புமுனையாகவும் அமைகிறது. நாடகத்தின் எஞ்சியுள்ள பகுதி என்ன திசையில் செல்லப் போகிறது, என்பதையும் இந்த உச்சக் கட்டமே தீர்மானிக்கிறது.

அந்தச் சிகர நுனியிலிருந்து திரும்பி வருதல், பின் வாங்குதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அது துன்பியல் நாடகமாக இருந்தால் அதன் பின்பு ஒரே சரிவு தான். துன்பியல் அல்லாத நாடகமாயின் ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்து நாடகத்தின் முடிவு மாற்றப்படும். உச்சக்கட்டம கதை ஓட்டத்துக்குப் பொருத்தமாக அமைய வேண்டும். அதில் ஒரு நம்பகத்தன்மை இருக்க வேண்டும் என்பதையும் மறந்து விடலாகாது.

### வீழ்ச்சி

இதைப் பூட்ட விழ்ப்பு என்றும் சொல்லலாம். மெல்ல மெல்ல வளர்ந்து சிக்கலடைந்து உச்ச நிலை எய்திய கதை, முறுக்குத் தளர்ந்து சிக்கல் அவிழ்ந்து முடிவை எய்துவதையே இந்தக் கட்டம் குறிக்கிறது. நாடகக் கதை வளர்ச்சியோடு ஏறி, உச்சநிலைக்குப் போன பார்வையாளர்களது உணர்ச்சியும் மீண்டும் இறங்கிச் சமநிலைக்கு வருகின்றது.

பெரிய நாடகங்களில் உச்சக்கட்டம் அநேகமாக நாடகத்தின் நடுப் பகுதியில் வருவதால், இந்த வீழ்ச்சி அதன் அரைப் பங்கினைக் கொண்டிருக்கும். இந்தப் பகுதியில் கதையை வேண்டுமென்றே நீட்டுகின்ற ஆசையை நாடகாசிரியர்கள் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் கதை சுவிங்கம் போல இழுபடும்.

ஓரங்க நாடகங்களில் உச்சக் கட்டம் நாடகத்தின் முடிவுக்கு மிக அண்மையில் வருவதால் அவற்றின் இறக்கம் மிகக் குறுகியதாகவே இருக்கும்.

### சமநிலை

நாடகத்தின் முடிவு இன்பமானதாயினும் சரி, துன்பமானதாயினும் சரி, நாடகம் முடியும் பொழுது பாத்திரங்களும் பார்வையாளர்களும் முறுக்குத் தளர்ந்து சமநிலைக்கு வந்து விடுகின்றனர்.

ஆனால் நாடகம் தொடங்கும் பொழுது இருந்த நிலையில் கதாபாத்திரங்களோ, பார்வையாளர்களோ இல்லை. பாத்திரங்கள் ஒரு முழு அனுபவத்தைப் பெற்று மாறிவிட்டிருக்கின்றன. பார்வையாளர்களும் அந்தப் பாத்திரங்களுடன் ஒன்றி நின்று நாடகத்தை அனுபவித்திருந்தால், நிச்சயமாகக் கொஞ்சமாவது அறிவு தெளிந்திருப்பார்கள்.

அது ஒரு பொழுது போக்கு நாடகமாயிருந்தால் ஒரு நல்ல நாடகத்தைப் பார்த்தோம் என்ற திருப்தியைப் பெற்றிருப்பார்கள்.

### நாடகத்தின் அமைப்பு-முக்கோணம்

தோற்றுவாய் எழுச்சி, உச்சக் கட்டம், வீழ்ச்சி சமநிலை ஆகியவையே நாடகத்தின் முக்கிய கட்டங்களென வகுத்து வைத்துள்ளனர். மேநாட்டு நாடகத்துறை அறிஞர்கள். அந்தப் புள்ளிகளை வைத்து ஒரு வரை படம் கீறினால் ஒரு முக்கோண வடிவம் வரும் என்கின்றனர். ஒரு எகிப்திய பிரமிட்டின் புற உருவப்படம் போல.

ஆனால் எல்லா நாடகங்களும் இத்தகைய அமைப்பைக் கொண்டிரா. உச்சக்கட்டம் சரி நடுவில் அமைந்த நாடகங்கள் மட்டுமே இத்தகைய வடிவமைப்பைக் கொண்டிருக்கும். மற்றவற்றில் சாயலான பிரமிட்டுக்களே வரும்.

ஓரங்க நாடகங்களில் உச்சக் கட்டம் நாடகத் தின் இறுதியில்தான் வரும் என்று மேலே பார்த்தோம். ஐரோப்பிய மொழிகளில் இந்தக் காலத்தில் எழுதப்படும் சில நாடகங்களில் ஒரு பிரமிட்டையும் காண முடிவதில்லை என்கின்றன நாடக விமர்சனங்கள்.

நாடகத்தில் இன்னும் சில விடயங்கள் கவனிக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
மனதில் நினைத்த ஒன்று, எளிதில் நடந்து விடுவது கண்டு பெருமை அடைவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தொழில் ரீதியாக சிலர் உங்களை விமர்சித்தாலும், ஏற்றுக் கொள்வீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். பெண்கள் வழியில் அன்புத் தொல்லையுண்டு.



**இடபம்:**
பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும். பிள்ளைகள் பொறுப்போடு நடப்பது கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்ப சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். சிலர் உங்களைப் பாராட்டிப் பேசி காரியம் சாதிப்பர். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள்.



**மிதுனம்:**
உங்களிடம் இருக்கும் பணத்தை, மற்றொருவரிடம் கொடுத்து விட்டு பிறரிடம் கடன் வாங்கலாம். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள். வயிறு தொடர்பான உபாதைகளைச் சந்திக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். எதைப் பற்றியும் மனக்கோட்டை கட்ட வேண்டாம்.



**கடகம்:**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். இறைவழிபாட்டின் மூலம் மன நிம்மதி பெற முற்படுவீர்கள். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் குறைந்த அளவில் பலன் கிடைக்கலாம். அவமரியாதை, கௌரவ பாதிப்பு நேரும்.



**சிங்கம்:**
பிறரின் விமர்சனங்களைப் பற்றி கவலைப்படாமல், நினைத்ததைச் செய்ய முற்படுவீர்கள். உறவினர்கள் சிலருக்காக மற்றவர்களிடம் பரிந்து பேசலாம். காலை நேரத் தில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். சிலரிடம் நன்றி விசுவாசத்துடன் நடந்து கொள்வீர்கள். உங்களின் குடும்ப பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசி மகிழ்வீர்கள்.



**கன்னி:**
பல நாள்களாக மேற்கொண்ட முயற்சி ஒன்றுக்கு பலன் கிடைக்கும். நண்பர்கள் உங்களின் உதவி மூலம் சில காரியங்களை முடிப்பர். அரசியல்வாதிகள் நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சிலர் உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருளை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.



**துலாம்:**
எதையும் தாங்கும் இதயமாகச் செயற்படுவீர்கள். எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். பெண்கள் வீட்டுச் செலவுகளில் சிக்கனம் காட்டுவது நல்லது. இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். தடுமாற்றங்களைச் சந்திக்கலாம்.



**விருச்சிகம்:**
சிலரின், ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை வாங்க நினைத்து, அவற்றில் சில கிடைத்து வேறு சில கிடைக்காமல் போகலாம். உறவினர் ஒருவரால் நீங்கள் நினைத்த காரியம் ஒன்றை செய்ய முடியாமல் போகலாம்.



**தனுசு:**
பெண்கள் வகையில் எதிர்பாராத உதவி கிடைக்கும். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். செய்த வேலை ஒன்றுக்கு எதிர்பார்த்ததை விட அதிகமாக பலன் கிடைக்கலாம். நிழல் போல் தொடர்ந்த பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு காண்பீர்கள். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள். ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.



**மகரம்:**
வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். குடும்ப உறுப்பினர்கள் கேட்ட உணவுப்பண்டங்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சேமிப்பு கரையும் வகையில் சில செலவுகளைச் செய்யலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறுவர். வீண் பேச்சைத் தவிர்க்கவும்.



**கும்பம்:**
பரிசு, பாராட்டுக்களைப் பெறும் நாள். பொருளாதார நிலைமையில் மேம்பாடு காண்பீர்கள். ஒருவரவை எதிர்பார்க்கையில் மற்றொரு வரவும் சேர்ந்து வரலாம். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். வண்டி வாகனங்களில் செல்லும்போது, லேசாக கை, கால்களில் அடிபடலாம். எதிர்பாராத சில நல்ல விடயங்கள் நடக்கலாம்.



**மீனம்:**
நீங்கள் நண்பராக நினைத்த ஒருவரே, உங்களுக்கு விரோதமாகச் செயற்படுவது கண்டு எரிச்சல் அடைவீர்கள். சரியான நேரத்துக்கு சில வேலைகளைச் செய்ய முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிக்கலாம். சக ஊழியர்கள் சிலர் உங்களிடம் கடனாகப் பணம் பெறலாம். புதியவர்கள் சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். உடல் உபாதைகள் உண்டு.

# புத்தகசாலை

## தடகள விளையாட்டு




இந்த நூலைப் படிக்கின்ற போது சிறு வயது மண் விளையாட்டு, பாடசாலை நாள்கள்- குறும்புகள் என்பன நினைவுக்கு வரும் அளவுக்கு கதையின் ஓட்டம் எம்மை இளமைக் காலத்துக்கு இழுத்துச் செல்கிறது. இளமைக் காலங்களில் சிறுசுகள் செய்யும் குறும்பு விளையாட்டுகள் மணல் தரையில் கோடு போடுகிறன. மேலும் 1958 நாட்டுக் குழப்பம், குருணாகல்- திருமணங்கள்- சிறைச்சாலை வாழ்க்கைகள்- அன்னையின் அறுசுவை உண்டி-கடமைச்சமையல்- மாமியாரின் நாடகம்- பிள்ளைப்பாசம்- கடமையுணர்வு என்றபடி கதை நகர்ந்து செல்கிறது.

ஈற்றில் வெற்றி காண்கிறாள் சுகுமாரி. அது தான் வாழ்க்கை. வாழ்க்கைப் போட்டியில் வெற்றி அவளுக்கு. வாழ்க்கையில் குறுக்கிடும் தடங்களைக் கண்டு பயந்து ஓடாமல் தற்கொலை செய்து கொள்ளாமல் ''கோட்'' வாசற்படி ஏறாமல் சுகுமாரி போல், ஏறுநடை போட்டு வெற்றி கொள்ளுங்கள். இந்தக் கதைப் புத்தகத்தைப் படிக்கும் போது 'தடகள விளையாட்டு' எமது வாழ்வில் வழி காட்டும்.

-செல்வா-

## கல்வி முகாமைத்துவம்




சுதந்திர இலங்கையில் கல்வி நிர்வாக மாற்றங்கள் எனும் தலைப்பில் 1948 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் அதாவது இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கையின் கல்வி வரலாற்றில் கல்வி நிர்வாகத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை, மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்த நூல் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த நூலின் மூலமாக, கல்விச் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர், மாணவர்கள் துறை சார்ந்தோர் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளவும் தூண்டு கோலாக இருக்கும். அகில இலங்கை ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைகளில் பொது அறிவு வினாத்தாள்களில் கூடிய புள்ளிகளை பரீட்சார்த்திகள் அடைந்து அரச உத்தியோகங்களைப் பெறுவதற்கும் ஊன்று கோலாகின்றது. பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வியல் மாணி முதுகல்வியல்மாணி ஆகிய மாணவ ஆசிரியர்களுக்கும், அனைத்து ஆசிரியர்களுக்கும் இந்தநூல் உதவும் என்பது இதன் சிறப்பம்சமாகும். இந் நூலினை ஆசிரிய திலகம் விஸ்வ மகாதேவன் எழுதி, யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பண்ணாகம் அண்ணா கலைமன்றம் வெளியீடு செய்துள்ளது. கல்வி என்பது மனிதனின் வாழ்வில் இன்றியமையாத தேவையாகும். கல்வி மூலம் தான் மனிதன் வளர்ந்து சமூகத்தில் அந்தஸ்தில் உயர் நிலை அடைந்து தனது வாழ்வில் முன்னேற முடியும். கல்வியில் முன்னேறிய நூலாசிரியர் விஸ்வ மகாதேவன் முதுநிலை கல்விமாணி, கல்வியல் டிப்ளோமா, ஆங்கில ஆசிரியர்களுக்கான டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றவர். இவர் எழுதியுள்ள இந்தப் புத்தகம் கண்டிப்பாக வளர்ந்து வரும் மாணவர்களின் அறிவுத் தேடலைப் பூர்த்தி செய்யும் என்பது உண்மை.

இரு மொழிகளில் இந்தநூல் வெளிவந்தமை மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்ச்சியடையச் செய்வதில் பெரும்பங்காற்றும், என்பதில் ஐயமில்லை. கல்வி முகாமைத்துவம் என்பதை எல்லோரும் இலகுவாக அறிய ஆங்கிலத்தையும் அதன் கருத்தைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பது காலத்தின் முக்கிய தேவையாகும். ஒருவர் தனது தாய் மொழியிலும், ஆங்கில மொழியிலும் முழுமைத் தேர்ச்சி பெறுவாரேயானால் அவர்கள் தான் பேரறிஞர்களாக விளங்குவார்கள். இந்த நூல் அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கும்.

## 'திருநீர்வை' ஒரு காலப்பதிகை




அண்மையில் புதிதாக நிறுவப்பட்ட நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் ஒரு மலரை வெளியிட்டுள்ளது. அதிலிருந்து மனதை ஈர்த்த திருநீர்வை என்ற அழகான பெயருடன் 318 பக்கங்களாக அது இதழ் விரித்துள்ளது. மலரின் பதிப்பாசிரியர் நீர்வைக்கிழார் ச.லலீசன் இந்த மலரைக் ''காகிதப் பூக்களால் ஒரு படையல்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் எம் சமூகம் போதிய அக்கறை காட்டாததன் விளைவாகச் சமூக ரீதியாகப் பல பின்னடைவுகளைச் சந்தித்து விட்டோம். இனிவரும் சந்ததியினர் மத்தியில் இத்தகைய குறைகளுக்கு இடமிருக்கக் கூடாது என்ற நோக்கில் நீர்வேலி பற்றிய சமகாலப் பதிவாக இம்மலர் வெளிவருகின்றது'' என்கிறார்.

வரலாற்றை வாழும் காலத்திலேயே பதியும் முயற்சி மீண்டும் தொடங்கும் மிடுக்காகச் செயற்பட வேண்டும். முன்னைய காலங்களில் ஊர் ஒன்று பற்றி, தலபுராணங்களிலும் ஊஞ்சற் பாடல்களிலும் இலக்கிய ஆக்கங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்போது ஊர் பற்றிய ஒரு பதிகையாக மலர் வெளியிடும் புதிய மரபொன்று தோற்றம் பெற்றுள்ளது.

'மலர்' என்பது பலரின் கருத்தையும் செய்திகளையும், குறிப்புக்களையும், தகவல்களையும் உள்ளடக்கும் ஆற்றல் கொண்டது. திருநீர்வை-நீர்வேலி ஊர் மக்களின் பதிவாக உருப் பெற்றிருப்பது தனிச்சிறப்பாகும். புலம்பெயர்ந்துள்ள நீர்வேலி மக்களின் உள்ளப்பதிவுகளையும் உள்ளடக்கியிருப்பது மலரின் சிறப்பு. தமிழ் எழுத்தாலும் ஊரவர் இணைந்து வாழலாம் என்ற வாழ்வியல் நடைமுறையை இம்மலர் தொட்டு வைத்திருக்கிறது.

வாழ்த்தியல், பொதுவியல், பதிவியல், பின்னிணைப்பு என நான்கு பகுதிகளை மலர் உள்ளடக்கியுள்ளது. வாழ்த்தியலில் 13 எழுத்துருக்களும் தலைவரது செய்தியும், பதிப்புரையும் அவற்றின் விரிவாக ஆசியுரைகள் 06 ம் வாழ்த்துரைகள், 07ம் உள்ளன. நீர்வேலியுடன் வழிபாட்டு நிலையிலும் நிர்வாக நிலையிலும், தொடர்புடையோர் நீர்வேலியின் சமகால வரலாற்றில் தம்முடைய தொடர்பையும் உறவையும் பதித்துள்ளனர்.

பொதுவியலில் நீர்வேலியைச் சேர்ந்தோரது பயனுள்ள 11 ஆக்கங்கள் உள்ளன. நீர்வை பொன்னையனின் சிறுகதை இதழ்களின் முதலில் மலர்ந்துள்ளது. பதிவியலில் நீர்வேலி பற்றிய ஆக்கங்களும் ஊரின் தோற்றம், கல்வி நிலை, தொழில் நிலை, சமய நிலை, செழுமை, பெருமை, நீர்வளம், கூட்டுறவு, கலைப்பயிற்சி, பொருள்வளம், தொழில்நுட்ப நிலை எனப் பல்வேறு விடயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஊர் பற்றி அறிய விரும்புவோருக்கு இவை பயன்தரும் பதிவுகளாகும்.

பின்னிணைப்பாக, பண்பாட்டு விழாச் செய்திகளும், மலரின் தொடக்கப் பார்வைக்காக அமைந்துள்ள தமிழ்த் தெய்வ வணக்கமும் சிறப்பூட்டுகின்றன.

மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்களின் படங்களும் நீர்வேலியின் இயற்கை அழகுப் படங்களும் மலரைப் பொலிவூட்டுகின்றன. அட்டைப் படம் ஓவியர் ரமணியின் கைவண்ணத்தில் கிராமத்தை மனக்கண்முன் நிறுத்துகிறது. இடைவெளிகளில் வரைந்த குறிப்புகள் நீர்வேலியின் கண்டாயங்களை அடைத்து நிற்பது பதிப்பாசிரியரின் தேடலை விளக்குகிறது.

நீர்வேலியில் மலர்ந்த இதன் மணம் எல்லா ஊர்களிலும் விரைவில் பரவும். தம் ஊர்ச் சிறப்பையும் இதுபோலப் பதிகை செய்ய ஏனையோரையும் தூண்டும். இந்த மலர் ஆண்டு தோறும் மலர வேண்டும். நொந்து போய் வலி சுமந்து வாழ்வோருக்கு வலுவைச் சேர்க்கும் மலராக அமைய வேண்டும். காலப் பூங்காவில் இது வெறும் காகிதப் பூவல்ல. ஒரு காலப் பதிகை.

-மகேஷ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவகைக் குணங்கள்



செல்வந்தர் ஒருவர் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அப் போது வழிப்பறிக் கொள்ளை யர்கள் மூன்று பேர் அவரைப் பார்த்து விட்டார்கள். அவர்கள் அந் தச் செல்வந்தரைச் சும்மா விடுவார்களா? ஓடிவந்து அவ ரைச் சுற்றி வளைத்து ''என்ன வைத்திருக்கிறாய்? மரியா தையாக எடுத்துக்கொடு'' என்று மிரட்டினார்கள்.

இவருக்குத் தனது உயிரே பெரிதாகத் தெரிந்தது. அதனால் தன்னிடம் இருந்ததை யெல்லாம் எடுத்துக் கொடுத்தார். திருடர்களும் எல்லாவற் றையும் எடுத்துக் கொண்டு ஓடிப்போய்விடலாம் என்று புறப்பட்ட சமயம் அந்த மூன்று திருடர்களில் ஒருத்தன் யோசிக்க ஆரம்பித்தான்.

''இவனை உயிரோடு விட்டு வைப்பதால் எமக்கு என்ன லாபம்?'' என்று சொல்லிக்கொண்டே கத்தியைக் கையில் எடுத்து அந்த ஆளைக் குத்திக் கொல்லப் போனான். இன்னொரு திருடன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

''வேண்டாம் இவனைக் கொல்வதனால் மட்டும் எமக்கு என்ன லாபம்? இவனுடைய கை, கால்களை வேண்டு மென்றால் கட்டி இங்கேயே போட்டுவிட்டுப் போய்விடுவோம்'' என்றான்.

அதுவும் சரியெனத் தோன்றியது கத்தியால் குத்திக் கொல்ல நினைத்த திருடனுக்கு.

மூன்று பேரும் சேர்ந்து அந்த ஆளின் கைகளையும் கால்களையும் ஒரு கயிற்றால் கட்டினார்கள். அதன்பின் வீதியின் ஓரமாக அந்த ஆளைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

சிறிது நேரத்துக்குப் பின் மூன்றாவது திருடன் மறுபடியும் அதே இடத்துக்குத் திரும்பி வந்து வீதி ஓரமாகக் கிடந்த அந்த ஆளைப் பார்த்து இரக்கப்பட்டான்.''ஐயோ பாவம்!உனக்கு வலிக்கிறதா?''என்று கேட்டான். கொஞ்சம் இரு இந்தக் கட்டுகளை எல்லாம் அவிழ்த்து விடுகிறேன். அதன்பின் என்னுடன் வா உனக்கு வழி காட்டுகிறேன் என்று கூறி அழைத்துக் கொண்டு போய் ''அதோ பார் உன்னுடைய வீடு. போய்ச் சேர் என்று சொல்லிவிட்டு கையைக் காட்டினான்.

அதற்கு அந்த ஆள் ''ஐயா!நீங்கள் எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிறீர்கள். நீங்களும் என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போங்கள் எல்லோரும் சந்தோஷப் படுவார்கள்.'' என்று கூறி அழைத்தார்.

அதற்குத் திருடன் ''நீங்கள் சொல்வது போன்று நான் வரமாட்டேன். வரக்கூடிய தகுதியும் எனக்கு இல்லை. வந்தால் காவலர்கள் என்னைப் பிடித்து விடுவார்கள்'' என்று கூறிவிட்டு பழைய படியும் காட்டுக்குப் போய்விட்டான். ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்ன கதை இது.எதற்காக இந்தக் கதையைக் கூறினார்?

இந்த உலக வாழ்க்கையும் ஒரு காடுபோன்றது.அந்தக் காட்டில் மூன்று திருடர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா? சாத்துவகுணம்,இராஜோகுணம், தாமோ குணம். இவைகள் தான் அந்தத் திருடர்கள்.

ஜீவாத்மாவாகிய மனிதன் காட்டு வழியால் போகிறான். அவனிடம் இருக்கின்ற பொருள் புனிதம் நிறைந்த ஆத்ம ஞானம். அதை அந்த மூன்று திருடர்களும் வழிப்பறி செய் கிறார்கள். தாமோகுணம்தான் முதல் திருடன். அது அவனை முழுமையாக அழித்துவிட முயற்சிக்கிறது. இராஜோ குணம் ஒருத்தனை லௌகீகத்தில் பிணைக்கிறது. அதனால் ஆசைகள் வளர்கிறது. பந்தங்கள் என்கின்ற சங்கிலியால் அவனைக் கட்டுகிறது. இந்த மூன்று திருடர்களும் எமக்குள்ளேயே இருக்கிறார்கள்.

சாத்துவ குணம் உலக பந்தங்களில் இருந்தும் இராஜோத குணங்களின் கொடுமையான உடும்புப் பிடிகளில் இருந்தும் ஒருத்தனைக் காப்பாற்றுகிறது. இருந்தாலும் சாத்துவ குணமும் ஒரு திருடன்தான்.

அதுவே எம்மைக் கடவுளிடம் அழைத்துக் கொண்டு போய்விடாது. ''அதோ பார் உன்னுடைய வீடு; போய்ச் சேர்'' என்று கூறிவிட்டுப் போய்விடும். சாத்துவ குணம் உயர்ந்தது தான் இருந்தாலும் அதைவிடப் பெரிய நிலையொன்று உண்டு. அது இறைமையாகவே ஆகிவிடுகின்ற ஞானியின் நிலை. மூன்று குணங்களையும் கடந்து போனால்தான் ஒருத்தன் பிரம்ம ஞானத்தை அடைய முடியும். இதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணரு டைய கருத்து.

இதை அடிப்படையாக வைத்து நாம் எந்த நிலையில் இருந்திருக்கிறோம் என்று யோசித்துப் பாருங்கள்.

**கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## கூட்டமைப்பு எந்த வழியில் செல்லும்

கடந்த 22, 23 ஆம் திகதி உதயன் நாளி தழில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா. சம்பந்தன் செவ்வி வெளிவந்துள் ளது. இச்செவ்வியில் அரசுடனும் வெளிநாடு களிலும் மேற்கொண்ட பேச்சுகளின் விவரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இந்தப் பேச்சுக்களின் பெறுபேறு எதுவும் இதுவரை வெளிப்படவில்லை. பயங்கரவாதம் எனும் முத்திரை குத்தி பல நாடுகளின் உதவியுடன் தமிழ் மக்களை அழித்த மமதையுடனேயே இன்றும் அரசு செயற்பட்டு வருகிறது.

இவ்வின அழிப்புக்குத் துணை நின்ற எந்த ஒரு நாடும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நியாயமான தீர்வு எதனையும் முன்வைப்பதாக இல்லை. இந்த நிலையில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் சர்வாதிகார வழியிலேயே செல்கின்றன.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் எதுவும் வழங்க முடியாது. அத் துடன் ஓர் இராணுவ முகாமைக் கூட முடப் போவதில்லை என்று உறுதிப்பட ஜனாதிபதி கூறியுள்ளார்.

மறுபக்கம் எம் உறவுகளின் ஒரு பகுதி யினர் முட்கம்பி முகாம்களுக்குள் முடக்கப் பட்டு துன்புறுகிறார்கள். மீள் குடியமர்வு செய்யப்பட்டவர்களின் துன்பம் சொல்லி மாளாது. இந்த இலட்சணத்தில்தான் வடக் கின் வசந்தம் கிழக்கின் உதயம் என்று கொக் கரிக்கிறார்கள்.

எம்முன் உள்ள கேள்வி கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் கடைப்பிடித்த வழியில் கூட்டமைப்பும் செல்லுமா? வேறு மாற்றத்தில் செல்ல சிந்திக்குமா என்பது தான்.

யே.தமிழ்க்குரல்

## மாணவரைச் சமூகம் தட்டிக் கேளாதா?

பரந்தனில் அரச படையினர் பஸ் சார தியையும், நடத்துனரையும் தாக்கிய செய் தியும், பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒரு வர் சக மாணவர்களால் தாக்கப்பட்ட செய்தி யும்,பத்திரிகையில் அருகருகாக வெளியிடப் பட்டுள்ளன.

அரச படையினரின் தாக்குதல் நியாய மற்றதாயினும் தனது இனத்தவ னுக்காக மற்ற இனத்தவனைத் தாக்கினர் என்று கூறப் படலாம். பல்கலைக்கழகத்தில் இந்த மாண வரும் இதற்குச் சில நாள்களுக்கு முன்னர் செவிப்பறை கிழிந்து போகுமளவுக்கு இன் னொரு மாணவர் தாக்கப்பட்டத்துக்கும் காரண மென்ன? இந்தத் தாக்குதலில் மாணவியொரு வரும் சம்பந்தப்படுகிறார்.

இந்த மாணவரைச் சமூகம் ஏன் தட்டிக் கேட் பதில்லை. இந்த மாணவர்கள் ஒரு பட்டத் தைத் தூக்கிக் கொண்டு நாளைக்குச் சமூகத்தை நடத்த வருவார்கள். இவர்களின் வழி நடத்தல் எப்படி இருக்கும்?

- உதயன் வாசகன்

## கோவளம் வீதியைப் புனரமைப்பார்களா?

காரைநகர் மேற்கு வீதியில் ஆலடிச்சந்தி யிலிருந்து ஆயிலி ஊடாக கோவளம் கலங் கரை விளக்கு வரை காரைநகர் கோவளம் வீதி நீண்டு செல்கிறது.

இந்த வீதி 1991ஆம் ஆண்டு இடப் பெயர்வுக்கு முன்னர் கூடுதலான மக்களின் பாவனையில் இருந்த வீதியாகும். இந்த வீதி கடந்த முப்பது வருடமாக எந்த விதமான திருத்தமும் செய்யப்படாமல் மோசமாக அழிவடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியால் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இப் பிரதேச மக்கள் இந்த வீதியைத் திருத்தும் படி நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், அதி காரிகளிடமும் முறையிட்டும் எந்தவிதமான பயனும் இதுவரை கிடைக்கவில்லை.

தற்போது பெய்த மழையினால் பெரு மளவு வெள்ளம் வீதியில் தேங்கியுள்ளது. இதன் காரணமாக '' வள்ளத்தில் பயணிக் கலாமோ''என்ற உணர்வு இப்பகுதி மக் களிடம் ஏற்பட்டுள்ளது.

இவ்வீதியிலிருந்து முல்லைப் பிலவுக்கு செல்லும் சிறிய வீதியும் புனரமைக்கப்படா மையால் நீர் வழிந்தோட முடியாமல் மெலிஞ் சியோடையில் பெருமளவு வெள்ளம் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப் பதால் போக்குவரத்துச் செய்யமுடியாமலும் உள்ளது.

இவ்வீதியைத் திருத்துவதற்கு உரிய தரப் பினர் நடவடிக்கை எடுத்து இப்பகுதி மக்க ளின் நீண்ட நாள் குறையை தீர்ப்பார்கள் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

-கோவளத்து கோவிந்தன்-

## தடம் மாறிச் செல்லும் பஸ் சேவை

பருத்தித்துறையிலிருந்து வரணி வேம்பி ராய் ஊடாகச் செல்லும் 754 பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சாவகச்சேரி, நுணாவில் மட்டுவில் கனகம்புளியடி வேம் பிராய் ஊடாக இடம்பெற்று வந்தது.

இதனால் இப்பகுதி மக்கள் பயன் பெற்று வந்தனர். 1983 இற்குப் பின்பு இடம்பெற்ற போர்ச் சூழல் காரணமாக இச்சேவை நிறுத் தப்பட்டது. 30 வருடம் கழித்து கடந்த ஜனவரி மாதம் முதல் மீள இச்சேவை ஆரம் பிக்கப்பட்டது. ஆனால் இந்தச் சேவை சாவ கச்சேரியில் இருந்து டச்சு வீதி முதலாம் கட்டை, மீசாலை மந்துவில் ஊடாக இந்தச் சேவை நடைபெற்று வருகிறது.

இதனால் நுணாவில், கனகம்புளியடி, மட்டுவில் மக்கள் பெரிதும் பாதிப்படைந் துள்ளனர். அதுமட்டுமல்ல டச்சு வீதியூடாக சென்ற பஸ் பின்பு நுணாவில் கனகம் புளியடி ஊடாக வேம்பிராய் சென்று சேவை நடத்தப்பட்டது. மீண்டும் டச்சு வீதி ஊடாக இந்தச் சேவை நடைபெறுகிறது. இப்படி எங்களை ஏமாற்றலாமா? இது நியாயமா எனக் கேட்கின்றோம்.

இதனால் நுணாவில் கனகம்புளியடியில் இருந்து வரணி மந்துவில் பகுதிக்குச் வேலை நிமிர்த்தம் செல்லும் மக்கள், மாணவர்கள் , பயணிகள் ஏமாற்றம் அடைகின்றனர். இதன் மர்மம் என்ன? ஏன் இப்படி ஏமாற்றுகிறீர்கள்?

மீசாலை டச்சு வீதியில் போதியளவு பயணிகள் இல்லாததால் இந்தச் சேவையை அடிக்கடி நிறுத்தவும் செய்கிறார்கள். 754 ஆம் இலக்க பஸ் சேவை நடைபெறுமா? அல்லது ஏமாற்றுவார்களா? இதற்கு வாசகர் திருமுகம் ஊடாக இந்த மர்மத்துக்கு அதி காரிகள் பதில் கூற மாட்டார்களா?

நுணாவில் மட்டுவில் மக்கள் சார்பாக,
-சாந்தநாயகி.

## மானிப்பாய் செல்லும் வீதியின் அவலநிலை

சங்குவேலியிலிருந்து மானிப்பாய்க்கு செல்லும் வீதி பல வருட காலமாக திருத்தப் படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படு வதால் பொது மக்கள் போக்குவரத்தில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த 2010 டிசெம்பரில் கட்டுடைப் பாலம் திருத்தும் பணியை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டமையால் யாழி லிருந்து சண்டிலிப்பாய், சங்கானை, சித்தங் கேணி, பண்டத்தரிப்பு, மாதகல், காரைநகர் செல்லும் அனைத்து வாகனங்களும் டச்சு வீதியூடாக சங்குவேலி வீதியை பயன்படுத் தியே மானிப்பாயூடாக போக்குவரத்தை மேற்கொண்டன. இதன் காரணமாக ஏற்கனவே அசாதாரணமாக காணப்பட்ட இந்த வீதி குண்டும் குழியுமாக மாறி ஒரு வருட காலமாக பல விபத்துக்களை சந்தித்து வருகின்றது.

தற்போது வீதிகள் முக்கியத்துவப்படுத் தப்பட்டுத் திருத்தப்பட்டு வரும் நிலையில் இந்த வீதிக்கும் முக்கியம் கொடுப்பார்களா.

ச.சோபனா, சங்குவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 டிசெம்பர் 2011 சனிக்கிழமை

# பெண்ணின் முக அமைப்பை 'மேக்-அப்' மாற்றி அமைக்கும்



அழகுக் கலையில் முக்கிய இடத்தை வகிப்பது முகத்துக்கு 'மேக்-அப்' செய்வதாகும். நவீன மேக்கப் என்பது நிச்சயமாக ஒரு கலையாகும். இந்தக் கலையினால் எந்த ஒரு பெண்ணினது முகத்தையும் மாற்றி அமைத்து விட முடியும். அத்துடன் ஒரு குறிப்பிடத்தக்க தோற்றத்தையும் (personality) இந்தக் கலையினால் பெற்று விட முடியும்.

'மேக் -அப்' கலை தற்காலத்தில் மிகவும் நவீன முறையில் செய்யப்படுகின்றது. அதாவது முன்னைய காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மேக் அப் முறைகள் முற்றிலும் மாறுபட்டு புதிய தொழிநுட்பங்களைக் கொண்டு செய்யப்படுகின்றது. உதாரணமாக Air brush make up தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட புதிய make up முறை ஆகும். ஆனாலும் இந்த 'மேக் அப்' முறை இன்னமும் எமது பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. காரணம் இந்த 'மேக் அப்'பிற்குரிய வசதிகள் இன்னமும் எமது பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப்படவில்லை அதாவது குளிரூட்டப்பட்ட திருமண மண்டபங்கள் மிகக் குறைவு. மற்றும் அதிக வெப்பம் காரணமாக வியர்த்தலும் ஒரு காரணமாகும். அதனால் மணப்பெண்களுக்கு கால்நிலைக்கும் வசதிகளுக்கும் ஏற்றவாறு 'மேக் அப்'களை தெரிவு செய்கின்றோம்.

முக்கியமாக வண்ணங்களைப் பற்றிய அறிவுதான் இதன் அடிப்படைத் திறமை ஆகும். அவரவர் சருமநிறங்களுக்கேற்ற வண்ணங்களிலும் அவரவரது முகத்தோற்றத்துக்கு ஏற்ற வகையிலும் மேக் அப் போடுவதே சிறந்த முறையாகும். இதுவும் ஒரு விஞ்ஞான முறையாகும். இன்றைய இந்த நாகரிக உலகில் இப்பொழுதும் சிலர் மேக் அப்பை விரும்பாது இருக்கின்றனர். ஆனால் பெண்கள் தங்கள் முகத்தை சிறிது மேக் அப் போட்டு அழகு செய்வதில் எந்தத் தவறுமில்லை. முறையாகச் செய்யும் ஒரு சிறிய சாதாரண மேக் அப் பெண்களின் முகத்துக்கு அழகையும் கவர்ச்சியையும் கொடுக்கும். முக்கியமாக தொழில் பார்க்கும் பெண்கள் நிச்சயமாக தங்கள் முகத்தில் கவனம் செலுத்த வேண்டும். நாளாந்தம்



*அழகுக்கலையில் 24 வருடங்களுக்கு மேலாக மிளிர்ந்துவரும் திருமதி யோகினி சண்முகநாதன் தனது அழகுக் கலை தொடர்பாகவும் அதனால் ஏற்படும் சிறப்புகள் பற்றியும் உதயன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். அமெரிக்காவைச் சேர்ந்த INTERNATIONAL UNIVERSITY FOR MARTIAL ARTS ஆல் இவரது அழகுக்கலை நிபுணத்துவத்துக்காக கடந்த 2006.11.22 அன்று கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து இவருக்கான இந்தக் கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

வேலைக்கு சென்று வரும் போது கறுத்துப்போகும் சருமத்தைக் கவனிக்காமல் விட்டால் அவர்களது சருமத்தின் அழகு கெட்டு விடுகின்றது. இது வேலைக்குச் சென்று வரும் எல்லாப் பெண்களும் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஆகும். முக்கியமாக நாளாந்தம் மக்களுடன் தொடர்புகொள்ளும் தொழில் பார்க்கும் பெண்களாக இருந்தால் மிக முக்கியமாக அவர்கள் தங்களது அழகைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் தங்கள் உருவழித்தோற்றத்தை (Appearance) மிகவும் கவர்ச்சியாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் இவர்கள் அன்றாடம் தமது அலுவல்களுக்கு இடையே தமக்கென்று ஒரு 15 நிமிடங்களாவது ஒதுக்கினால் போதுமானது. இந்தச் சில நிமிடங்களில் தங்கள் அழகை பாதுகாத்துக் கொள்வதில் கவனம் செலுத்தலாம். இவர்கள் முகத்தில் ஒரு சிறிய மேக் அப் போட்டுகொள்வதால் தங்கள் முகத்தை கவர்ச்சியுடனும் ஒரு குறிப்பிடத்தக்க அழகுடனும் (Personality) மக்கள் மத்தியில் திகழ முடியும்.

தொடர்ந்து மேக் அப் பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்களுடன் உங்களுடன் தொடர்புகொள்கின்றேன்

# குளிர்கால சருமப் பராமரிப்பு



*கூடும் பனிக்காலமாக இருந்தாலும் வெளியில் கொட்டுகின்ற மழையாலும் நமது உடல் உஷ்ணமாக இருக்கும். கொழுப்புச்சத்து குறைவாக இருக்கும். சருமம் நீர்ச்சத்தை தக்க வைக்க முடியாததால் தோல் வரண்டு விடும். இதனால் தோல் சொர சொரப்பாகி வாயைச் சுற்றியுள்ள பகுதியில் வரண்டதுபோல் உணர்வு ஏற்ப டும்.

இதற்கு உதட்டுக்கு வஸ்லின் அல்லது கிளிசரின் பாவிக்கலாம்.

*நான்கு பாதாம் பருப்புக்களைச் சிறிதளவு பச்சைப்பாலில் ஊற வைத்து அரைக்கவும். இதை முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊறவைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும். வாரம் 3 அல்லது 4 முறை இவ்வாறு செய்தல் வேண்டும்.

*தேங்காய் எண்ணெய்யை லேசாக சூடு காட்டி முகத்தில் தேய்த்து 10 நிமிடங்கள் ஊறவைத்து பின் கடலைமா அல்லது பயற்றம் மாவினால் லேசாகத் தேய்த்து இளஞ்சூடான நீரில் கழுவவும்.

*வாழைப்பழம் (கதலி) மசித்து சிறிது தேன் கலந்து 5 நிமிடங்கள் மசாஜ் செய்து பின் கழுவினால் சருமம் பொலிவுடன் இருக்கும்.

பால் 2 தேக்கரண்டி, தேன் 1 தேக்கரண்டி இரண்டையும் கலந்து அதற்குள் 1 பேரீச்சம் பழத்தை ஊறவைத்து அரைக்கவும்.

இந்தக் கலவையை முகம் கழுத்து பகுதிகளில் பூசி30 நிமிடங்கள் ஊறவைத்து கழுவவும். ஒரே நாளில் இரண்டு முறையாவது முகத்தில் நீரை அடித்துக் கழுவுதல் வேண்டும். மூக்கு, வாய், வாயைச் சுற்றிக் கறுப்பாக இருக்கும் பகு திகளில் மொயிஸ்ரரயிஸ் கிறீம் அல்லது லோசன் பாவித்தல் வேண்டும்.

தொகுப்பு:
யசோதரன் அபிரா

# கன்னம்

பெண்களின் கன்னங்களை பட்டு றோஜா என்று வர்ணிப்பார்கள். அந்த அழகான கன்னங்களுக்கு அவ்வப்போது அச்சுறுத்தலாகத் தோன்றுவது முகப் பருக்கள். இவைகள் வராமல் தடுப்பதற்கு பொடுகுத் தொல்லை, மலச்சிக்கல், ஓமோன் பிரச்சினை, முறை அற்ற உணவுப் பழக்கம். உணவில் அதிகளவு எண்ணெய் பயன்படுத்துதல் போன்றவை இல்லாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். முகப் பருக்கள் வராமல் தடுப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். எளிதில் ஜீரணமாகக் கூடிய மென்மையான உணவுகளை உட்கொள்ளுதல் வேண்டும். பழங்கள், காய்கறிகள், கீரை வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். தண்ணீர் நிறையப் பருக வேண்டும். முகத்தில் எண்ணெய் வழியாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். பொடுகுத் தொல்லை இருந்தால் முறையான சிகிச்சை எடுத்து அதனைக் கட்டுப்படுத்தல் வேண்டும். அவ்வப்போது வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவுதல் வேண்டும். முகத்தில் பருக்கள் தோன்றிய அடையாளம் தழும்புகள் இருந்தால் ஐஸ் கட்டிகளை ஒரு நாளைக்கு பத்து பதினைந்து தடவைகள் தழும்புகள் மீது வைத்து ஒத்தடம் போல் கொடுத்தால் சருமத் துவாரங்கள் மூடும். வேப்பிலை கிருமி நாசினியாகத் தொழிற்படுவதால் கொழுந்து வேப்பிலையைத் தண்ணீர் சேர்த்து அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து கழுவி விடுதல் வேண்டும். சந்தனப் பவுடரை பன்னீரில் குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து கழுவி விடுதல் வேண்டும இப்படியாக மூன்று மாதங்கள் கிழமைக்கு மூன்று தடவை செய்து வந்தால் பருத்தொல்லை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org